# கலைமுகம்


கனடாச் சிறப்பிதழ்

காலாண்டுக் கலை இலக்கிய இதழ்

சித்திரை - ஆனி 1996



# வடபுலத்து யாழ்!




IV

வடபுலத்து நல்யாழே! நீரூற்றினுக்கு நிழலளிக்கும் இம் மரக்கிளைமீது நெடிது தங்கினை இலையொலியும் அருவிநீரொலியும் இசையியம்ப, நின்னரம்புகள் இசையின்றித் துயிலுதல் முறையாகுமா? முன்னாளிலே வீசுகின்ற காற்றிலே இசையமிழ்தத்தை உகுத்தனையே, நின்பாற் பொறாமையுற்ற பசுங்கொடி படர்ந்து நின் நரம்புகளை ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டமையினாலே பேசாதிருக்கின்றனையா? வீரர் முகத்திலே புன்னகை தவழவும், அரிவையர் நாட்டங்களிலிருந்து உவகைக் கண்ணீர் கீலுழவும் நினது இனிய குரலினாலே பேசலாகாதா?

முன்னாளிலே, கலிடோனியாவிலே, விழாக்கொண்டாடுவோர் மத்தியிலே, நீ மௌனஞ் சாதித்ததில்லையே. காதலையும் வெற்றியையும் பாடி அச்சத்தையும் பெருமிதத்தையும் அளவுபடுத்தினையே, நினது இசைகேட்டுருகும் வண்ணம் காவலரும் நாரிகைநல்லாரும் சூழ்ந்து நின்றனரன்றோ? வீரரது தீரச் செயலும், காரிகையாரது ஒப்பற்ற கண்ணிணைகளுமே நினது பாடற்பொருளாக அமைந்தன.

நல்யாழே! துயிலொழிந்தெழுவாயாக. நினது நரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனினும், செழிய பழம்பாடல்களின் இன்னொலியினை ஓரளவிற்காவது இசைத்தலாகாதா? நின் இசைக்குருகி ஓர் இதயமாவது துடிப்புறு மெனின், நின்செயல் வீண்செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவாதிருத்தல் தகுதி அன்று சித்தத்தைக் கவரும் வனமோகினியே! எழுந்திரு, இன்னும் ஒரு முறை எழுந்திரு!

மூலம்- *வோல்டர் ஸ்கொட்*

தமிழ்- *விபுலானந்த அடிகள்*

# கலைமுகம்

# KALAIMUGAM

காலாண்டு இதழ்

1996

சித்திரை - ஆனி

கலை - 7

முகம் - 2

Canada Edition

Centre For Performing Arts
2175 Victoria Park Ave, #201
Scarborough, Ontario
M1R 1V6
Canada

வெளியீடு

திருமறைக் கலாமன்றம்
238 பிரதான வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை

## வணக்கம்

இன்று நமது மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள், கதறி அழுகிறார்கள், பசியால் வாடுகிறார்கள், பட்டினியால் விழுகிறார்கள், செந்நீரில் துடிக்கிறார்கள், சிதறி ஓடுகிறார்கள். இக் காட்சியைக் கண்மூடிப் பார்த்துக் பொண்டிருப்பது நாம் வாழும் நாகரிக உலகத்தின் தனி உரிமை, நம்மவருடன் உள்ளார ஒன்றிப்பது தமிழ்த் தனையர் நம் ஒவ்வொருவரினதும் கடமை. அதில் ஒரு விதம் நம்மவரின் துன்பப் படலத்தை இலக்கிய வடிவத்தில் பதிவு செய்வது. அதனால், தாயக மண்ணிலிருந்து நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் ஆக்கங்களை நாம் விம்மும் நெஞ்சுடன் இங்கு வெளியிடுகின்றோம்.

1996ல் "கலைமுகம்" வெவ்வேறு நாடுகளிலும் நகரங்களிலும் முதல் இதழ் லண்டனிலும், இவ்விதழ் ரொறொன்ரோவிலும் அச்சேறுகின்றது. இம் முயற்சி திருமறைக் கலாமன்றத்தின் உலகளாவிய தன்மைக்குச் சான்று பகர்கின்றது. என்பது ஒரு புறம், தாயகத்துக்கலை இலக்கியப் படைப்பாளிகளையும் புலம் பெயர்ந்து வாழும் இத்துறை சார்ந்தோரையும் ஒன்றிணைக்கும் பாலமாகத் திருமறைக் கலாமன்றம் மாறியிருக்கின்றது என்பது மறுபுறம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்க மொழிக்கு இன்று வடிவம் கொடுக்க முனைந்து நிற்கும் திருமறைக் கலாமன்றம் இக் குறிக்கோளை அடைய, தாயகத்துக்கு உள்ளேயும் அதற்கு வெளியேயும் என்றும் உறுதியுடன் உழைக்கும்

நீ. மரிய சேவியர் அடிகள்

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

# கல்வாரிச் சுவடுகள்

யுத்த மேகங்கள் சூழ்ந்த நிலையிலும்
திருமறைக் கலாமன்றம் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களுடன்
ஈழத்தின் பல பகுதிகளில் தன்கலைச் சேவையைத் தொடர்கின்றது
24 - 03 - 1996 மிருசுவில்
31 - 03 - 1996 பருத்தித்துறை

ஜோன்சன் பிறேமானந்
யோன்சன் ராஜ்குமார்
விஜயகுமார்
யேசுதாஸ்
ஜெயகாந்தன்
கென்றிஜெறாட்
பிறேமதாஸ்
சதீஸ்பின்
திருச்செல்வம்
ஞானசீலன்
யூட் அருணா
சிறிசாந்தன்
தாசியஸ் தேவராஜா
ஜோண்சன்
பாலசுப்பிரமணியம்
சாம்பிரதீபன்
துசியந்தி
சைலானி
பூவிழி
அனுஷா
தி. கௌரி
செ. சறோஜினி
கிங்
வசந்தநாயகம்

தைரியநாதன்
அழகராஜா
பிறின்ஸ்
கெனத்மேரியான்
நோபேட்
றொசான்
விஜயரட்ணம்
ஞானறாஜா
தமிழினியன்
இராசேந்திரன்
ஜெலிம் மேரினா
சாள்ஸ்
நிமலராஜா
றோகான் சாள்ஸ்
தர்மதாஸ்
ஜெகன்
நிசாந்சா
யெனிற்றா
கயல்விழி
ஜான்சி
ம. வசந்தி
ஜோ. சுபாசினி
கோபால்
றொகஸ்ரிக்கா

ஜெயசிங்கம்
ரவி
சொலமன் சூ. சிறில்
அமுதராஜா
லெபோன்
டிலீபன்
போல் அமலதாஸ்
கருணாகரன்
யஸ்ரின்
யூலியன்
நிஷாந்தன்
அன்ரனிராஜா
அன்ரனி மக்ஸி
எமில்
ஜெயராஜ்
கிறிசாந்தி
வினோயினி
நிறோயினி
லூமினா
ஜே. ஜெனிஸ்ரலா
பி. ஜோசப்பின்
அ. சகாயராணி
சுதாகரன்
ஸ்ரெலா

பாலச்சந்திரன்
சேவியர்
குணசிங்கம்
பேட்டி பனிஸ்ரர்
சாருமதி யேசுதாசன்
கொலினஸ்
சிறிபாஸ்கரன்
நேமிநாதன்
ராமநாதன்
தனபால்
ஜெகதீஸ்
திரேஸ்லதாங்கி
அன்றூ
யுடொக்சியா
யெங்கின்ஸ்
இக்னேசியஸ் பிரபா
நவீந்திரன்
கிளபோடாசியஸ்
அருமன்
ராஜ்குமார்
யசிந்தன்
ஜெயரவி
அன்ரன்

கோரஸ் - சென்நீக்கிலஸ் ஆலய பாடகர் குழாம் மிருசுவில்
ஆடை அமைப்பு - பேர்மினஸ்
ஒலி, ஒளி இயக்கம் - றோஸ் ஆட்ஸ் யோசப்
இசையமைப்பு - இசைத்தென்றல் யேசுதாசன்
பொதுநிர்வாகம் - அருட்திரு ஜெறோ செல்வநாயகம்
எழுத்துருவாக்கம் - அழகராசா, அல்பிரட், கெனத்மேரியான், யோண்சன் ராஜ்குமார்

உரை - அல்பிரட்
ஒப்பனை - பேக்மன் ஜெயராசா
மேடை அமைப்பு - யோசப்
மேடைநிர்வாகம் - நெல்சன்
மூலப்பிரதி - அருட்திரு நீ. மரியசேவியர் அடிகள்
நாடக மேற்பார்வை - அருட்திரு சூசைநாதன் அடிகள்
நெறியாள்கை - பேர்மினஸ்

தயாரிப்பு - திருமறைக் கலாமன்றம்

# சிதறிய மந்தைகள் இணைந்த வேளையில்

துன்பக் கரங்களை படிய வைத்த அந்த 30-10-95இல் சிதறிய மந்தைகள் மீண்டும் தம் சந்திப்புக்களை உறுதிசெய்து கொள்கின்றன.

இடப் பெயர்வின் பின் திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் முதன் முதலாக 04-02-96இல் ஒன்றாக சந்தித்தனர். அனுபவங்கள் பகிரப்பட்டன, அன்பு நெஞ்சங்களின் குமுறல்கள் பரிமாறப்பட்டன.

03-03-96இல் மீண்டும் இரண்டாவது முறையாக ஒன்று கூடிய பொழுது திருமறைக் கலாமன்ற அலுவலகம் மிருசுவிலில் திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழாவிலும் ஒன்று கூடலிலும் கணிசமான அளவு பழைய புதிய உறுப்பினர்கள் பல மைல் தொலைவில் இருந்து துவிச்சக்கர வண்டிகளிலும், பேருந்துகளிலும், வன்னி பெருநிலப்பரப்பில் இருந்து கடல் கடந்து வந்தும் கலந்து கொண்டமை அன்றைய மகிழ்விற்கு எல்லைபோட முடியாத நிலையை ஏற்படுத்தியது.

அன்றைய தினம் மிருசுவில் புனித நிக்லஸ் ஆலயத்தில் நடைபெற்ற பஜனை வழிபாட்டை தொடர்ந்து மதியம் 12.00 மணிக்கு மன்ற புதிய அமைவிடம் சிறப்பு விருந்தினரான அருட் தந்தை பீற்றர் துரைரட்னம் (மிருசுவில் நிக்லஸ் ஆலய பங்குத் தந்தை) அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது. தூயஆவியின் பாடலோடு ஆரம்பித்த இந்த நிகழ்விற்கு அருட் சகோதரி வின்சென்ட் அவர்களும் திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறு ப்பினர்களான ஜே. ஜோன்சன் ராஜ்குமார்,

என். எஸ். ஜெயசிங்கம், எம். தைரியநாதன் ஆகியோரும் மங்கள விளக்கேற்றி சிறப்பித்தனர். நிகழ்விற்கு தலைமை தாங்கிய மன்ற ஆலோசகர் அருட் தந்தை சூசைநாதன் அடிகளாரால் புதிய அமைவிடம் ஆசீர்வதிக்கப் பட்டதைத் தொடர்ந்து மன்றத்தின் கௌரவ செயலாளர் திரு. உ.அ. நெல்சன் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப் பட்டது. தொடர்ந்து அருட் தந்தை ய. சூசைந-ாதன் அடிகளாரின் தலைமை உரையில் எமதுமன்றம் சிதைக்கப் பட்டதே தவிர அழிக்கப்பட்ட வில்லை. எனவே சிதைந்த துண்டுகளான நாம் மீண்டும் ஒட்டப்பட்டு இணைந்து செயற் பட வேண்டும். எனக் கூறியமை குறிப்பிட த்தக்கது. இதனைத் தொடர்ந்து மன்றத்தின் அடுத்த செயற்பாடாக நடை பெறவுள்ள திருப்பாடுகளின் காட்சிகள் அடங்கிய நாடகப் பிரதியை அருட் தந்தை சூசைநாதன் அடிகளார் வழங்க மன்ற நாடகக் பிரிவு பொறுப்பாளரும், மேற்படி நாடக நெறியாளருமான திரு. ப. க்ஷ. பேர்மினஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார். பிரதி வழங்கிய நிகழ்வைத் தொடர்ந்து நாடக நெறியாளர் உரையும், பின்னர் நாடகக் பயிலகப் பொறுப்பாளர் திரு. ஜே. ஜோண்சன் ராஜ்குமார் அவர்களது நன்றியுரையும் இடம் பெற்றது.

சிறிது கால இடை வெளியின்பின் மீண்டும் துளிர்விடும் திருமன்றக் கலாமன்ற செயற்பாடுகள் நிச்சயம் கலை உலகில் உயிர் வாழ தம்மை முழுமையாக அர்ப்பணித்தபடி அங்கத்தவர்கள் மகிழ்ந்திருக்க அன்றைய நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

## பயந்து அல்ல

ஓ! இயற்கையை
மரணதேவதையே
நீ
எங்கே இருக்கிறாய்?
உன்னை நினைத்து
நான்
உள்ளஞ்சி உறைந்தபோது
நீ, அக்களித்தாய்
ஆனந்தித்தாடினாய்
ஆனால்
உன்னை
நான்
நேருக்குநேர்
சந்திக்கத்துணிந்தபோது
நீயும்
ஒளிந்துகொண்டனையோ?

ஓ மரணதேவதையே!
காதைக்கொடு
நான்
தலைமறைவாகவில்லை
என்
வாழ்க்கையே
தலைமறைவாகிவிட்டது
இருந்தும்
நீ
இன்னமும்
என்னை
தேடுகிறாயாமே?
எலி
பொறியில் பிடிபடலாம்
ஆனால்
அதன்
இருத்தலுக்கான
இரைதேடும்
இயக்கத்தைத்தடுக்க
யாரால் முடியும்?
ஓ! மரணதேவதையே
நானும்
ஒளிந்திருக்கிறேன்
பயந்து அல்ல
பார்த்துக் கொண்டு.

................இன்பராஜன்

# தேவதைகள் எங்கும் உள்

அழகுக்கோன்

Angels in America நாடகம் அண்மையில் நியூயோர்க்கில் Broadway மண்டபத்தில் நடந்தது. புலிற்சர் பரிசு பெற்ற நாடகம். அது AIDS நோய் பற்றியதோ நன்றியுணர்வு பற்றியதோ, வஞ்சனை பற்றியதோ அல்ல. இருந்தும் அவை அனைத்தும் அதில் உள. மாறாக வட அமெரிக்க முரண்பாடுகளின் இயல்பு பற்றியது.

இந்த நாடகத்தின் மையக் கருத்து வெளிப்படை, ஒவ்வொருவரும் போட்டி போடுவது தங்கள் இலட்சியங் களையும் கொள்கைகளையும் பாதுகாத்து கொள்ளவல்ல அதிகாரத்தை கைப்பற்று வதற்கே. சுயநலங்களைப் பாதுகாக்கவே இந்த நாடகத்தின் மையக்கருத்து மூன்று சிறிய உரைகளில் வெளி வருகிறது. முதலாவது ராபை இரண்டாவது யதார்த்த வாழ்க்கைப் பாத்திரமான றோய் கொகனுடையது மூன்றாவது லூயிஸ். இவனுடைய காதலன் எயிட்ஸ் நோயினால் இறந்து கொண்டிருக்கிறான்.

அமெரிக்காவில் உலக நாடுகள் அனைத்திலிருந்தும் குடியேறி யவர்கள் வாழுகிறார்கள். அவர்களின் கலாச் சாரங்கள் ஒன்று கலந்து அமெரிக்க கலாச் சாரமாக உருகிக் கலந்துவிடும்பானை (Melting Pot) என்பர். உண்மை அதுவல்ல வெளிநாட்டவரின் கலாச்சாரம் இன்னும் வெளிநாட்டிலே இருக்கின்றது அமெரிக்கர் இன்னும் வெளிநாட்டவர் களாகவே இருக்கிறார்கள் என்றார் ராபை. அமெரிக்காவில் நீ வாழவில்லை அப்படி ஓர் இடம் இல்லை உங்கள் பெறுமதிகளை அங்கே நீங்கள் பகிர்ந்து கொள்வதில்லை. மாறாக அப்பெறு மதிகள் அங்கு பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறீர்கள். அதாவது போதுமான அதிகாரங்களைப் பெற்று உங்களை காப்பாற்றிக் கொள்கிறீர்கள். என்கிறார் றோய் கொகினும் தன தூஷண வார்த்தை கள் கொண்ட இறுதிப் பேச்சில் அமெரிக்கா மக்களின் பிரச்சினை தங்களை அடையாளம் காண்பதல்ல. பெறுமதிகள் ரசனைகள் நம்பிக்கைகள் எவை என்பதைச் கண்டுபிடிப்பதல்ல. மாறாக அதிகாரத்தைப் பெறுவது தான்.

ஹவன்றி உன்னுடைய பிரச்சினை லேபல் சொற்கள் ஆகியவற்றின் அர்த்தங்களை அப்படியே நம்பிவிடுவது எயிட்ஸ், ஆண்சுய பாலுறவுக்காரர், பெண் சுயபாலுறவுக்காரர்.... அவை எல்லா லேபல்களைப் போல ஒன்றை மட்டுமே சொல்கின்றன. பலம் நான் யாரை ஓ தவன் என்னை யார் ஓ...... தவன் என்பதல்ல. நான் ரெலிபோன் செய்யும் போது யார் தூக்கிறார் கள் யார் எனக்கு உதவுகிறார்கள் அதுதான் லேபல் குறிப்பிடும் அர்த்தம்

நான் சுயபால் உறவுக்காரன் ஏன்.? நான் ஆண்களுடன் பாலுறவு கொள்பவன் புரியாதவர்கள் கூறுவது இதைத்தான் உண்மை அதுவல்ல. 15 வருசமாக நகர சபையில் பேதங்களை நீக்குவதற்கான சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அவர்களுக்கு அதிகாரம் கையிலிருப்பவர் களைத் தெரியாது. அவர்களுக்கு அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பது தெரியாது. அவர்களுக்கு அதிகாரம் யயார்கையில் இருக்கின்றது என்பது தெரியாது. அதனால் பலம் துஞ்சற அற்றவர்கள். அதுதான் உண்மை என்றான் கேர்கான் அதனால் தான் தன்னை எதிர்பாலுறவு கொள்பவன் என்கிறான் அதனால் அதிக அரசியல் அதிகாரம் தனக்கு இருக்கிறது. உண்மையில் அவன் சுயபாலுறவுக்காரன் அது அர்த்த முள்ளதாகவும் தெரிகிறது.

இறுதியாக லூயிஸ், அதிகார அரங்கில் இனத்தின் இடம் எது என்கிறான் உண்மையில் இனங்களல்ல எம்மை வேறுபடுத்துவது. அரசியல் அரசியல்வாதிகள் இனத்தை ஒரு கருவியாகக் உபயோகிக்கிறார்கள். ஆத்மீகவாதிகள் நீங்கள் பக்குவம் அடைந்தவர்களா என்று கேட்பதைப் போல, இந்த நாட்டில் கடவுள் இல்லை இந்த நாட்டில் பூர்விகக் குடிகளிடம் இருந்த கடவுளையும் கொனறு விட்டோம் ஆவிகள் கூட இல்லை. தேவதைகளும் இல்லை. முன்னைய ஆத்மீகமும் இல்லை முன்னைய இனமும் இல்லை. அரசியல் மட்டும் தான் உள்ளது.

இந்த உரைகள் அனைத்தையும் திரட்டி நோக்கும் போது எமக்குகிடைக்கும் உண்மை அமெரிக்காவுக்குப் பொது மையம் என்ற ஒன்று இல்லை. வேறு வேறான தனி மனிதாகளையும் குழுக்ளையும் கொண்ட நாடு போட்டிபோடும் நலங்களை கொண்டவர்கள் வாழும் இடத்தில் அதிகாரம் தான் செல்லுபடியாகும் ஒரே ஒரு நாணயம். கருத்துக்கள் இலட்சியங்கள் ஒழுக்க விழுமியங்கள் விருப்புகள் காரணங்கள் அனைத்தும் லாபம் அடைவதற்கான பொய்முகங்களே.

இலங்கையில் மட்டும் என்ன? இனவாதம் பெறுவதற்கான முகப்பு, தமிழ் நாட்டில் தமிழர்களுக்கு அதிகாரம் கிடைத்தபின் தமிழ் இனம் கொடிகட்டியா பறக்கின்றது. கட்சிக்காரர்களின் பைகளை நிரப்பும் அதிகாரம் அவர்களுக்கும் குடும்பத்திற்கும் சாதிகாரர்களுக்கும் கிடைத்த சந்தர்ப்பம், இல்லாமல் வேறுஎன்ன? சாதிஎன்ற அமைப்பே அதிகாரத்தை குறுக்குவழியில் கைப்பறறுவதற்குக் கிடைத்த சிறந்த கருவி அல்லவா?

தேவதைகள்
எங்கும்
உள்



லண்டன் (தமிழ் பண்பாடு) கருத்தரங்கில்
கலந்துகொண்ட கலைஞர்களுடன் அருள்தந்தை
ராஜன் அடிகளார்



லண்டன் நிகழ்ச்சிக்கு உதவிசெய்த இசைக்
கலைஞர் இர்பான்



"அனைத்தும் அவரே"
இம்மானுவேல்



லண்டன்
"அனைத்தும் அவரே" நாட்டுக் கூத்தில்
ஒரு காட்சி




லண்டனில் நடந்த
செம்மண் நாடகத்தில்
ஒரு காட்சி




சென்ற ஆண்டு சுவிற்சர்லாந்தில் திருமறைக்
கலாமன்றம் ஆரம்பிக்கப் பட்டபோது
10.09.1995









கனடா திருமறைக்
கலாமன்றத்தினரால் நடத்தப்பட்ட
"பலிக்களம்" காட்சிகள்



# ஓர் புதிய மாபெரும் புறப்பாடு

யோ. யோன்சன் ராஜ்குமார்

ஈழத்தமிழர் வரலாற்றில் 1995 அக்டோபர் 30 ஓர் வரையப்பட்ட தழும்பு. அந்த நாளின் சோக நெருப்பு வேர்கள் இதயத்தில் இருந்து அணைய பல நெடுங்காலமாகலாம். பெருநீர் பிரளயம் போல் வலிகாமத்தையே கழுவித்துடைத்து, மானிடரற்ற பிர தேசமாக்கிய பெரும் ஜனப்பிரளயம் அது "மெய்யாகவே பெருந்தொகையாக வீடுகள் குடியிருக்க ஆளின்றிக் கிடக்கும்" (இசை 5:9) என்றவிவிலிய வார்த்தை போல், ஈழத்துமண் தன் குடிகளை இழந்து அனாதையாகிய தினம் நெருப்பாற்றைக் கடப்பது போல் ஒருவழிப்பாதையால் அரைமில்லியன் மக்களும் இதயம் வெடிக்கும் அவலம் சுமந்து உயிர் காவிச் சென்ற மாபெரும் புறப்பாடு அது

அன்றைய காலைப் பொழுதும் எப்போதும்போல் புள்ளினம்பாட, புதுத்தென்றல் வீச, ஆலய மணிகளின் ஆரவார இசையுடன்தான் புலர்ந்தது, ஆனால் தூரத்திலே, யுத்த மிருகத்தின் கொடூர குமுறலும் அதிர்வும் கேட்டுக் கொண்டு தான் இருந்தது மக்களின் மனங்களில் பயம் உறைந்துதான் கிடந்தது, அரைமணிக்கொருதரம் அம்புலன்ஸ் வண்டியின் அலறலும், செந்நீர் சொரிய வைத்தியசாலைக்கு வரும் மனிதங்களும் வந்து கொண்டுதான் இருந்தன. அதற்குள்ளும் பதுங்கும் குழிகள் வெட்டியோரும், பாடசாலைகள் ஆலயங்களில் தஞ்சமடைய நினைத் திருந்தோரும், உணவுப் பொருட்களை சேமிக்க முனைந்து கொண்டிருந்தோரும் என பல்வேறுபட்ட மானிட இயக்கங்களாக இயங்கிக் கொண்டுதான் இருந்தனர். ஆனால் அன்றைய பொழுதுதான் வலிகாமத்தில் தங்கும் கடைசிப் பொழுது என்றுயாரும் கனவு முதலாகக் கண்டிருக்கவில்லை.

ஆமாம் அன்றைய மாலை மக்களின் எண்ண அலைகளில் எதிர்பார்த்துமிராத மனங்களை உறைய வைத்த இடியோசை விழுந்தது. யுத்தப்பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒலிபெருக்கிகள் வீதிவீதியாக முரசறிவித்தன. பதட்டக்காற்று எல்லோர் மனங்களையும் பற்றிக் கொண்டது. சிந்தனைகள் மட்டுப்படுத்தப்பட்டன. தாம் கேள்விப்பட்டதுக்கேற்ப பரிமாறிய கருத்துக்கள் பரிணாமம் பெற்றன. நள்ளிரவுக்குள் நாவற்குளிப்பாலம் கடந்து விடவேண்டுமென்பதே மனக்கண்ணில் நின்றது சிந்தனை பொறுமைக்கு இடங்கொடாத துயரயுத்தம் எல்லா இடங்களிலும், உள்ளங்களிலும் நடந்து கொண்டிருந்தது. எல்லா வீடுகளும் அமர்க்களப்பட்டன. அன்றய பொழுது புலராது இருந்திருக்காது என்றே எண்ணத்தோன்றியது. எதையெடுப்பது? எங்கு செல்வது? எப்படிச்செல்வது? எல்லா வீடுகளுமே அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்தன. முதியவரையும் வலதுகுறைந்தோரையும், நோயாளரையும் வைத்திருந்தோர் வேதனை சொல்லில் அடங்காதவை. கையில் அகப்பட்டதை அடைந்து கொண்டுபுறப்பட்ட மக்களின் இரைச்சல் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருந்தது. சிறு வீதிகள் நிறைந்து பெருவீதிகளில் சங்கமித்துக் கொண்டிருந்தனர். கிளைநதிகள் சேர்ந்து சங்கமித்து, பெருநதியாய் ஓடுவது போல கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் மக்கள் வெள்ளம் வீதியை நிறைத்து நின்றன. மீன் சந்தைபோல் சன இரைச்சல் வானில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. சந்திகள் தோறும் விபத்துக்கள் சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருந்தது. உதவிபுரியாவோ, விபரமறியவோ எவரும் முனையவில்லை. முனைப்புடன் பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தனர் பதட்டமும் பயமும் வேதனையும் வெறுப்பும் மனங்களை ஆட்கொண்டிருந்தன.

தேர்த்திருவிழாவில் முண்டியடிக்கும் மக்கள் போல் சந்தி சாரியாக மக்கள் வெள்ளம் வரலாறு காணா வகையில் படைதிரண்டு கொண்டு இருந்தது. பிரதான வீதிகள் எல்லாம் அடைக்கத்தொடங்கின. தூரங்களைக் கணிப்பிட்டு வேகமாய் சென்றவர் எல்லாம் பிரதான வீதிகளில் கால்வைத்த போதுதான் நிலையை உணர்ந்து கொண்டனர். தொடர்ந்து வாகனங்கள் ஓடமுடியாது உருட்டத்தொடங்கின.

5 1/2 லட்சம் மக்களும் செல்ல வேண்டியது ஒருவழியான கண்டி வீதியால்தானென்பதும் ஒரு இரவில் அரை மில்லியன் மக்களும் செல்லமுடியா என்பதும் நேரம் செல்லத்தான் அனைவருக்கும் புரிந்தது. கச்சேரி தொடக்கம் அரியாலை வரையும் முத்திரைச்சந்தி முதல் செம்மணி வீதி வரையும் நிறைந்து நின்ற சனசமுத்திரம் கண்டி வீதியில் சங்கமித்துக் கொண்டு இருந்தது. இரு வீதிகளின் சங்கமநெரிசலின் பயன் ஆமை வேகத்தில் நகரத் தொடங்கியது. இறுதியில் மணித்தியாலத்துக்கு ஒரு அடி நகர்வதே கடினமாக இருந்தது. லொறிகள், வாகனங்கள், மாட்டுவண்டில்கள், மோட்டார் சைக்கிள்கள் லட்சக்கணக்கான துவிச் சக்கரவண்டிகள் என்று காணப்பட்ட வாகனங்களுடன் இடையில் காற்றுக்கும் இடம் கொடாத நெரிசலில் மக்கள். அவர்களுடன் ஆடுகள், மாடுகள், கோழிகள், நாய்களென சேர்ந்து மணிகணக்காக நின்றுகொண்டிருந்தன. அவை நகரவேயில்லை. கைதடி, சாவகச்சேரி ஈறாக இதே மனித வெள்ளம். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பாரவோனில் அடிமைத்தனத்தில் இருந்து மோயிசனால் மீட்கப்பட்டு இரவோடு இரவாக இடம் பெயர்ந்த இஸ்ராயேல் மக்களின் நினைவு எல்லோர் நினைவிலும் எழுந்தன. ஆனால் அங்கே இறைவன் நெருப்புத் தூணாகவும், மேகத்தூணாகவும்

வழிகாட்டி நின்றார். செங்கடலும் பிரிந்து வழிகொடுத்தது. ஆனால் இங்கே எல்லாம் இருளாய் எதிர்காலமே சூனியமாய் இழப்பதற்கே எதுவுமின்றி வேதனையும் வெறுப்பும் பயமும் உறைந்துகிடந்த உள்ளத்துடன் பயணித்திருந்தனர்.

பொழுது சரிந்து கொண்டிருந்தது அடைத்து நின்ற சனக்கும்பலையும் மீறி நள்ளிரவுக்குள் பயணம்தொடரமுடியாதென உணர்ந்து திரும்ப நினைத்தோருக்கு அதுவும் இயலாத காரியமாகியது. தம்முடன் வந்தோரை, உறவினரை சன வெள்ளத்தில் தவறவிட்டு பொறியில் அகப்பட்டவர் போலாயினர். திரும்பவும் முடியாமல் நிறைத்தும் நின்றது சனக்கும்பல். தவறவிட்டவர்களை அறிய உரத்துக் குரல் கொடுத்தனர். அந்த குரல் ஒலிகளே வீதியெங்கும் நிறைந்ததால் அதுவும் பயனற்றுப்போனது. சிறுவர் முதல் பெரியவர் வரை இளம் பெண்கள் ஈறாக தம்மை மிஞ்சிய பாரச்சுமைகளை சயிக்கிள்களில் கட்டியவாறு அதை நிறுத்தவும் முடியால், இறக்கவும் முடியாமல் கால்விறைக்க காத்து நின்ற காட்சி மனதை உருக்கியது. பொழுதோ இருளத் தொடங்கியது. ஒன்றிரண்டு விளக்கொளிகள் மட்டும் இடைக்கிடையே எரிந்தன. ஏனைய இடமெல்லாம் இருள்மயம். பயணமோ நகரவேயில்லை இன்னும் சனவெள்ளம் சங்கமித்துக் கொண்டே இருந்தது. நேரம் செல்லச் செல்ல குழந்தைகள் சிணுங்கி அழத்தொடங்கின. தோளிலே அவர்களை வைத்திருந்தோர் நிலை மிகப்பரிதாப-கரமாக இருந்தது அழுங்குழந்தைகளை என்னவென்று தேற்றுவதென்ற நிலை சிறிது நேரத்தில் குழந்தைகளின் அழுகை ஒலியே வானில் எழுந்தது. தொடர்ந்து நடந்து களைத்த சிறுவரும் சிணுங்கத் தொடங்கினர். வயோதிபர் நிற்க முடியாமல் தள்ளாடினர். நோயாளிகள் வீதிக்கரை களிலே படுக்கவைக்கப்பட்டனர் வலதுகுறைந்தோர் நிலை அதைவிடப் பரிதாபகரமாக இருந்தது மொத்தத்தில் எல்லா மக்களும் கசக்கிப் பிழியப்பட்டனர் என்றே சொல்லவேண்டும். ஓ.. என்று மார்பிலடித்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். ஒரு மூதாட்டி. முகந் தெரியாத அந்த இருட்டில் பெருமூச்சும் புறுபுறுப்பும் வேதனைக்குரல்களும் நிறைந்துகிடந்தன. களைத்துச் சோர்ந்த பலர் வாகனங்களின்கீழும் வீதிக்கரை களிலும் வெறும் ஈரநிலத்திலும் படுத்துவிட்டனர். சாதாரணமக்கள்முதல் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஈறாக எல்லா மக்களும் அந்த அவலம் சுமந்து நின்றனர் இதயம்கனக்கும் அந்த இரவுப் பயணத்தின் நிலை சொல்ல நிச்சயம் வார்த்தைகளுக்கு வலிமை இல்லை.

தமிழனின் போதாத காலத்துக்கு, இயற்கை கூட அவனை வாட்ட நினைத்ததுபோல் அந்த இரவில் அந்தரித்து நின்ற மக்கள் மேல் வானமும் சொரியத் தொடங்கியது இரவு ஒன்பது மணியளவில் சிறிதாக தூறிய மழை பெரிதாக பெலத்தது மழைக்கு ஒதுங்க இடமுமில்லை வீதியை விட்டு விலகவும் முடியாது குடையும் பாவிக்கமுடியயாது கைகளில் பொருட்கள்சுமை. மக்கள் அங்கலாய்த்தனர். விலகினாலும் வயல் வெள்ளம் தங்களைப்பாதுகாப்பதா, தங்கள் பொருட்களை பாதுகாப்பதா? என்ற நிலை குழந்தைகளை வைத்திருந்தோர் பாதுகாக்க வழியின்றி பதக்களித்தனர். நோயாளரும் வயோதிபரும் நடுங்கி வெட வெடத்தனர். நாவறண்டு போயிருந்த சிலர் குடையை ஏந்தி மழைநீர் அருந்தனர் அந்த மக்கள் வெள்ளம் மந்தைக் கூட்டம் போல் வேதனை சுமந்த காட்சி நினைத்தால் நெஞ்சில் இரத்தம் கசிய வைக்கும் கால்கள் விறைக்கத்தொடங்கின காலை நிலத்தில் உதைந்து பலர் விறைப்பகற்றிக் கொண்டிருந்தனர். உடல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. எல்லோர் வாய்களும் கடவுளே கடவுளே என்றே புலம்பிக்கொண்டிருந்தனர் தந்தை செல்வா அன்று கூறிய இனி தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேணும் என்ற வார்த்தை நிதர்சனமாகிய ஓர் உணர்வு கடவுளின் கருணைதானோ என்னவோ மழை விட்டு விலகியது. கையினில் கொண்டு வந்த எல்லாப் பொருட்களும் நனைந்து விட்டன. தலை துடைக்கவும் துண்டின்றி குழந்தைகள் வெட வெடத்தன அழுது ஓய்ந்து விக்கிக் கொண்டிருந்தன. குளிர் போக்கச் சொட்டுச்சுடு தண்ணீருக்கு அலைந்து கொண்டிருந்தனர் பலர் மழையின் கொடுரம் தணியமுன் அருகில் வந்து வெடித்தன உயிர்காவி எறிகணைகள். குலைந்து போயிருந்த மக்கள் அதிர்ந்து போயினர். விழுந்து படுக்கவும் வீதியில்லை எறிகணையால் காயப்பட்டோரை முதலாய் அகற்றவும் முடியாமல் திண்டாடினர்

குளிரும் பயமும் உறைந்து கிடந்த அந்த இரவு கடந்து கொண்டிருந்தது. பொழுது புலர்ந்து கொண்டிருந்தது ஆனால் பயணமோ நூறுயார்கூட அசையவில்லை வண்டியில் கட்டிய மாடுகள் மூர்க்கம் கொள்ளத் தொடங்கின நாய்கள் ஊழையிட்டன. இடையில் முகம் கறுத்து சோகம் அப்பிய உள்ளங்களுடன் உணர்வு மரத்து விரக்தியின் விளிம்பில் நிலை கொண்டிருந்தன. இலட்சக் கணக்கான மனித முகங்கள் விடியல் பொழுதை எதிர்கொண்டு நின்றிருந்தன. கண்டி வீதியில் நிறைந்து நின்ற மனிதத் தலை-களைப்பார்த்திருந்தால் கடவுளே சிலவேளை ஆச்சரியப்பட்டிருப்பார்.

புலர்ந்த பொழுதும் வெயிலாக எரிக்கத் தொடங்கியது. 15 மணிநேரமாக எந்த ஆகாரமும் அற்று மனச்சுமையுடனும் பொருட் சுமையுடனும் நின்று கொண்டிருந்தவரின் வயிறும் கொதிக்கத் தொடங்கியது. நாவுகள் வறண்டு போயின, சிறுவர்களும் குழந்தைகளும் அழுது அடைத்த குரலிலும் பசிக்கழுதனர். சிலதாய்மார் வயல்களில் நின்ற தண்ணீரை அள்ளி பருகக் கொடுத்தனர். பலவீனமான சிலர் மயக்கமாகி வெறும் ஈரநிலத்தில்கிடந்தனர் ''பால்குடிக்கும் குழந்தையின் நாக்கு தாகத்தால் அண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. சிறுவர்கள் உணவு கேட்கிறார்கள் அவர்களுக்கு கொடுப்பவர் எவருமில்லை'' (புலம்பல் 4:4) விவிலியத்தின் புலம்பல் வரிகள்தான் நினைவுக்குள் வருகின்றது.

வீதிகளில் தொடர்ந்து செல்லமுடியாமல் வயல்களினூடு புதிய பாதை கண்டு பிடிக்க விளைந்து வெள்ளத்திலும் சேற்றிலும் புதையுண்டு கழுத்துமட்ட நீர் ஏரியிலும் தூரம் கடக்க முயன்று கொண்டிருந்தனர் பலர் தமது பெற்றோரை தவறவிட்டு அழுதபடி திரிந்த சிறுவர்களுக்கு ஆதரவு தெரிவிக்ககூடிய நிலையிலும் யாரும் இல்லை. மதியம் ஆக ஆகத்தான் சற்று வேகங்கண்டது சன வெள்ளம் வெயில் கொடுமை பசிக்களைப்பு பொதிகளின் சுமை உறவினரை பிரிந்த அங்கலாய்ப்பு இன்னும்

எத்தனையோ உணர்வுக் குழம்புகளுடன் அந்த மனிதச் சேனை நகர்ந்து கொண்டிருந்தது மனிதத்தை அறியவும் முயன்றிருக்கமாட்டார்கள்.

வயல்களின் அருகில் சில வயோதிபர்கள் உணர்வின்றிக்கிடந்தனர். பாதையோரத்தில் வயோதிபப் பிணமொன்று கிடந்தது. யாரும் அவரை ஏறிட்டும் நோக்க முடியாநிலை. கீச்சலுடன் இரவு முழுவதும் கத்திய சிசுவொன்று உணர்வின்றிக்கிடந்தது. மார்பில் அடித்து அழுது கொண்டிருந்தாள் அதன் தாய் கர்ப்பிணித் தாயொருத்தி இந்த துயரத்தை தன் சிசு காணக்கூடாதென்று என்னவோ சன நெரிசலில் தன்னை பலியிட்டுவிட்டார் போலும். அவளின் சடலம் முதலாய் அங்கிருந்து அகற்றப்படாது கிடந்தது. தன்வயோதிபத் தாயை சயிக்கிளில் ஏற்றி செக்குமாடாய் இழுத்துக் கொண்டிருந்தாள் ஓர் சிறுமி, அங்கே ஒரு மரத்தின் பின்னால் துணிகளால் சுற்றி மறைக்கப்பட்ட மறைவிடத்தில் கற்களின் பஞ்சணையில் தன் சிசுவை பிரசவித்துக் கொண்டிருந்தாள் ஒரு தாய். இன்னும் இன்னும் சொல்லில் அடங்கா வேதனைச் சுமைகளை சுமந்து கொண்டு இருபத்து நாலுமணி நேரம் பயணம் நடந்து தன் இருப்பிடம் துறந்த வலிகாமத்தின் அரைமில்லியன் மக்கள் சேனையின் துயர் சொல்ல வந்த வார்த்தைகளும் தோல்வியை தழுவிக் கொண்டதுதான் மிச்சம்.

அத்துடன் முடிந்துவிடவில்லையே சோகம். மரநிழல்களின் கீழேயும், பாடசாலைகளிலும், ஆலயத்திலும் கடல் கடந்தும், மழையையும் வெயிலையும் தாங்கி நோய்தீர்க்க மருந்தின்றியும், ஏதிலிகளாய் தஞ்சமடைந்துள்ளவரின் சோகச்சுமை சொல்லில் அடங்காதவை ஆமாம். இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட விவிலிய வார்த்தைகள் ஈழத்தில் மீண்டும் நிஜமாகிக் கொண்டிருக்கின்றது.

"உங்கள் நாடு பாழாகியே கிடக்கின்றது உங்கள் நகரங்கள் தீக்கிரையாயின அந்நியர் உங்கள் கண் முன்னாலேயே உங்கள் நாட்டை விழுங்குகிறார்கள் அந்நியரால் வீழ்த்தப் பட்ட நாட்டைப்போல் உங்கள் நாடு பாழாகிக்கிடக்கிறது" (இசை 1:7)

"கண்ணீர் சிந்திய என் கண்கள் சோர்ந்து போயின. என்னுள்ளம் கலங்கித்துடிக்கிறது. என்மக்களாம், மக்களுடைய துயர் கண்டு சிறுவரும், குழந்தைகளும் தெருக்களில் விழுவதைக் கண்டு உள்ளம் உருகிப்பாகாய் பூமியில் ஓடுகின்றது. சிதைகின்றது"

(புலம்பல் 2:11)


"அறுசுவையோடு உண்டவர்கள் தெருக்களில் திக்கற்று மடிகிறார்கள் மெல்லிய பட்டாடை உடுத்தியவர்கள் குப்பை மேட்டில் கிடக்கின்றனர்

(புலம்பல் 4:4)

1995ம் நடந்த இந்த மிகப் பெரிய இடப்பெயர்வும் துயர்ப்பயணமும் ஓர் ஐரோப்பிய நாட்டில் நடந்திருந்தால் இது அந்த ஆண்டின் மிகப்பெரிய அவலமாய் பதியப்பட்டிருக்கும். உலகநாட்டுப் பத்திரிகைகளில் கொட்டன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும். அல்லது வேறுமுதலாம் உலக நாடுகளில் நடந்திருந்தால் உலகமே ஓங்கிக் கண்டனக்குரல் கொடுத்திருக்கும் உதவுவதற்கு தங்கள் வானூர்கத்தை அனுப்பி இருக்கும். தொலைத்தொடர்பு சாதனங்களால் உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது. என்று மார்தட்டிக் கொண்ட நாடுகளிலெல்லாம் இந்த அவலம் தெரியவில்லை. அவர்களின் தொடர்புசாதனங்களுக்கு இவை தெரிய தெரியவில்லை. அல்லது அவர்கள் பார்க்க விரும்பவில்லையோ தெரியாது. தீவுகளின் இராஜகுமார் என பெயர் பெற்றது இலங்கைத்தீவு. இங்கே தமிழருக்கு அகதி வாழ்வு என்பது அவர்தம் வாழ்வின் ஒருபகுதியாகவே மாறிவிட்டிருக்கின்றது. இப்படித்தம் வாழ்நிலத்தில் இருந்து வேரோடும் விழுதுகளோடும் பிடுங்கி எறியப்பட்டு சொந்த நாட்டிலும் பிறநாட்டிலும் வேதனை சுமந்து செல்லாக்காசுபோல் ஆகிய தமிழரையும் அவர்தம் வேதனையையும் பார்க்க உலக நாடுகளுக்கு சிலவேளை நேரமில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்னும் இழப்புகளையும், அவலங்களையும் தம் சக்திக்கு மீறியே சுமந்துகொண்டு தம் உரிமைக்கு குரல் கொடுக்கும் தமிழ்க் குரல்கள் கேட்காதவர்கள் மனித உரிமை பற்றியும் மானிட நேயம் பற்றியும் பிதற்றுவதற்கு அருகதையற்றவர்கள் இந்த அவலங்களும், வேதனைகளும், புறக்கணிப்புக்களும் இந்த இனத்தின் இதயத்தில் ஆழப்பதியும் போது அது மாறாத வடுவாகிவிடும் என்பதை புரிந்து கொள்வார்களாக.

**யோ. யோன்சன் ராஜ்குமார்**

# தடங்களை தேடுகின்றேன்



நண்பா
கரைக்கு
வந்துவிட்டேன்
அடர்
இருளில்
இன்னும்
புத்துமைல்
தாண்டி வந்து
உன்னைக் காணும் வரை
பொறுமையில்லை
எனக்கு
அதற்கிடையில்
சென்ற முறை
என்னை
வழியனுப்ப
வந்த
உன்
கால் தடங்களை
கரையிலேயே
தேடிக்
கொண்டிருக்கின்றேன்

*– M. சாம் –*

# மன்னித்துக்கொள்

இனியவளே,
உனது நினைவுகள்
சுவையாகவும்
சூடாகவுந்தான்
இனிக்கின்றன.

நான்
போதைத் தேவதையுடன்
போகம் நடத்திய
பேதமைக்காக.......
நீ, என்னுடன்
மோதிக் கொண்டதனால்.....
சேற்றை கொண்டதனால்
உன்
இதயத்தை.
மிகவும்
நோகவைத்துவிட்டேன்.

உன்னை
வெறுத்தன்று
உன்னோடு
வாழவேண்டுமென்ற
வெறிதான்

இதில்
நான்
தோற்றுப்போனால்
தோல்வி
எனக்கு மட்டுமல்ல
அதை
தாங்கவும்
உனக்கு
இதயம் இருக்காது

நேற்றுவரை
உன் இதயத்தில்
நான்
பிளந்தரணங்கள்
நாளை
உனது
இனிய நினைவுகளுக்கு
அழியர்த்தழும்புகளாய்......

ஒரு
தாயைச்சுற்றிக்கொண்டு
குறும்பு செய்யும்
குழந்தைபோல்
நானும்
உன்னுடன்........
அன்பே
உனக்கு
சினக்கிறதா?

நான்
ஒரு
பைத்தியக்காரன்
துன்பறுத்துவதும்
நினைத்து
துயருறுவதும்........
அப்பொழுது
என்னுள்
எல்லாமே சிதைந்து
நெருப்பாய்த்
தீய்ந்துபோவது
உனக்குத்தெரிமா?

எனது
நாவு
அள்ளிக்கொட்டியே
சுடுதணல்களால்
உனது
நெஞ்சு
வாழும் நினைவை
இழந்து விட்டதாக
நீ வடித்த
கண்ணீர்
நெருப்பில் உருக்கிய
ஈயத்துளிகளாய்
என் இதயத்தில்
என் அன்பே
ஏழுதரமல்ல
ஏழு
எழுபதுதரம்
என்னை
மன்னித்துக்கொள்

..................இன்பராஜன்

## கலையே கலைமுகமே!

கலைமுகமே நான் உனை
அறியா நிலையில் இருக்கிறேன்
நீ எனக்கு கலையுணர்வைத்தந்து
கலையறிவினை பெருகவிட்டாய்

சான்றோரும் கற்றோரும்,
கலைமுகம் சுவைதனை சுவைக்க
மதமும் மொழியினைக் தாண்டி
உலகெல்லாம் உன் முகம்
தரிசனம் தர மங்காது தமிழ்மணம்
பரவி ஆல விருட்சம் போல
குளிர்தரும் நிழலாக
நீ என்றும் வாழ்ந்திட
கலையே கலைமுகமே நீ
வாழ்த்துகின்றேன்

செல்வி. மொறின்
றெசில்டா

## உன் ஒரு முத்தத்திற்காய்!



நண்பா
அக்கரையில்
நீ
தந்த
அந்த
முத்தத்தின்
ஈரத்திற்காக
இன்னும்
பல முறை
ஈரக்காற்றையும்
பேரலைகளையும்
பார வெளிச்சங்களையும்
மீறி
ஒல்லித் தேங்காய்களை
கழத்தில்
தொங்கவிட்டு
உன்னிடம்
வர
ஆசைப்படுகிறேன்

*M. சாம்*

1864 ம் ஆண்டளவில் வட அமெரிக்காவில் செவ்விந்தியர்களின் தலைவனாக இருந்தவனே தலைவன் சீட்ரில் Chief (Seattle) வெள்ளையர்களான ஐரோப்பியர்கள் வட அமெரிக்காவை ஆக்கிரமித்து, அவர்கள் பண்பாட்டை அழித்தார்கள். எனினும் செவ்விந்தியர்கள் மலைப்பிரதேசங்களில் ஓடி ஒளித்துக் கொண்டு வெள்ளையர்களைத் தாக்கிக் கொண்டேயிருந்தார்கள். இப்பிரச்சனையைத் தீர்க்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதியாகிய ஆபிரகாம்லிங்கன் அவர்களது நிலங்களை தங்களுக்கு விற்கும்படி வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். அதற்கு மறுமொழியாக தலைவன் சீட்ரில் வழங்கிய சரித்திரப் பிரசித்தி பெற்ற சொற்பொழிவே இதுவாகும். இது வெள்ளை மாளிகையில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு அண்மையில் UNEP யினால் வெளியிடப்பட்டது. இதுவரை உலகில் இவ்வாறான தொருஅழகிய, கருத்தாழம் மிக்க இயற்கையை எடுத்துக்காட்டும் உள்ளத்தை உருக்கும், சொற்பிரயோகத்தை கண்டதில்லை என்று வர்ணிக்கப்படுகின்றது. அதன் தமிழாக்கத்தை இங்கே தருகின்றோம்

அல்வி

# எங்கள் பரிசுத்த பூமி

வாசிங்டனில் உள்ள பெருந்தலைவர், எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக செய்தி அனுப்பியுள்ளார். அத்துடன் தன் சினேகபூர்வமான நல்லெண்ணத்தையும் தெரிவித்துள்ளார். எங்கள் உறவு இப்பொழுது அவருக்குத் தேவை யான-தாக இருப்பதனாலேயே அத்தகைய பரிவு இருப்பினும் உங்கள் வேண்டுகோளை நாம் ஆலோசிக்கின்றோம். ஏனெனில் நாம் விற்காவிட்டால் வெள்ளை மனிதன் துவக்குடன் வந்து எங்கள் நிலத்தை எடுக்கவே செய்வான்.

ஆகாயத்தை இந்த மண்ணின் இதமான வெட்பத்தை, எப்படி நீங்கள் வாங்கலாம் விற்கலாம். இந்த எண்ணம் எங்களுக்கு புதினமாக இருக்கின்றது. தூயகாற்றும், தெறித் தெழும் நீர்த்துளிகளும் எமக்குச் சொந்த மில்லாத பொழுது நீங்கள் எப்படி அதனை வாங்கமுடியும்?

இந்த பூமியின் ஒவ்வொரு பகுதியும் எனது மக்களுக்கு பரிசுத்த மானவை. பளபளக்கும் பயின்மர இலைகளும், மணல் நிறைந்த கடற்கரை களும் இருண்ட மரக்காட்டில் படியும் பனி புகாரும் ஒவ்வொரு சப்தமும், பூச்சிகளின் ஒவ்வொரு இரைச்சலும், என் மக்கள் அனு பவித்தவை அவர்கள் எண்ணத்தில் அவை புனிதமானவை. எங்கள் மரங்களில் சுரக்கும் சாறுகூட செவ்விந்தியனின் நினைவலைகளையே சுமந்துவருகின்றது

வெள்ளை மனிதனின் மரணத்துடன் அவன் பிறந்த நாடு மறக்க படுகின்றது. ஆனால் எங்கள் மரணத்தால் இந்த அழகான பூமி மறக்கபடுவதில்லை காரணம் இது எங்கள் தாய்.

நாங்களும் உலகின் ஒரு பகுதி உலகும் எங்களின் ஒரு பகுதி நறுமணம் வீசும் மலர்கள் நமது சகோதரிகள். மானும் குதிரையும், மாபெரும் கழுகும், எங்கள் சகோதரர்கள். பெருக்கிமலைத்துகளும், புற்தரை ச்சாறும், குதிரைக்குட்டியின் கணகணப்பும், மனிதனும், ஒரேகுடும்பத்தை சேர்ந்த வர்கள்.

இந்த மண் எங்களுக்குப் புனிதமானபடியால், இதை நீங்கள் வாங்கு வதென்பது இலகுவான காரியமல்ல. இருப்பினும் நாம் ஆலோசிக்கின்றோம்.

எங்கள் ஆறுகளின நீரோடைகளிலும் பாய்ந்துவரும் பளபள க்கும் நீர் ஏதோ நீர் அல்ல. எங்கள் மூதா தையரின் இரத்தம் நாங்கள் இந்த மண்ணை உங்களுக்கு விற்போமானால் அது புனிதமானது என்பதை மனதி லிருத்தி உங்கள் மக்களுக்கு அதைப் போதியுங்கள். எங்கள் ஏரிகளின் தெளிந்த நீரில் தெரியும் அந்த தெய்வீகபிம்பங்கள் என்னுடைய மக்களின் வாழ்க்கை நிகழ்வு களையும், எண்ணங்களையுமே பேசு கின்றன. எங்கள் தந்தையரின் தந்தை யருடைய குரலொலிதான் அந்த நீரின் சல சல ஆறுகள், எமது உடன் பிறப்புக்கள், அவை எம் தாகத்தை தணிக்கின்றன. அவற்றில் மிதந்து வரும் ஓடங்கள் எம் குழந்தைகளை போசிக்கின்றன. நாம் இந்த மண்ணை உங்களுக்கு விற்போமானால் இந்த ஆறுகள் உங்களதும் எங்களதும் உடன் பிறப்புக்கள் என்பதை உங்கள் குழந்தைகளுக்கு போதியுங்கள். ஞாபக மூட்டுங்கள். உங்கள் சகோதரனிடத்தில் காட்டும் பரிவையும் பாசத்தையும் அதனி டத்தும் காட்டுங்கள்.

காலைக் கதிரவனின் ஒளி பட்டு உருகியோடும் பனிப்புகார் போல் வெள்ளையனின் வருகையின் முன்னால் செவ்விந்தியன் பின்வாங்குகின்றான். ஆனால் எங்கள் தந்தையரின் சாம்பல் பரி சுத்தமானவை. அவ்வாறே இந்தக் குன்று

களும், மரங்களும் பூமியின் இந்தப் பகுதியும் எங்களுக்காக புனிதப்படுத்தப் பட்டுள்ளது.

வெள்ளை மனிதன் எங்கள் வழிவகைகளைப் புரிந்து கொள்ள வில்லை எம்பதை நாம் அறிவோம். அவன் இரவில் புகுந்து இருப்பதை-யெல்லாம் அபகரிக்கும் ஒரு அன்னியனா படியால் உலகின் எந்தப்பகுதியும் அவனுக்கு ஒரே மாதிரியானதே. பூமி அவனது எதிரி, அதை வெற்றி கொண்டதும் அப்பாலே போகின்றான். தன் தந்தையரின் கல்லறைபற்றி அவன் கவலைப்படுவதாக இல்லை. தன் குழந்தைகளின் பிறப்புரிமையை மறந்து அவர்களிடமிருந்தே அந்த மண்ணை கடத்திச்செல்கின்றான். இவன் அன்னை பூமியையும் ஆகாய சோதரனையும் ஏதோ கடைச்சரக்காகவும் மந்தைக் கூட்டமாகவும் மதிக்கின்றான். இந்தப் பூமியை வெறுமை யாக்கி வரண்ட பாலைவனமாக்குவதே இவனது கோரப்பசி. எங்கள் வழிவகைகள் உங்களில் நின்று வேறுபட்டதோ என்னவோ நானறியேன். உங்கள் நகரங்களின் மருங்குகள் செவ்விந்தியனின் கண்களை உறுத்துகின்றன. ஒரு வேளை நான் ஒரு காட்டுமிராண்டி என்பதால் அவ் வாறிருக்கலாம் போலும். அது எனக்கு விளங்கவில்லை. அங்கு எழும் பட படக்கும் ஒலிகள் எங்கள் செவிப்பறையை வருத்துகின்றது. அருகேயுள்ள குளத்தில் இருந்து இரவில் எழுகின்ற தவளைகளின் கத்தலையம் தனிமையில் அழுகின்ற அந்தப் பறவையின் குரலோசையையும் ஒரு மனிதன் கேட்கமுடியாவிட்டால் அவன் வாழ்ந்துதான் என்ன பயன். நான் செவ்விந்தியன் இது எனக்குப் புரிய வில்லை. தடாகத்தை தடவிவரும் தென்றலின் ஓசையையும் நடுப்பகல் மழையின் நனைந்து பினைன் பைன் மரத்தின் வாசனையில் தோய்ந்து, நறு மணம் தாங்கிவரும் தென்றலின் வாசனை யையுமே செவ்விந்தியன் விரும்புகின்றான்.

காற்று செவ்விந்தியனுக்கு பௌத்திரமானது ஏனெனில் அனைத்து உயிர்களும் அதனையே பகிர்கின்றன. மனிதன், மரங்கள், விலங்குகள் அனைத்தும் அதனைப் பகிர்கின்றன. வெள்ளை மனிதனோ இதனைப் பொருட் படுத்தவில்லை. அவனோ நீண்டநாள் மரணப்படுக்கையில் கிடந்துகொண்டு துர் நாற்றத்தை உள் வாங்கும் மரத்துப்போன மனிதனாகின்றான்.

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதனால், காற்று பௌத்திரமானது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது உயிர்களைக்காக்கும் தன் உணர்வுகளை எங்களுடன் பகிர்ந்து கொள்கின்றது. எமது பாட்டனுக்கு முதல் மூச்சைத் தந்த அதே காற்றுதான் அவரின் இறுதி மூச்சிலும் இணைந்துகொண்டது எங்கள் குழந்தைகளுக்கு வாழ்வில் புத்து ணர்வையும் கொடுக்கின்றது.

எனவே எங்கள் பூமியை வாங்குவதற்கான உங்கள் வேண்டு கோளை ஏற்பதனால் நான் ஓர் நிபந்தனை விதிக்கின்றேன். வெள்ளை மனிதன் இந்த மண்ணின் விலங்குகளை தன் உடன் பிறப்பாகக் கருதவேண்டும். நான் ஒரு காட்டுமிராண்டி. எனக்கு வேறு வழி தெரியாது. ஓடுகின்ற புகையிரதத்தில் இருந்து கொண்டு வெள்ளை மனிதனால் சுட்டு வீழ்த்தப்பட்டு அழுகிப்போன ஆயிர மாயிரம் எருமைகளை பிரேரீஸ் புல் வெளியில் நான் கண்டிருக்கின்றேன். எப்படி அந்தப் புகைக்கும் இருப்புக் குதிரை எங்கள் உயிர் வாழ்வுக்கு மாத்திரம் நாம் கொல்லும் எருமை களைவிட மேலானது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. விலங்குகள் இன்றி மனிதன் எம்மாத்திரம்? எல்லா விலங்குகளும் இறந்துவிட்டால் தனிமை உணர்வில் தவித்து மனிதன் இறந்து விடுவான். ஏனெனில் அவற்றுக்கு எது நடக்கின்றதோ அதுவே விரைவில் மனிதனுக்கு நடக்கும். எல்லாமே ஒன் றோடொன்று இணைந்தவை. தங்கள் காலடியில் கிடக்கும் நிலம் எங்கள் பாட்டானின் சாம்பல் மேடு என்பதை உங்கள் குழந்தைகளுக்கு கற்று கொடுங்கள் அப்பொழுது தான் அவர்கள் அதை மதிப்பார்கள் எங்கள் இனத்தவரின் வாழ்க்கையால்தான் இந்தப்பூமி உயர் வடைந்தது என்பதை உமது மக்களுக்கு எடுத்துச் சொல்லும்.

உலகுக்கு எது நடக்குமோ அதுவே மக்களுக்கும், வாழ்க்கை என்னும் வலையை பின்னுகின்றவனல்ல மனிதன். அதற்குள் நிலைப்பட்டுக் கொண்டவனே அவன் வலைக்கு ஏது நேருமோ அதுவே அவனுக்கும்..

எங்கள் வருங்காலம் எங்கே கழியும் என்பதல்ல முக்கியம் அவை பல நாட்களாக இல்லாமல் சிலமணி நேரமாகவும், ஒரு சில குளிர்காலங் களாகவும் கூட ஆகலாம். ஒரு காலத்தில் உங்களைப் போல வல்லமையுடன் நம்பி க்கையுடனும் வாழ்ந்த இனங்களின் குழந் தைகள் அவர்களின் கல்லறைகளில் அழுவதற்குத்தானும் விட்டுவைக்கப் படவில்லை. நாம் ஒன்றைமட்டும் அறிவோம் ஒரு நாள் வெள்ளை மனிதன் தன் தெய்வமும் எங்கள் தெய்வமும் ஒன்று என்பதை கண்டு கொள்வான். எங்கள் மண்ணை சொந்தமாக்குவது போல் அவரையும் நீங்கள் சொந்தமாக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால் அது முடியாத காரியம். அவர் மனிதரின் தெய்வம். அவரின் பரிவு வெள்ளையருக்கும் செவ்விந்தியனுக்கும் பொதுவானதே. இந்த உலகம் அவரின் மகிமை மிக்க பூமி. அதற்குச் செய்யும் தீங்கு அதனைப்படைத்த அந்த ஆண்டவனின் வெறுப்பை சம்பாதிப்பா தாகவே முடியும். நீங்கள் வெள்ளையர்கள் கூட மற்ற இனத்திலும் மிக விரைவாக உங்கள் படுக்கைகளை அசிங்கப்படுத்தி கொண்டே அந்தக் கழிவினுள் ஒரு இரவு மூச்சுத் திணறப் போகிறீர்கள். ஆனால் ஏதோ ஒரு விசேட நோக்கத்திற்காக உங்களை இந்த மண்ணிற்கு கொண்டு வந்து மேலாதிக்கம் செய்யவைத்த அந்த இறைவனின் வல்லமையின் தாக்கத்தால் உங்கள் அழிவில் நீங்கள் மிகவும் பிரகா சிப்பீர்கள்.

எங்கள் எருமைகள் நிர் மூலமாக்கப்படும் பொழுதும் எங்கள் காட்டுக் குதிரைகளின் தோல் உரிக்கப்படும் பொழுதும் வனங்களின் மூலைமுடுக்கெல்லாம் மனித வாடையால் நிறையும் பொழுதும் கனிந்த எமது குன்றுகளின் காட்சிகள் கம்பிகளால் நிரம்பும் பொழுதும் இந்த விதியின் மாயையை எங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

திக்கெற் என்ற பறவைகள் எங்கே போயின? கழுகு எங்கே போயிற்று? குதிரையும், வேட்டைநாயையும் வழியனுப்பி வைத்து விட்டோம் இது வாக்ழ்கையின் முடிவும் உயிர்வாழ்வுக்கான பிரயத் தனத்தின் தொடக்கமுமாம்.

எனவே இந்த மண்ணை நாம் விற்போமாகில் நாங்கள் அதைக் காத்ததுபோல் நீங்களும் அதை நேசியுங்கள். நீங்கள் இந்த மண்ணை எடுக்கும் பொழுது இருந்தமாதிரியே அதன் நினைவுகளை உங்கள் மனதில் பதியவையுங்கள். கடவுள் உங்களை நேசிப்பது போல் நீங்களும் அதனை நேசியுங்கள். எங்கள். முழுமனதோடும் வல்மைையோடு உங்கள் குழந்தை களுக்காக அதனை பாதுகாருங்கள்.

தலைவன் சீட்ரில்

தமிழாக்கம்: அல்வி

# TAMIL CULTURAL INFLUENCES IN SOUTH EAST ASIA

Xavier S. Thaninayagam Adikal

**The main linens, along which investigations regarding Tamil cultural influences in South - East Asia should continue to be made are briefly outlined below:**

1. In Thailand, the writer was especially fortunate to meet the Court Brahmins, thanks to the good offices of H. H. Prince Dhani Nivat, and verify for himself the Tamil verses recited by them at the coronation of their kings and at the swinging festival; Though the swinging festival has not been publicly celebrated in Bangkok for about twenty years, the huge posts meant for swing may yet be seen. It were well worth investigating the origin and development of the Triyambavay Tripavay festivals in Thailand. The Maharajaguru, as the chief priest is called, repeated to the writer the tradition that had been mentioned by his predecessors that the Court Brahmins of Thailand seem to have originally come from Ramesvaram. the guru also felt, after a pilgrimage undertaken to the Hindu shrines of India, that the ritual in vogue among the Court Brahmins of Bangkok and the arrangements within their temples seemed to resemble those of the Tamil country, especially of Conjeevaram.

Thailand has had colonies of Brahmins also in the South, at Ligor and Takuapa, following the same traditions and celebrating the same festivals with the recitation of the verses from Manikkavasagar. Cambodia also has its court Brahmins at Phnom-penh. There is room for research regarding Tamil Court ceremonies and their influence abroad, as well as regarding the role of the Brahmins in these countries, how far they mixed with the colonists and the local populations, and in what manner they served the kings and Tamil merchants who patronized them. To all appearances, the Brahmins of Greater India did not have the powers and prerogatives, and did not claim the exclusive rights which were exercised by the Brahmins in contemporary India.

2. The museum library at Bangkok contains Sanskrit manuscripts which may throw light on the spread of the ritual of the Tamil country in Thailand. There are also manuscripts in the possession of the Maharajagura which should be studied. The Tamil verses recited by the Brahmins are written in either grantha or in the Thai script, and have had various reductions.

3. As the vehicle of literary and religious thought and as the language of the inscriptions, the Sanskrit language held paramount sway in these lands as it did hold paramount sway during certain periods at the courts of the Tamil kings. The use of Sanskrit is no indication that the influences were not from the Tamil country or from the Tamil people. It is necessary to insist that the first records available in South-East Asia are not necessarily the earliest possible records of contact with India.

Certain writers have ignored entirely the pre-Aryan and non-Aryan elements in the languages and cultures of South-East Asia, elements which gave a unity and cohesiveness to the regions known as "Greater India" and facilitated the spread of influences during the Gupta and Pallava periods. Further, Gupta influences and Amaravathi art could have reached South-East Asia via the Tamil kingdoms.

4. The Tamil influence, especially in Thailand, spread also to the field of literature. There are names and episodes in the Thai Ramakien (Ramayana) which are incontestably of Tamil origin, as is also the devotion to the sea-goddess, Manimekalai. The history of the Tamil loan reds in the Thai language as well as in Malay and Javahese are bound to reveal very interesting aspects of the Tamil influence. Sanskrit words in their grantha form and ancient place names have their own importance.

---

11 H. G. QUARITCH-WALLES, *Siammmese State Ceremonies*, o.c., pp. 54-63

12 G. COOEDES, *Les etats hinndouises*, o.c., p. 35.

13 Cf. PHYA ANUMAN RAJADHON, *Thai Liiteeratuuure in the Thailand Culture Series.*

14 P.. DUPONT, *Visnus mitres de l'Indochine Occidentale*, BEFEO, Vol. XLI, ppp.. 2333--254.

15 SILPA BIRASRI, Thai Buddhist Sculpture, Bangkok 1954, p. 12: " For reasons of different periods, contrary to other peoples who also adopted indian culture, the thai were not inspired by the Gupta Art, but by Indian bronzes of the 10th - 12th century from Ceylon and South India."

16 H. G.QUARITCH-WALES , *The Marking of Greater India*, o.c..., pp. 32, 33, 34, 102, 152-3, 205,

5. Tamil influence in the domain of sculpture is revealed by the numerous statues of Vishnu with cylindrical mitre, of Pallava inspiration. The museums of Bangkok, Djakartha, Palembang, Saigon, Tourane and Hanoi contain religious and profane sculptures that have yet to be studied. Though already the objects of study by certain authors, one cannot imagine the extent to which statues of Agastya and Ganesha are widespread over the Malay archipelago and in Viet-Nam. The field museums of Majapahit and Prambanan also have a remarkable collection of Agastya and Ganesha figures. One has grounds to doubt the theory that connects Agastya and Ganesha with Aryanisation.

Some of these museums as those in Bangkok and Djakarttha also contain numerous bronzes of Cholainspiration.

6. Every country of South-East asia, be it Thailand, Cambodia, Malaya, Champa or Indonesia, reveals the influence of Tamil architecture, especially off Mamallapuram and Conjeevvaram. The writer makes no apology for the following quotations from a comparatively recent book:

> In Ceylon Hindu Pallava Works of the best style are confined to the splendid rock sculptures of Isurumuniya, namely the man and the horse, and the elephants so reminiscent of the descent of the Ganges reliefs at Mahabalipuram. A stone Bodhisattva found in Ceylon has been recognised by Paranavitana as having Pallava amenities. There are also a few figures of somewhat inferior workmanship, notably the Avalokitesvara at Kustarajala, the image in the round standing in front of the temple at Kurukalmadam and the colossal Budurvegala group.
>
> Here (Burma) remains attributable to the Pallava wave seem to confined to a couple of Hindu sculptures from old Prome, the mass of the people probably remaining Buddhist. One of them is a headless but otherwise well preserved relief. showing Vishnu and Lakshmi. Though close to the Pallava style it shows certain iconographical divergences. The other figure of Vishnu on Garuda, is of poor workmanship, "the artist knew his subject well but failed to give an artistic expression to it."
>
> I ascribe to Pallava colonists of the seventh century the Siva temple remains I excavated in Kedah ; and near to one of them was found a miniature shrine roof closely resembling the roof of a Pallava ratha. The latetr Siva temples of the eleventh and twelfth centuries that I also excavated in Kedah seem to be decadent survivals of the same wave of influence. It is noteworthy that the terracotta Ganesa found in one of these, like the similar figure illustrated at the end of Schnitger's book, but in complete distinction from the usual pose of Indo-Javanese Ganesas, is seated in the attitude of Royal ease.
>
> I have also called attention to the way in which another stone image of Visnu from Wieng Sra seems to be a lifeless copy of a Pallava model, such as the probably eighth century Pallava Siva which forms one of the Takuappa triad. The latter are probably to be identified as a Gangadhara group.
>
> Krom indeed had already recognized that no father-land for Indo-Javanese art could be pointed to in India. And we may go so far as to agree with him that the Dieng art shows "Most agreement with, or properly, least difference from", South Indian art, specifically in the square plan, symmetry, roof stages, and stress on horizontal lines. Decoration is with plasters and such simple Indian motifs as garlands and lotus petals, complex foliage apparently not yet appearing. In my opinion the fact that the Indo-Javanese temples up to the early part of the ninth century were built of wood or mixed materials points to South Indian influence being predominant, for prior to this both in North India and in Indo-China brick temples were being constructed.
>
> Pallava influence is perhaps most strongly indicated by the presence of the kala-makara over doorways, for the kala-makara, as a combined motif, was a Pallava innovation in India art. We have already seen the relative preponderance of Pallava influence in Indo-Malaysian sculpture and this applies even more to the sculpture of the Dieng plateau.
>
> We will now consider the sculpture corresponding to the decorative styles we have just

17 See also Ph. STERN, L'art du Champa et son evolution, Paris 1942; J. LEUBA, Les Chams et leur art, Paris, 1923.

18 G. GROSLIER, Danseuses Cambodgiennes, Paris, 1913; BERYL DE ZOETE, The Other Mind, London, 1953; BERYL DE ZOETE aand WALLTER SPIES, Dance and Drama in Bali, London; DHAANIT YUPHO, Classical Siammmese Theatre, Bangkok, 1952

discussed, that is to say, up to and including the Dong- Dzu'o'ng style. The earliest Cham sculpture has been termed by M. Stern "revivified Gupta" but I would be less certain that by this date, the eighth century, Cham sculpture had not also absorbed some Pallava influence. That at least seems to be indicated in the somewhat later Hoalai sculpture, by such features as the broad shoulders and some details of dress and ornament.

Again, it is important to note that the simplicity of the architectural plan characteristic of the simple and intermediate Per-Angkorian temples is as frequent in early Gupta. Indeed, the general plainness of decoration of these khmer types is reminiscent of the sobriety of the Palllava ornament, which had been less enriched by complex Hellenic forms than was the case further north. The little Siva shrines of probably seventh century, that I excavated in Kedah, seem to me closely allied to the type of Pallava building that may have influenced the early Khmer evolution.

7. The spread of South Indian drama, music and dance to South-East Asia have been noted, but never studied. These influences may be seen in Thailand, Cambodia, Java, and, not a little, in Bali. Beryl de Zoete, in her book, The Other Mind has through her illustrations shown some of these resemblances, but the writer has had occasion to see especially in the Cham museum of Tourane (Viet-Nam) and in Cambodia sculptures and bas-reliefs of danseuses in decidedly South Indian poses. The scope in this field of work is unlimited as must be obvious even to the casual Tamil tourist that visits South-East Asia.

8. Cultural anthropology is another branch of studies greatly neglected by scholars of South India and Ceylon. The racial affinities of the Chams and Khmers, the Malays and Indonesians, deserve greater attention and study. Sumatra has a race of people, the Karo-Bataks, whose branch, the Simbiring are subdivided into clans bearing names resembling nor the other branches of the Batak race have been studied by scholars competent in the Tamil Language and South Indian customs and culture. There is need for Tamil scholars who will live among the Simbiring and other Batak people for a period of time so as to make a comparative study of their customs, laws, religion and language.

9. Since South-East Asian culture, like Indian culture, was intimately linked with religion, the history of South-East Asian religions does reveal a great deal of Tamil influence. Saivism and thelingam worship spread all over these countries, and the branch of philosophy in vogue, especially in Indonesia, was the Siddantha.

10. The part played by Tamil-speakingg peoples in the spread of Mahayana as well as Hinayana Buddhism, and later in the diffusion of Islam in Indo-China and in the Malay Archipelago, are also fields in which much investigation is needed.

11. While these are some of the fields open to historical enquiry, the continuation of Tamil influence from the post-Chola period to our day also deserves attention. Tamil sailors have continued to sail along the routes traced by the early Tamil Argonauts and thousands of Tamil merchants and settlers in Burma, Thailand, Malaya, Viet-Nam, Indonesia, continue today the traditions of their ancestors. Present political and economic changes may affect the geography and population of the Greater Tamil Nad that exists on the foundations of a common culture and language, and hence, the present is an apt moment to take stock of the past.

It should not be imagined, either , that all the influences were one way, that they went from South India and Ceylon to the South-East. It is left to our scholars also to trace the influences to which we were subject by the South-East Asian countries.

# ஈழத்தமிழ் நாடகங்கள்

## சேரன்

**"கடந்த இருபது வருடங்களில் தமிழ் நாடக அரங்கத்துறையில் சில குறிப்புகள், சில பிரச்சனைகள்" என்ற கட்டுரையில் இருந்து சில பகுதிகள்.**

முன்னாள் கலை–இலக்கிய விமரிசகரும் சற்றடெ றிவியூ (Saturday Review) பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான எஸ்.சிவநாயகம் அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக்கள் இரண்டு உண்டு. ஒன்று, 1970இலேயே தமிழ் நாடகம், அரங்கு என்பன புதிய நிலையில் செல்ல ஆரம்பித்துவிட்டது என்பதையும் அவற்றின் பன்முகப்பட்ட சாத்தியப்பாடுகளையும் முன்னுணர்ந்து கூறியமை. இரண்டு, அவருடைய பிரபல்யமான கருத்து நிலை: அதாவது தமிழீழம் என்பது ஒரு மனோநிலை (Tamil Eelam is a State of Mind) எனும் கருத்தை அவர் முன்வைக்கிறபோது, இப்போது அறிவுலகில்– குறிப்பாக தேசியவாதம், இனத்துவம் போன்ற கருத்து நிலைகளில் புரட்சியை உண்டுபண்ணியிருக்கும் Benedict Anderson இன் Imagined Communities எனும் நூல் வெளிவந்திருக்கவில்லை.

ஒரு தேசிய இனத்தை அல்லது தேசியவாதத்தை வரைவு செய்வதில் புறக்காரணிகளுக்கு இருக்கிற முக்கியத்துவத்தைப் போலவே (பொது மொழி, பொது நிலம், இன்னபிற) அகக்காரணிகளும் (ஒன்றாக வாழ்ந்து பெற்ற அனுபவம், பொதுத்துயரம், இன்னல், நாமனைவரும் ஒரு சமூகம் என்னும் கற்பனைப்படைப்பு) முக்கியமானவை என்பதை அச்சுத் தொழிற்துறை முதலாளித்துவத்தினது எழுச்சியின் பின்னணியில் வலியுறுத்தி நிறுவியவர் பெனடிக்ட அன்டர்சன்.
இதனையே சிவநாயகமும் இன்னொரு வழியில் சொன்னார், Imagined Communities என்பதற்கும் State of Mind என்பதற்கும் அடிப்படையில் எந்தவொரு வித்தியாசமுமில்லை. தமிழ் நாடக அரங்கத் துறைகளில் புதிய திருப்பம் ஏற்படுகிறது எனச் சிவநாயகம் (அப்போதைய டெயிலி மிரர் தலைவிமர்சகர்) எழுதுவதற்குக் காரணமாக இருந்தவை அபசுரம், இருதுயரங்கள், விழிப்பு போன்ற நாடகங்களாகும்.

அதுவரை காலமும், குறிப்பாக 60களில் பேராசிரியர் வித்தியானந்தன் கலைக்கழக வாயிலாகக் கூத்தைப் பேணவும், வளர்க்கவும் எடுத்த முயற்சிகளையும் இதன் விளைவாக மேடைக்கும் பின்னர் அச்சிலும் வந்த கூத்து மரயைத் தவிர ஆக்க பூர்வமான பங்களிப்புகள் நவீன நாடகம், அரங்கைப் பொறுத்து பெரிதாக இல்லை. அ. ந. கந்தசாமியின் மதமாற்றம் கா. சிவத்தம்பியால் நெறியாளப்பட்டு 1966இல் மேடையேற்றப்பட்டிருந்தது. அது பற்றிய சில விமர்சனகுறிப்புக்கள் அதனை ஒரு புதிய நாடக யுகத்துக்கான ஆரம்பம் என்பது போல எழுதியிருந்தன. மதமாற்றத்தினுடைய முக்கியத்துவம் அது எழுதப்பட்ட, மேடையேற்றப்பட்ட காலத்துப்பழமை பேணும் சூழலில் மதம் மாறித் திருமணம் செய்வது பற்றிய பிரச்சனையை அணுகியிருப்பதுதான். அரங்கம் மற்றும் நவீன நாடகஅம்சங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக மதமாற்றத்தில் பெரிதாக எதுவும் இல்லை. பார்வையாளருக்கு எதிர்பாராத அதிர்ச்சியை தாக்கி ஏற்படுத்துவதன் மூலம். 1969, 1970, 1971 இந்த மூன்று ஆண்டுகளும்தான் ஈழத்தில் ஒரு நவீன நாடக, அரங்க வளர்ச்சிக்குப் பிரதான பங்களிப்புக்களானது சங்காரம், அபசுரம், கோடை, கடுழியம், புதியதொரு வீடு ஆகிய நாடகங்கள் மேடையேறின.இவற்றுக்கான பின்னணிப் பலம் அதற்கு முன்னைய காலகட்டங்களிலிருந்தும் பெறப்பட்டது.

(1) பேராசிரியர் கணபதிப்பிள்ளை தொடக்கி வைத்த இயற்பண்பு நாடக மரபு.
–பேராசிரியருடையது மரபுவழி நாடகங்களே எனினும் பேச்சு வழக்கை லாவகமாகக் கொண்டு வந்தமையும் மண் வாசனையை நாடகங்களுடாக எழுப்பியதும் அவரது சிறப்பு. மற்றும்படி அரங்கம், நாடக நுணுக்கங்களை அவரிடம் எதிர்பார்க்க முடியாது.
(2). பேராசிரியர் வித்தியானந்தன் தொடக்கி வைத்த கூத்து மறுமலர்ச்சி.
(3) ஆங்கிலம் கற்ற புத்தி சீவிகளின் மொழிபெயர்ப்பு நாடகங்களின் மேடையேற்றங்கள் அவற்றூடாக வந்த ஒரு புதிய தலைமுறை.
இந்த காரணிகளும் 70களில் நவீன நாடகத்தின் தோற்றத்திற்குத் துணை புரிந்தன எனலாம். 70களில் நெறியாளரில் அரங்கு உருவாதற்கு காரணமாக இருந்த நாடகங்கள் பற்றியும் நெறியாளர்கள் பற்றியும் இவ்விடத்தில் சில குறிப்புகளைச் சொல்வது பொருத்தமாகும். இக்காலப் பகுதியில் நாடக ஆளுமைகளாக மேலெழுந்த மௌனகுரு, நா. சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ் ஆகிய மூவருமே தமிழ் நாடக அரங்கின் ரசாயன மாற்றத்திற்குக் காரண கர்த்தாக்கள் என்பது மிகைப்படுத்தல் அல்ல. சுஹெர் ஹமீட்டையும் இவ்வரிசையில் மற்றைய நாடக விமர்சகர்கள், ஆய்வாளர்கள் அனைவரும் சேர்த்துக்கொள்கின்றனர். நா.சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ் இருவரும் இக்காலகட்டத்திலே கொழும்பில் இருந்ததோடு மட்டுமல்லாமல் சிங்கள நாடகக் கலைஞர்களோடும் தொடர்புற்றிருந்தார்கள்.

மேலைநாட்டு நாடகர்கள் கொழும்பில் நடாத்திய களப்பயிற்சிகளிலும் பங்கு கொண்டவர்கள். இந்த வகையில் இருவர்களிருவரிடமும் மேலைத் தேய வழிவந்த ஒரு நவீன நாடகப் பிரக்ஞை உருவாக நேர்வதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. எனினும் இருவருக்குமிடையே தனித்துவமான ஆளுமை வேறுபாடுகளுமிருந்தன. 1975 இல் கல்வி அமைச்சு தொடங்கிய நாடக டிப்ளோமா வகுப்புகளிலும் இருவரும் பங்கேற்றிருந்தனர்.

தாசீசியஸ் 1969 இல் கோடையை மேடையிட்டதைத் தொடர்ந்து காலம் சிவக்கிறது (சிவானந்தன்), புதியதொரு வீடு (மஹாகவி) கந்தன் கருணை (ரகுநாதன்), பிச்சை வேண்டாம், (அலெக்ஸி அர்புஸோவ்), பொறுத்தது போதும் (தாசீசியஸ்). போன்ற நாடகங்களை புதிய முறையில் அரங்கப் பிரக்ஞையோடும் நெறியாண்டார். பிரெ:டின் Caucasian Chalk Circle – எனும் நாடகத்தை தமிழில் தயாரிக்கும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்தபோதும் பின்னர் அது கை கூடவில்லை என்று தெரிகிறது.

கோடையை முற்று முழுதாக இயற் பண்பு நாடகமாகவே தயாரித்த தாசீசியஸ் பிச்சை வேண்டாம், பதியதொரு வீடு நாடகங்களின் தயாரிப்பில் குறியீட்டுப் பங்கானதும், நாடக அரங்கின் பலவிதமான சாத்தியப் பாடுகளையும் வெளிக்கொண்டு வரக்கூடியதான நுணுக்கமான பல அரங்கியல் அம்சங்களையும் சேர்த்தார். சோவியத்யூனியனில் ஆபுஸோவை அரங்கேற்றி வந்த நெறியாளர், பிச்சை வேண்டாமைப் பார்த்துவிட்டு எந்தவித ஆடம்பரமான மேடையமைப்பும் இல்லாமல் இதனை இப்படி

மேடைபிடலாம் என என்னால் நம்பக்கூட முடியவில்லை என ஆச்சரியப்பட்டதாக ஒரு முறை குறிப்பிட்டிருந்தார்.

கோடை வெற்றி தந்த உற்சாகத்தில் மஹாகவி புதிய தொரு வீட்டை மூன்று நாட்களில் எழுதி முடித்தார். பின்னர் தாசீசியஸுடன் பிரதியை மேடையேற்றும் வகையில் ஆலோசனை செய்தபோது தாசீசியஸின் வேண்டுகோளுக்கிணங்க ஒரே இரவில் பாடல்களை எழுதினார். கோடை போல இல்லாமல் புதியதொரு வீடுநெறியாளரின் ஆலோசனைகளுடனேயே முற்றாயிற்று. அவ்வகையில் எழுத்தாளர் நெறியாளர் ஒத்துழைப்பு இருந்தது.

காலம் சிவக்கிறது அரங்கத்தை பரிசோதனையாக்கும் ஒரு பயில் புலமாகவே மேடையேற்றப்பட்டது. சத்தற்ற வெறும் பிரதியிலிருந்தும் ஒரு நல்ல நெறியாளர் எவ்வாறு வண்ணச் சிறப்பு மிக்க மேடை நிகழ்வைத் தரலாம் என்பதற்குரிய தன்னுடைய சான்று அது என்று தாசீசியஸ் ஒரு முறை கூறியிருக்கிறார். யாழ்ப்பாணக் கூத்து மரபும், கண்டியநடனத்துண்டுகளும் மட்டக்களப்புக்கூத்தும் சேர்த்து கந்தன் கருணையில் தாசீசியஸ் உருவாக்கிய ஆட்டக் கோலங்கள் அழகும் எடுப்பும் மிக்கவை. மஹாகவியின் கோலம், முற்றிற்று ஆகிய நாடகங்களையும் மக்ஸிம் கோர்க்கியின் 'தாய்' நாவலை நாடக வடிவில் கொண்டு வருவதுமே தன்னுடைய பிரதான இலட்சியங்கள் என்று தாசீசியஸ் கருதுகிறார். நாடக ஆசிரியராக தாசீசியஸ் வெற்றி பெறவில்லை என்றே கருதுகின்றேன். அவருடைய 'பொறுத்தது போதும்' அரங்கத்தில் தருகிற அனுபவம் பிரதியில் இலக்கியமாகத் தருவதில்லை. அரங்க அனுபவம். பிரதி அனுபவம் பற்றிய கருத்துக்களை பின்னொருதரம் ஆழமாக நோக்கலாம்.

நா.சுந்தரலிங்கம் பல்கலைக்கழக நாடக அரங்குகள் வழியாக வந்தவர். பேராசிரியர்கள் சிவத்தம்பி, வித்தியானந்தன், ஆகியோருடன் பணியாற்றியவர். அபசுரம், விழிப்பு என்பன இவருடைய நாடகங்கள். இவற்றை எழுதிநெறிப்படுத்தியுள்ளார். தவிர கடுழியம் (முருகையன்) இரு துயரங்கள் என்பனவும் சுந்தரலிங்கம் நெறியாண்ட நாடகங்களே.

விழிப்பு 75ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவில் பரிசு பெற்றது. மட்டுமன்றி நாடக ஆதரவாளர்கள் அனைவருடையதும் கவனத்தைக் கவர்ந்ததாகும். அரங்கம் தயாரிப்பு, அவைக்காற்றுகலை போன்ற அம்சங்களில் சந்தேகமில்லாமல் விழிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிதான். அபத்த நாடக ஆசிரியரான அயனெஸ் கோவின் The Bald Soprano,The Chairs ஆகியவற்றின் அருட்டுணர்விலும் 70களில் உக்கிரம் பெற்றிருந்த பட்டதாரிகள் வேலையற்ற நிலையும் போராட்டமும் ஏற்படுத்திய பாதிப்புக் காரணமாகவும் விழிப்பு உருவாகிற்று எனலாம். அடிப்படை மனிதப் பிரச்சினைகள் நவீன நாடக மெருகுடன் கலையாக்கம் பெறுவது விழிப்பின் பிரதான அம்சம். மற்றும் 'பலே' நாட்டிய அசைவுகள் ஊமம் போன்ற அம்சங்கள் நளினமாகப் பயன் படுத்தப்பட்டிருந்தன. அரங்கக்கலை என்ற வகையில் வெற்றியாகவும்மேற்கூறிய அனைத்து அம்சங்களினதும் சேதனா பூர்வமான ஒருமைப்பாடு மேடையில் காணப்பட்டாலும் நாடக உச்சக்கட்டத்தில் ஒரு வகைப பழமை பேணும் தன்மையும், கோஷங்களும் சுலோகப் பாங்கும் மேலோங்கி நிற்கின்றன. பிரெக்டின் காவிய நாடகப் பண்புகளை எடுத்தாள்வது நல்லதுதான். எனினும் முக்கியமான விஷயம், பிரெஹ்டின் செய்தி தனித் தனிப் பாத்திரங்களூடாக வராமல் நாடகம் முழுமையூடாக வெளிப்பட்டுப் பரவுவதே காணப்பட்டது. பிரெஹ்டின் Mother exceptation and the rule போன்ற நாடகங்களில் நாம் இதனைத் தெளிவாகக் காணமுடியும். இதற்கு Greek Chorus முறையை அவர் மிகுந்த சிறப்போடு பயன்படுத்தினார். 'விழிப்பு' 'பொறுத்தது போதும்' 'காலம் சிவக்கிறது' போன்ற நாடகங்களினது அடிப்படை குறைபாடும் இத்தகைய ஒட்டு மொத்தமான பரிமாற்றம் இன்றி கருத்துக்கள் பிரசாரமாகவும் கருத்துக்களாகவும் கொட்டப்படுவது தான்.

நல்ல நெறியாளர்களாக இருப்பவர்கள் நல்ல நாடக ஆசிரியர்களாகவும் இருக்க வேண்டும் என்பதில்லை.செய்தி இயல்பற்ற முறையில் நாடகத்தில் திணிக்கப்படும் போது (நாடகத்தில் மட்டுமல்ல) எல்லாக் கலைப படைப்புக்களுக்குமே உரிய பொதுவான பிரச்சினை இது) அது சம்பந்தப்பட்ட கலை வடிவத்திற்கு ஊறு செய்கிறது.

'விழிப்பு' பிரதி நிலையில் துல்லியமாக ஒரு வகை இருநிலைப்பாட்டைக் காட்டுகிறது. முதலிரண்டு அங்கங்களும் சீராக வளர்ச்சியடைய – மையத்தை நோக்கி – திடீரென புகுத்தப்படும் தொழிலாளர்கள் அவர்களுடைய பாத்திர வார்ப்புக்கு நாடகத்தில் தொடர்ச்சி ஏதும் இல்லை. அதுவும் மார்க்ஸ் எழுதிய தனக்கேயாகிய வர்ககம் (Class for itself) ரக தொழிலாளர்கள் வேலையற்ற பட்டதாரிகளுடன் இணைவதான காட்சித்துண்டு நாடக ஓட்டத்தின் இயல்புக்குப் பொருந்தவில்லை. இக்காலகட்டத்தின் பெரும்பாலான நாடகங்கள், பாதல் சர்க்கார் ஒரு முறை சொன்னது போன்ற "doing theatre rather than writing theatre" என்று சொல்லத்தோன்றுகின்றது. (Doing theatre என்பது இன்னொரு வகை அரங்க நிலைப்பாடு. இதுபற்றிய விரிவான ஆய்வுக்கு இன்னொரு சந்தர்ப்பம் தேவை) அபசுரம் இந்தவைமில் பிரதி, அரங்கு இரு நிலைகளிலும் வெற்றி என்றே சொல்லவேண்டும்.

தாசீசியசும், சுந்தரலிங்கமும் 80களில் எவ்வாறு பரிணாமல் பெற்றுள்ளனர். என்பதை அறியும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை என்பது விசனத்துக்குரியது. அக்காலப் பகுதியில் முனைப்பாக அருந்த சமூகப் பெறுமானம் உள்ள கலை இலக்கியங்கள், நாடகங்கள் படைக்கப்பட வேண்டும் என்ற ஒரு வகை தீர்மான வாதம் (Determinism) இத்தகைய பிரச்சனைகளுக்குக் காரணமாகும். பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோராலும் இவர்களைச் சார்ந்து நின்றோராலும் வழிமொழியப் பட்ட இத்தீர்மான வாதம் கலை இலக்கியங்களில் ஒருவகை வரட்டுத்தனமான போக்கை ஊக்குவித்தது. இந்தத் தீர்மானவாதத்தின் அடிப்படைப் பிழையானது, சமூகப் பெறுமானம் அல்ல சமூக உணர்வை தொழிலாளர் வர்க்கப் பிரச்சனையோடு மட்டும் சமப்படுத்தித் ஏனையவற்றைப் புறக்கணித்தமையாகும். மக்கள் என்னும்போது தொழிலாளர்கள் அதுவும் ஆண் தொழிலாளர்களையே கருத்திலெடுக்கப்பட்ட போக்கு வைதிக மார்க்சியர்களிடம்இருந்தது. இந்தப் போக்கின் சிறப்பான வெளிப்பாடு நாடகத்துறையிலும் காணப்பட்டது.

புதியதொரு வீடும் 'கடுழியமும்' 71இல் மேடையேற்றப்பட்ட பிற்பாடு இவை இரண்டைப்பற்றியும் விமர்சன ரீதியான கருத்துப் பரிமாற்றம் ஒன்று நடந்த வேளை விமர்சகர் மு. நித்தியயானந்தன் புதியதொரு வீட்டில் வர்க்கப் பார்வை இல்லை என்ற கருத்தை முன் வைத்தார் இதனைப் போன்றதொரு கருத்தையே இலங்கை வானொலிக் கலைக் கோலம் நிகழ்ச்சியில் பேராசிரியர் கைலாசபதியும் தெரிவித்திருந்தார். 70களில் நல்ல நாடக அரங்கு வளர்ச்சிக்கு உந்து விசையாக இவ்விரு நாடகங்களும் இருந்தன என்ற அடிப்படைப் புள்ளியைத்

தவறவிட்டுச் செய்யப்பட்ட இவ் விமர்சனங்கள் கோட்பாட்டு ரீதியில் மார்க்ஸிய இலக்கிய விமர்சனம் எவ்வளவு பின்தங்கிப் போன நிலையில் அன்று இருந்தது என்பதையே காட்டுகிறது. இது குறித்து பெரிதாக ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் அக்காலப்பகுதியில் கலை, இலக்கியம், விமர்சனம் ஆகிய துறைகளில் மட்டுமல்லாமல் சமூகவியல், அரசியல், மானுடவியல் போன்ற சமூகவிஞ்ஞானத் துறைகளிலும் பொருளியல் தீர்மான வாதம் பலமுற்றிருந்த வேளையாகும். மேலும், ஆட்சியின் இரும்புப் பிடிக்குள் சிக்குப் பட்ட மார்க்ஸியமும் ஒருவகை வைதிகத்தன்மை வாய்ந்ததாகவே கட்சிகளால் பின்பற்றப்பட்டது.

மூன்றாவது முக்கியமான நெறியாளரான மௌனகுரு முன்னிருவரைவிட வேறுபட்டவர். மட்டக்களப்பு மண் கொடுத்த மரவுவழிக் கூத்தும் பேராதனைப் பல்கலைக் கழக நாடக அனுபவங்கள் முயற்சியுமே அவரது ஆளுமையை ஆரம்பத்தில் நெறிப்படுத்தியதெனலாம். பின்னர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமும், நுண்கலைத்துறையும், கூத்து, பரதம், கதகளி போன்ற அம்சங்களை நாடகங்களுடன் இணைக்கும் பரிசோதனை முயற்சிகளிலும் அவரது கவனம் திரும்பியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வித்தியானந்தனுடன் இணைந்து பணிபுரியும் காலை மௌனகுரு பிரதியாக்கம் செய்த இராவணேசன், வாலிவதை போன்ற பரபுவழி நாடகங்கள் கூத்து மறுமலர்ச்சியில் முக்கியமான படிகள் எனலாம். பின்னர் சங்காரத்தை முற்றிலும் வேறான உள்ளடக்கத்தோடு எழுதுவதற்கும் இவையே பயில் புலமாயிற்று எனலாம். இதுவரை காலமும் புரான இதிகாசங்களை சுற்றிச் சுற்றியே இருந்த மரபுவழி நாடகத்தை நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தமை முக்கியமானதாகும். ஒரு வகையில் இந்தப் போக்கின் தொடர்ச்சியே கந்தன் கருணையும் எனலாம்.

இராவணேசனும், வாலிவதையும் புதிதாக எழுதப்பட்ட பிரதிகளே. ஒரு பாத்திரத்தினை மையப்படுத்தி எழுதப்பட்டு சட்ட முறைகளும் அமைக்கப்பட்டது. வாலிவதையில் பெரும்பாலான பகுதிகள் நாட்டுக்கூத்து முறையிலும்பிற்பகுதி நவீன நாடக முறையிலும் அமைக்கப்பட்டன என்று தெரிகிறது. இவை மரவுவழி நாடகத்தை நவீன நிலைக்கு உயர்த்தும் ஒருவகைப்பரிசோதனை முயற்சியே என்றால் பிழையன்று. சக்தி பிறக்குது' (மௌனகுரு) குருஷேத்திரோபதேசம்(ஞானி) புதியதொரு வீடு, அதிமானிடன் (நு∴மான்) தலைவர் (அயனெஸ்கோ) போர்க்களம், மற்றும் பாடசாலை அரங்குக்காக 'விடிவு' 'சரிபாதி' 'தாடி ஆடு', நம்மைப் பிடித்த பிசாசுகள்' போன்றவற்றையும் எழுதி நெறியாட்சி செய்தார்.

எழுபதுகளின் பிற்பகுதியிலும் 80களிலும் கணிசமான அளவு நாடக அரங்கப் பிரக்ஞையை பாடசாலை மாணவர்களிடை உருவாக்குவதிலும் சிறுவர் நாடகத்துறையில் மேற் குறிப்பிட்ட நாடகங்கள் முக்கியமானவை.

எனினும் கூத்தும், பரதநாட்டியமும் சேர்த்துப் பயன்படுத்தப்படும் அவருடைய எல்லா நாடகங்களிலும் இவை சீராக இணைகிறது என்று சொல்ல முடியாது. இவை இரண்டினதும் இணைவு சக்திபிறக்குது இறுதிக்காட்சியிலே மிகவும் காத்திரமான முறையில் அமைந்திருந்தது. 'சக்தி பிறக்குது' நாடகத்தினதும் பலவீனம் முன்பு 'விழிப்பு' பற்றிச் சொல்லியது போல பெண்விடுதலை (தொடர்பான கருத்துக்களைச் சில இடங்களில் பத்திரிகைத் துணுக்கு போலத் தருவது.) அதிமானிடனை மௌனகுரு மேடைக்கோலம் என்றுதான் அழைக்கிறார். ஒரு கவிதையை எவ்வாறு பலம்மிக்க நாடகமாக ஆக்க முடியும் என்பதற்கு அது சிறப்பான உதாரணம். இது போலவே மஹாகவியின் 'தேரும் திங்களும்' மேடையிடப்பட்டது. எனினும் இவ்வாறான புதிய முயற்சிகள் மேலும் தொடரவில்லை. தொடர்ந்திருந்தால் வேறு பரிணாமங்கள் எமது நாடக அரங்குக்குக் கிட்டியிருக்கும்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் முகிழ்த்த இந்த மூன்று நெறியாளர்களையும் (உண்மையில் அவர்கள் நல்ல நடிகர்களாகவும் இருந்தார்கள்) நாடக ஆளுமைகள் (Theatre Personalities) என்பதே பொருந்தும். இவர்களூடாகவும் பல்கலைக்கழக வளாகங்கள் சார்ந்தும் முக்கியமான பல நடிகர்களும், நெறியாளர்களும் பின்னர் தோன்றினர். பாலேந்திரா, மாவை நித்தியானந்தன், கௌரி சங்கர் ஆகியோர் முக்கியமானவர்கள் கௌரி சங்கர் 'பிச்சை வேண்டாம்' நாடகத்தை தாசீசியஸின் தயாரிப்பில் இருந்து வேறுபட்டு முற்றிலும் புதிய விதமாகத் தயாரித்தார். அந்த ஒரு தயாரிப்பிலேயே தன்னுடைய முத்திரையைப் பதித்தவர். பின்னர் எங்கு போனார் என்று தெரியவில்லைஅங்கதச் சுவைக்கும், அரசியல் கேலிக்கும் மாவை நித்தி மிகுந்த லாவகமான ஒரு நாடக ஆசிரியர். அவருடைய 'ஐயா எலெக்ஷன் கேட்கிறார் எளிமையான ஆனால் பாதிப்புமிக்க அரங்கக் கலையாகும்.

1974வரை இலங்கைக் கலைக்ழகத்தமிழ் நாடகக்குழுவின் பங்கு மரபு வழித் தமிழ் நாடகங்களைப் பதிப்பிப்பது என்ற மிகவும் முக்கியமான பங்கைச் செய்தது.தவிர பிரதேச கலாமன்றங்களையும் இவ்வழியில் ஊக்குவித்தது. எனினும் நவீன நாடக பிரக்ஞையை உருவாக்குவதில் இக்கழகங்களால் 74 வலை பெரிதாய எதையும் சாதிக்க முடியவில்லை. நவீன நாடக எழுத்துப் பிரதிகளுக்குச் சன்மானம் வழங்கும் முயற்சியிலீடு பட்ட கலைக்கழகம் பரிசு வழங்கிய எல்லா நாடகப் பிரதிகளும் ஒன்றில் வரலாற்று நாடகங்களாக இருந்தன: அல்லது சமய நாடகங்களாக இருந்தன, சொக்கன், ஏ.ரி. பொன்னுத்துரை, முத்து சிவஞானம், த. சண்முகசுந்தரம் போன்றோரே கலைக்கழகம் வழி ஊக்குவிக்கப்பட்டவர்கள். 74வரை கலைக்கழகத்திற்கு பொறுப்பாக இருந்த பேராசிரியர் வித்தியானந்தனின் நவீன நாடகம் பற்றிய பரக்ஞை இன்மைதான் அத்தகைய 'வரலாற்றுப் போக்கு' தூங்கலாக ஏற்படக் காரணம் என்று சொல்லத் தோன்றுகின்றது. 1966இல் 'கோடை' (மஹாகவி) கலைக்கழக நாடகஎழுத்துப் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கோடைக்கு மூன்றாவது பரிசே கிடைக்கநேர்ந்தது என்பது அக்காலத்தைய கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் நவீன நாடகப் பிரக்ஞை எவ்வளவு தூரம் இருந்தது என்பதற்கு நல்ல சான்றாகும். எனினும் 75களின் பின் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு பேராசிரியர் சிவத்தம்பியின் தலைமையில் குறிப்பிடத்தகுந்த தமிழ் நாடகவிழாக்களை நடாத்தியது.

70களின் இன்னொரு முக்கியமான போக்கு 'ரசிகர் அவை' களின் உருவாக்கமாகும். நல்ல நாடகங்களைத் தொடர்ந்து மேடையேற்றுவதற்கு கலைஞரிடையே ஒரு நாடகக் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்கும் நாடகம், அரங்கு பற்றிய பிரக்ஞையை பரவலாக்குவதற்கும் இத்தகைய ரசிகர் அவைகள் ஒரு நல்ல ஊடகமாகத் தொழிற்பட முடியும். 70இல் நடிகர் ஒன்றியம் கொழும்பில் உருவாக்கிய ரசிகர் அவையும் பின்னர் யாழ் நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்று கலைக் கழகம் ஆகியவை உருவாக்கிய ரசிகர் அவைகளையும் நாம் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும்.

பின்நோக்கிப் பார்க்கும் போது 70களின் இந் நவீன நாடகப் போக்கு தேசிய இனப் பிரச்சினை தொடர்பான அரசியல் அரங்கு எதனையும்

உருவாக்காத போதும் 77இல் இனக்கலவரம் இந் நவீன நாடகப் போக்குடன் தொடர்புற்றிருந்த பெரும்பாலானோரை கொழும்பிலிருந்து இடம் பெயர்த்தது. இதன் பின் யாழ்ப்பாணமே நவீன நாடகங்களின் களமாயிற்று என்பது அவதானிக்கத்தக்கது. 77இன் பின் நவீன நாடக போக்கையும், பிரக்ஞையையும் உந்தித் தள்ளிய இரண்டு முக்கியமான நிறுவனங்கள் அவைக்காற்றுக் கலைக்கழகமும், நாடக அரங்கக் கல்லூரியுமாகும். அவற்றை விட மௌனகுரு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தளமாகக் கொண்டு தனியே நாடகங்களைத் தயாரித்தாலும் பின்னர் நாடக அரங்கக் கல்லூரியோடு சேர்ந்து கொண்டார். அவைக்காற்றுக் கலைக்கழகத்தினூடாக வெளி வந்த ஆளுமை பாலேந்திராவாகும். அவர் மேடையிட்ட நாடகங்களை பட்டியலிட்டால் எவரது கவனத்தையும் உடனடியாக ஈர்க்கக்கூடியது அது. அரங்கக் கலையின் பலவித சாத்தியப் பாடுகளையும் தயாரிப்பு நேர்த்தியின் இன்றியமையாமையும் உயர்ந்த கற்பனை வளத்தையும் அவரது நெறியாள்கை வெளிக்காட்டிற்று. குறிப்பாக கண்ணாடி வார்ப்புக்கள் (ரெனஸி வில்லியம்ஸ்) ஒரு பாலை வீடு' (லோர்க்கா, யுக தர்மம்) (பிரஃட்) என்பன அவருடைய நெறியாள்கையின் சிறப்பைப் புலப்படுத்துவன. அவைக்காற்று கலைக் கழகத்தினூடாகவே பாதல் சர்க்கார், ரெனஸி, வில்லியம்ஸ் மோகன்ராகேஷ், லோகா போன்ற நாடக ஆளுமைகள் ஈழத்துத் தமிழ்நாடக உலகிற்கு அறிமுகமாயின.

நாடக அரங்கக் கல்லூரியினூடாக வி.எம். குகராஜா, எல். எம். ரேமன், சிதம்பரநாதன் ஆகியோர் நெறியாளர்களாக அறிமுகமாயினர். 'கோடை' கந்தன் கருணை' பொறுத்தது போதும்' 'இருட்டினில் குருட்டாட்டம்' சங்காரம்' 'உறவுகள்', போன்ற பல நாடகங்களை மேடையிட்டது மட்டுமன்றி நாடக அரங்கக் கல்லூரி களப் பயிற்சிகளையும், நாடக அரங்க வகுப்புகளையும் தொடர்ந்து நடாத்தி வந்தது. 'அரங்கம்' என்ற நாடகம்சஞ்சிகையையும் அவர்கள் சில காலம் வெளியிட்டு வந்தனர். அவற்றுக்கு மூல காரணியாக நின்று குழந்தை ம. சண்முகலிங்கம் தொழிற்பட்டார்.

இக்கால கட்டத்தில் நாடகம், அரங்கம் பற்றிய பிரக்ஞை வெகுசனமயமாக்கப் 'படுவதற்கு இவை மிகவும் முக்கியமான பங்காற்றின. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கற்கை நெறி இருப்பதும் பலர் க.பொ.த உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக எடுப்பதும் மேற்குறிப்பிட்ட முயற்சிகளின் ஒரு உச்சம் எனலாம்.

எண்பதுகளில் இன்னுமொரு முக்கிய போக்கு ஆரம்பமாயிற்று. அது தேசிய ஒடுக்கு முறையுடனும் தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்துடனும் நேரிடையாகத் தொடர்புற்றுள்ளது. இதனை எதிர்ப்பு இலக்கியம் என அழைக்கலாம். நாடகத்தில் இதனுடைய முக்கிளமான வெளிப்பாடுகள் 'மண்சுமந்த மேனியன்' (இரு பாகங்களும்), 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்', 'மலரும் புதுயுகம்' ஆகியனவும் பல வீதி நாடகங்களும் ஆகும். அவற்றினூடாக வெளிப்பட்ட நாடக ஆளுமைகள் 'குழந்தையும் சிதம்பரநாதனும்' ஆவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நாடக சூழலும் குறிப்பாக சி.மௌனகுரு தயாரித்த 'புதியதொரு வீடு' அதிமானிடன் தலைவர் போன்ற நாடகங்களுக்கு ஊடாக சிறந்த நடிகராக வெளிப்பட்டு பின் நாடக அரங்க கல்லூரியின் பயிற்சிகளுனூடாகவும் தாசிசியஸ், குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரின் நெறிப்படுத்தலாலும் புடமிடப்பட்ட சிதம்பரநாதன் நாடக அரங்கக் கல்லூரி உருவாக்கிய மிகச் சிறந்த கலாபூர்வமான நெறியாளர் அவர். மண் சுமந்த மேனியர் அவருடைய நெறியாட்சியின் மேன்மையை உயர்ந்த முறையில் வெளிக்காட்டியது. மண்சுமந்த மேனியரும் அதன் உருவான மாயமானும் (வீதி நாடகம்) தயாரிப்பு வேலைகளிலே அது வரை காலமும் இருந்து வந்த பாரம்பரியத்தில் இருந்து மாறுபட்டு நிற்கின்றன. நாடகாசிரியர், நெறியாளர் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் அனைவரும் ஒன்று கூடி சூழலின் யதார்த்தத்தைப்பற்றி ஆலோசித்து, கலந்துரையாடி சில அடிப்படை அம்சங்களில் நாடகம் பிரதி, நோக்கம் குறித்து உடன்பாட்டுக்கு வருகின்றனர். அதன் பின்னர் பிரதி எழுதப்படுகிறது. அரசியல் அரங்கை (Political Theatre) பொறுத்த வரை இத்தகைய கூட்டு முயற்சிகள் பல அம்சங்களிலும் காலத்தின் தேவையாக இருந்தது.

மண்சுமந்த மேனியர், மாயமான் ஆகியவற்றுடன் நானும் சம்பந்தமுற்றுள்ளவன் என்ற வகையில் நான் கூறும் கருத்துக்கள், கோட்பாடு, நடைமுறை ஆகிய தொடர்பாக குறித்த ஒரு காலப்பகுதியின் பிரச்சினைகளுக்கு (கலை, இலக்கிய அரசியல்) எவ்வாறு எதிர்ப்பினைக் காட்டினோம் என்பதையும் இவ் எதிர்ப்பினையும் அதன் விளைவான praxis உம் எவ்வாறு கலை இலக்கிய அரங்கம் போன்றவற்றில் எங்களுடைய கருத்துக்களை political content function தொடர்பாக தீவிரமாக (radical) மாற்றின என்பதையும் அடியொற்றியே இருக்கும்.மேற்படி நாடகங்கள் தொடர்பான விமர்சனம் அபிப்பிராயங்களையும் நான் மற்றையவர்களுக்கு விட்டுவிடுகிறேன். 1973இல' தேசிய தமிழ் நாடக விழா கொழும்பில் நடைபெற்ற போது அரங்கில் பாதியளவுதான் பார்வையாளர்கள் இருந்தார்கள் என்று ஒரு விமர்சகர் ஆதங்கப்பட்டார். 85இல் மண்சுமந்த மேனியர் மேடையிடத் தொடங்கிய போது பல சந்தர்ப்பங்களில் மக்கள் தொகை கட்டுப்படுத்த முடியாமல் அளிக்கைகள் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டியிருந்தது. இன்று பொதுவாகவே நாடகங்களுக்கு ஒரு நாளில் குறைந்த பட்சம் இரண்டு கணிக்கைகள் தேவையாக உள்ளது. இது ஆரோக்கியமான ஒரு அம்சம்தான்.

மண் சுமந்த மேனியனை மேடையேற்றிக் கொண்டிருக்கின்ற நாட்களில் தான் படச்சட்ட மேடையும் அரங்கும் கணிசமான அளவு limitation ஐக் கொண்டுள்ளன என்பது தெரியவந்தது. தரப்பட்ட மக்களையும் சென்றடைய வேண்டுமானால் என்பது தெரியவந்தது. பல தரப்பட்ட மக்களையும் சென்றடைய வேண்டுமானால் அதாவது நாடகம் தன்னுடைய அரசியல் தொழில்பாட்டை (Political Function) விரிவுபடுத்த வேண்டுமானால் இந்த பாரம்பரிய படச்சட்ட அரங்கு ஒரு சட்டத்திற்கு மேல் உதவப் போவதில்லை.

இந்தப் புரிதல் ஏற்பட்ட பிறகுதான் மண்சுமந்த மேனியரில் இறுதிப் பாடல் சேர்க்கப்பட்டு நாடக முடிவில் நடிகர்கள் மேடையை விட்டு இறங்கி பார்வையாளர்களோடு சேர்கிறார்கள். பாடல் அனைவராலும் பாடப்படுகிறது. இந்த அனுபவத்தின் அடியாகத் தான் மாயமான் எல்லா இடங்களிலும் கணிக்கை செய்யப்படக்கூடியதாகவும், ஒப்பனை, அதிகளவு சுயகீதம் பின்னணி இல்லாமல் பாதல் சர்க்கலார் சொல்கிற ஐந்தாவது அரங்கிற்கு கொண்டு செல்கின்றோம். இது ஒரு வகையில் பார்வையாளர்களுடன் நேரடி உறவை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

இந்த போக்கில் பிரதானமான குறிக்கோள்களில் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுதல், சமகால பிரச்சினைகளைப் பற்றிய பகுப்பாய்வுகளை அரங்கத்தின் ஊடாக மக்கள் முன் வைத்தல், மக்களுக்கு மற்றெந்த வெகுசனத் தொடர்பு சாதனங்களும் சொல்லாத அல்லது சொல்ல மறுக்கும் உண்மைகளை சொல்லுதல்.

# பிராயச்சித்தம்

## சிறுவர் நாடகம்

செல்வன் ஆனந்தரமணன்
திருகோணமலை

***(திரை விலக மேடைக்கு இரு பாத்திரங்கள் பாடி ஆடிய படி வருகின்றனர்)***

பாடுனர்:- வந்தோம் வந்தோம் இதோ தந்தோம் தரிசனமே
தத்தத் தரிகிட தோம் - தித்தம் தரிகிட தெய்
(என்று ஆடி ஒருவரை ஒருவர் பார்த்தாற் போல் நின்று பின்னர்)

பாடுனர்:- 1. அறிவு நிறைந்த பிள்ளைகளே
2. ஆற்றல் மிக்க பிள்ளைகளே
அறிவில் நிறைந்த ஒருவரைப்பற்றி
அழகாய் நாங்கள் நடிக்க வந்தோம்

பாடுனர்:- 1. அறிவில் நிறைந்த ஒருவர் அவர் யார் தெரியுமா?
2. தெரியாது யாரண்ணா அவர்?
1. அவர் தான் தென்னாலிராமன், இந்தியாவிலே தென்னாலி என்ற ஊரிலே வாழ்ந்தவர்.
2. அப்படியா அண்ணா?
1. ஆம், அவர் நகைச்சுவை மிக்கவர், அறிவுக் கூர்மை உடையவர். தருணத்திற்கு ஏற்றவாறு சாதுரியமாகப் பேசும் தன்மை உடையவர்.
2. அப்ப, தந்திரச் யெலுக்கு பெயர் பெற்றவர் என்று சொல்லுங்கோ
1. ஆமாம் அப்படித்தான் அவரைப்பற்றி இப்ப பாருங்கோ ஒருநாள் திடீர் என்று தென்னாலி இராமனுக்கு வயிற்றுவலி வந்துவிட்டது அதோ (என்று கூறி உறை நிலையாக மேடையில் தென்னாலி இராமன் வயிற்று வலியால் துடித்துக் கொண்டு இருக்கிறார்.)

தென்ரா:- ஐயோ, அம்மா, ஆ, ஓ, ஐயோ (மனைவி ஒரு புரோகிதரை கூட்டிக் கொண்டு ஓடி வருகிறார்)

மனைவி:-புரோகிதரே! எனது கணவருக்கு என்ன நோய் இருக்கிறதோ தெரியவில்லை?

புரோகிதர்:-காற்றைப்போல் நோயும் கண்ணால் காணமுடியா தம்மா.

மனைவி:- புரோகிதரே இந்த நோய் வந்தற்கான காரணம் என்ன?

புரோதிகர்:- (கெட்ட சிந்தனையுடன் யோசிக்கிறார்) நோய்க்கான காரணம்.......ம்

பாடுனர்:- 1. உறை நிலையில் நின்று அசைந்து இந்தப் புரோகிதருக்கு தென்னாலிராமன் மீது ஒரு பழைய கோபம் இருந்தது
2. என்ன கோபம்.

பாடுனர்:- 1. முன்பு ஒரு முறை இந்தப் புரோகிதர் தென்னாலிராமனால் நன்றாக பரிகசிக்கப் பட்டுள்ளார்.
2. அந்த ஆத்திரத்தை வைத்து இப்போது சதிசெய்யப் போகிறாரோ?

பாடுனர்:- 1. பார், பார் நாமும் இருந்து பார்ப்போம் (என்று மேடையில் இருந்து இறங்கி பார்வையாளர்களுடன் அமர்ந்து கொள்கின்றனர்)

புரோகிதர்:-(தனிமொழி) இந்த தென்னாலிராமன் முன்னர் பலர் முன்னிலையில் என்னை கேலிசெய்து அவமானப் படுத்தினார் இவருக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். ( என்று யோசனையில் நிலையாக நின்று சொல்கிறார்)

புரோகிதர்:- அம்மணி முன்பு அந்தணரை கேலிசெய்த பாவம் தான் இப்போது உன் கணவரை வாட்டுகிறது.

மனைவி:- அவர் அறியாமல் செய்த பிழைக்கு மன்னிப்பே இல்லையா சுவாமி?

புரோகிதர்:-அந்தப் பெரும் பழிதீர பெரியதோர் பிராயச் சித்தம் செய்ய வேண்டும்.

தென். இரா.:-ஐயோ.....ஆ.......அம்மா

மனைவி:-பிராயச் சித்தம் செய்யுங்கள் சுவாமி எப்படியும் என் கணவரை குணப்படுத்தி விடுங்கள்

புரோகிதர்:-பிராயச்சித்தம் செய்வதற்கு பெரும் பணம் தேவைப் படும்

மனைவி:-எவ்வளவு பணம் தேவை சுவாமி?

புரோகிதர்:-நூறு பொன்

தென். இரா:-நூறு பொன் ஆ....அது எங்கே இருக்கிறது?

மனைவி:-நீங்கள் பேசாமல் இருங்கள். நூறு பொன் இல்லா விட்டாலும் உங்களிடம் நல்ல குதிரை இருக்கிறதே.

தென். இரா.:-என் குதிரையா? ஆ....ஐயோ அம்மா.

மனைவி:-ஆம் அதை விற்று வரும் பணத்தை கொடுக்கலாம்.

தென். இரா.:-புரோகிதரே! இதைவிட குறைந்த பிராயச்சித்தம் ஒன்றும் இல்லையா?
ஆ.....ஐயோ....அம்மா

புரோகிதர்:- இல்லை நீ செய்த கருமத்துக்கு இதுதான் ஆகக் குறைந்தது.

மனைவி:- சுவாமி! அவர் துடிப்பதை பார்க்க முடியவில்லை. நான் அதை விற்று உங்களுக்கு காசு தருகிறேன். நீங்கள் ஆக வேண்டியதை கவனியுங்கள்.

தென். இரா.:- (யோசிக்கிறார். பின்னர்) ஆ.... ஐயோ, அம்மா, உமக்கு குதிரை விற்ற காசை மட்டும் தந்தால் சரிதானே?

புரோகிதர்:-ஆம் குதிரை வித்த காசு முழுவதையும் தர வேண்டும்

மனைவி:- சுவாமி நீங்கள் பிராயச்சித்த பூசையை ஆரம்பியுங்கள்

புரோகிதர்:- தென்னாலிராமா! நீர் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் பிறகுவாக்கு மாறக்கூடாது.

தென். இரா.:-இல்லை ஐயா நீங்கள் பூசையை ஆரம்பியுங்கள். (தென்னாலிராமனை அமரவைத்து புரோகிதர் பூசைக்கு வேண்டியவைகளை தனது பையிலே இருந்து எடுத்து பூசை செய்கிறார். பூசை முடிந்ததும் புரோகிதர் ஏதோ குடிக்க கொடுக்கின்றார்)

புரோகிதர்:-நீர் சற்று சாய்ந்து நித்திரை கொள்ளும்! நீர் எழும்பியதும் குதிரையை விற்று நான் காசை வாங்கிக் கொள் கின்றேன். (தென்னாலிராமன் சாய்ந்து உறங்குகின்றார். மனைவியும் புரோகிதரும் சிலையாக இருக்க)
(பார்வையாளர்களுடன் இருந்த பாடுனர்கள் மேடைக்கு வருகின்றனர்)

பாடுனர் 1+2:புரோகிதன் பிழையொன்று செய்திட்டார்
இராமனின் திறமையை புரியாமல் செய்திட்டடார்
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
என்ற முதுமொழி மறந்து செய்திட்டார்
தன்னான தன்னான தன்னான தன்னான
தன்னான தன்னான தன்னான தன்னான
விதைத்தது எதுவோ அவர்
அறுப்பதும் அதையே அதனால்
நன்மை செய்து மேன்மை அடைவாய்
தீமையைச் செய்தால் அல்லலே படுவாய்
தன்னான தன்னான தன்னான தன்னான
தன்னான தன்னான தன்னான தன்னான
உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசும்
குள்ளநரிப் புரோகிதன்
மூக்கறப் போகிறார்
தன்னான தன்னான தன்னான தன்னான
தன்னான தன்னான தன்னான தன்னான

பாடுனர்:- 1. அண்ணா! என்ன நடக்கப் போகிறது? பாவம் தென்னாலிிராமன் தன்ர குதிரையை விக்கப் போகிறார்

பாடுனர்:- 2. போடா மடையா அதை எப்படி நீ சொல்லுவாய்? பொறுத்து இருந்து பார் (தென்னாலிராமன் நித்திரையில் இருந்து எழும்புகிறார் புரோகிதர் எழுந்து தென்னாலிராமன் அருகில் நின்று)

புரோகிதர்:-தென்னாலிராமா? எப்படி உனக்கு சுகம்தானே? உனது குதிரையை விற்று காசைதா. (மனைவியைப் பார்த்து) அம்மணி நீ தரச்சொல்லு

மனைவி:- (குதிரையை அழைத்து வருகிறாள்) இந்தாங்கோ இதை வித்து சொன்ன மாதிரி கொடுத்து விடுங்கோ

தென். இரா.:- (அதை கையில் பிடித்துக் கொண்டு) அந்தப் பூனையையும் பிடித்து தாரும்

மனைவி:- எதுக்கு பூனை? இப்போ இதைக் கொண்டே முதலில் வித்து கொடுங்க. (புரோகிதர் இருவரையும் மாறி மாறிப் பார்க்கிறார்)

பாடுனன்:- 2. (பாடுனர் மேடையில் ஏறி) அண்ணா எதுக்கு பூனை இவருக்கு?

பாடுனன்:- 1. கொஞ்சம் பொறு! பொறு (அவர் இறங்கி வந்து பார்வையாளருடன் அமர்கின்றனர்)

தென். இரா.:- நான் சொல்லுறதைச் செய்யும். பூனையைப் பிடித்துப் தாரும் (பூனையை பிடித்து கொடுக்கிறார்)
வாரும் குதிரையை வித்து தாரன்.
(இருவரும் மேடையை விட்டு நகர்கின்றார்கள் புரோகிதர் மிகுந்த மகிழ்ச்சியுடன் செல்கின்றார்)

மனைவி:- இண்டைக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகுது. புரோகிதர் பாவம் ம், கடவுளே! (மனைவி மேடையை விட்டு நகர்கின்றாள். மேடை வெறுமையாக உள்ளது) (சந்தைக்கு போகும் வழியில் தென்னாலிராமனுக்கு மிகவும் தெரிந்த ஒருவர் வருகின்றார்)

பரதன்:- இராமா என்ன குதிரையுடன் இந்தப்பக்கமாக .....

தென் இரா.:- இந்த குதிரையை விற்பதற்க சந்தைக்கு செல்கின்றேன்

பரதன்:- அட நல்ல குதிரை! இதற்கு என்ன விலை சொல்லப் போகிறாய்?

தென். இரா.:- ஏன் நீ இதை வாங்கப் போகிறாயா?
ஆம். இதன் விலையை சொல்லு.

தென். இரா.:- (திரும்பி புரோகிதரை பார்க்கிறார் புரோகிதர் மிகவும் மகிழ்ச்சியடைந்து உள்ளார்) நீ இதை எடுப்பதற்கு ஒரு நிபந்தன்ன உண்டு (புரோகிதர் திடுக்கிட்டு யோசிக்கின்றார்)

பரதன்:- குதிரை வாங்கவும் நிபந்தனையா? விலைதான் சொல்லுவார்கள்

தென். இரா.:- இந்தாரும்! நான் சொல்கிறதைக் கேளும். நீர் குதிரையை வாங்க வேண்டுமென்றால் பூனையையும் வாங்கவேண்டும். (என்று பூனையை காட்டுகிறார்)

பரதன்:- (அவன் சிரித்தவாறு) பூனையுமா? எனக்கு பூனை வேண்டாம் குதிரையை மட்டும் தந்தால் போதும்

தென். இரா.:-குதிரை விலை ஒரு பொன், பூனை விலை நூறு பொன் உமக்கு குதிரை வேண்டுமென்றால் இரண்டையும் வாங்கும் இல்லாவிட்டால் நடையை கட்டும் நான் வாறன்.

பரதன்:- இராமா இந்தா 101 பொன் இரண்டையும் தா (என்றதும் இராமன் இரண்டையும் கொடுக்கின்றான்) அவன் பூனையை ஓடவிட்டு குதிரையை கூட்டிச் செல்கிறான். புரோகிதர் இவனது தில்லு முல்லையும் பார்த்து குதிரை விலை சொன்ன உடனே மயங்கி விழுகிறார்)

இராமா:-(காசைப் பார்த்து மடித்து 100 பொன்னை தனது சட்டைப்பையினுள் வைத்து ஒரு பொன்னை) புரோகிதரே! நான் சொன்ன படி உமக்கு குதிரையை விற்று காசு முழுவதையும் தந்து விடுகிறேன் இந்தாரும், குதிரை விற்ற ஒரு பொன் (என்று திரும்பவும் அவர் விழுந்ததை கண்டு சிரித்து விட்டு) புரோகிதரே! புரோகிதரே இந்தாரும் குதிரை காசு (என்று சிரித்துக் கொண்டு 1 பொன்னை புரோகிதரின் கைக்குள் வைத்து விட்டு நிமிர்ந்து அவர் வெளியே செல்ல பார்வையாளருடன் இருந்த பாடுனர் மேடைக்கது வந்து.)

பாடுனர்:- 1. பார்த்தீர்களா? தென்னாலிராமனின் புத்தி சாதுரியத்தை. இதற்குத் தான் பிறரை சும்மா சுறண்டக்கூடாது கெட்டது நினைத்தால் கெட்டது தான் நடக்கும்

பாடுனர்:- 2. நஞ்சினை நெஞ்சில் வைத்து
வஞ்சகச்செயல்கள் செய்த
வெஞ்சத்துப் புரோகிதர்
வீழ்ந்திட்டார் இராமனிடம்
தத்தத்தரிகிடதோம்
தித்தத்தரிகிட தெய் தன
தன்னான தன்னான தன்னான தன்னான- 2
அவ தந்திரம் தனக்கந்தரம்
என்று சுதந்திரப் பழமொழியை
நிறுவிற்றான் இராமனும்
கருவி நின்ற புரோகிதர்
தலை கவிழ்ந்து வீழ்ந்திட்டார்
தத்தத்தரிகிடதோம்
தித்தத்தரிகிட தெய
சிரிக்க வைக்கும் இராமனே
சிந்தனையையும் தூண்டும்
விந்தைச் செயல்களினாலும் இவன்
விகடகவி என்ற பெயர் பெற்றிட்டான்
(இந்தப் பாடலுடன் திரை மூடுகின்றது)

## 46வது பேர்லின் திரைப்பட விழா

பல பிரபல நடிகர்கள், சினிமா இயக்குனர்களின் கைவண்ணத்தில் உருவான திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்ட இவ்விழாவின் யூரிக்கான தலைமையை Nikita Mikhalhov ஏற்றிருந்தார். வழமைபோல் அமெரிக்க திரைப்பட ஆதிக்கம் இவ்விழாவையும் விட்டு வைக்கவில்லை.

சீன, யப்பானிய திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டது மட்டுமன்றி, பிரபல யப்பானிய திரைப்பட இயக்குனரான Kurosawa ன் Barberousse என்ற படத்தின் மீளாய்வுக் கணிப்பும் இங்கு குறிப்பிட த்தக்கதாகும்.

தாய்வானைப் பிறப்பிடமாய் கொண்டவரும், அமெரிக்கா வாசியுமான Arng Lee அவர்களால் இயக்கப்பட்ட Sense and Sensibility ன் நாவலைத்தழுவி, பிரபல ஆங்கில நடிகையான Emma Thompson திரைக்கதை எழுதிட, அவரே இப்படத்தில் முக்கிய பங்கொன்றையும் ஏற்று நடித்துள்ளார். பல ஒஸ்கார் விருதுகளுக்குத் தெரிவாகியிருக்கும் இப்படம் கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்தில் உள்ள குடும்பம் ஒன்றில் உள்ள பெண் களின் நிலையையும் அவர்களது சமூக உரிமைகளையும், சிறந்த கணவனை அவர்கள் தேர்வு செய்யும்போது ஏற்படக் கூடிய முரண்பாடுகளையும் சித்தரிக்கின்றது.

இவ்விழாவிற்கு தெரிவு செய்யப்பட்ட பிரெஞ்சுப் படங்களில் ஒன்றான Le Journal d'un seducteur (ஒரு கவர்ச்சிக்காரனின் நாளாந்த ஏடு) அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. குறிப்பாக, அழகியலுணர்வுக்கும், ஒழுக்க வியலுணர்வுக்கும் இடையே உள்ள மோதல்களை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்த, Daniell Dubroux அவர்களால் இயக்கப்பட்ட இத்திரைப்படம், பிரபல டென்மார்க் திரைப்படவாதியான Soren Kierkegaard ன் இருத்தலியல் சம்பந்தப்பட்ட தத்துவக்கோட் பாட்டின் பிரதிபலிப் பாகவுள்ளதென சினிமா விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# 20ம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்

## ரி. எஸ். எலியற் (1888 - 1965)

## என். கே. மகாலிங்கம்

ரி. எஸ். எலியற் எழுதிய கவிதைகள் கட்டுரைகள், நாடகங்கள், புத்தக விமர்சனங்கள் அதிகமானவை ஆனால் அவரைப் பற்றி எழுதிய கட்டுரை கள், நூல்கள் அதிலும் அதிகமானவை

1922 ல் பிரசுரமான அருடைய The Waste Land என்ற நீண்ட கவிதையுடன் அருடைய புகழ் உறுதிப் படுத்தபடுகிறது. அந்த நீண்ட கவிதைக்கு அவர் எழுதிய குறிப்புகளும் அக்கவிதை நூலிலே பிரசுரமானது. அக்குறிப்புக்கள் அக்கவிதையிலுள்ள பல குறியீடுகள் துணை ஆதாரங்கள் பல வற்றைப் புரிந்து கொள்வதற்குக் கொடுக் கப்ட்டுள்ளன.

எலியற்றை இலகுவில் வாசித்துப் புரிந்து கொள்ள முடியாது. இருப்பினும் முயன்று வாசித்தால் புரிந்து கொள்ள முடியும். எரிக் தொம்சன் என்ற விமர்சகர் கூறுவது போல எலியற் எளிமையான கவிஞரல்ல. அவருக்கு பல விசயங்கள் தெரிந்திருந்தது அல்லது அவருடைய காலம் சிக்கலானது என்பது அல்ல காரணம். அவர் சிறப்பான கவிஞர் என்பதனாலும் நம்பிக்கை குறைந்த ஒரு காலத்தில் ஒரு தத்துவக் கவிஞ்ராக வாழ் ந்தார். என்பதுவே காரணம் அவர் நவீன மனிதன் நம்பிக்கை அல்லது நம்பிக்கையற்ற பிரச்சினைகளைப் பற்றியே தன் கவிதைகளிலும், நாடகங்களிலும் எழுதினார். மிசூரி (அமெரிக்கா)வில் 1888 செப்ரம்பர் 26 ல் பிறந்தார். 1906 - 1910 ல் ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் படித்து தனது முதுகலைப்பட்டத்தைப் பெற்றார் பின் ஒராண்டு சோபோண (பிரான்ஸ்) பல் கலைக்கழகத்தில் கழித்து விட்டு திரும்பவும் ஹவாட்டில் கலாநிதி பட்டத்துக்கு படித்தார். இந்திய தத்துவம் சமஸ்கிருதம் கற்றார். அவருடைய ஆய்வு ஹேபேட் பிராட்லி என்ற தத்துவ ஞானி பற்றியது. ஆய்வை பூர்த்திசெய்த போதிலும் இறுதித் தேர்வை எடுக்கவும் இல்லை. ஹவாட்டுக்குத் திரும்பி வரவும் இல்லை.

ஜோர்ச் சான்ராயண, போபிற், ஹல்ம், பிராட்லி, போனறோர்களால் பாதிக்க பட்டிருக்கிறார். பிராட்லியின் உயர்ந்த எழுத்து நடைபற்றி பல இடங்களில் புகழ் ந்துள்ளார். அத்துடன் பிராட்லியின் தத்துவம் விரிந்த மனப்பாங்குடையது, பண்புள்ளது, உலகளாவியது என்றார். பிராட்லியின் பின்வரும் வாசகம் எலியற்றின் தத்துவம் நம்பிக்கை ஆகியவற் றுக்கும் பொருத்தமானது. ஒழுக்கம் பற்றிய சிந்தனை அதற்கப்பாலும் எங்களை இட்டுச் செல்லும் அதாவது சமயம் சார்ந்த நோக்கிலிருந்து பார்க்கும் தேவையும் எங்களுக்கு ஏற்படும்.

எலியற்றின் வளர்ச்சிக்கு அவர் வாசித்த இலக்கியங்கள் பெருமளவு துணை புரிந்திருக்கின்றன. ஆங்கில கவி ஞரும் விமர்சகருமான ஆதர் சிமொன்சின் The Symbolist Movement in Literature என்ற நூல் தன் வாழ்க்கையில் பாதிப்பேற்படுத்திய நூல் களில் ஒன்று எனவும் பிரெஞ்சுக் குறியீட் டாளர்களுக்குத் தான் பெரிதும் கடன் பட்டுள்ளர். எனவும் பலமுறை கூறியுள்ளார். Jules Laforgue என்ற பிரெஞ்சுக்கவிஞர் எப்படிப்பட்ட மரபுத் தொடர்கள் சாத்தியமானவை என்று முதன் முதல் தனக்குக் கற்பித்தார். என்கிறார் Boudelaire இடமிருந்து நவீன தலைநகரங்களிலுள்ள இழிவான விசயங்களையும் இழிந்த யதார்த்தங் களையும், மாயத்தோற்றங்களையும் இணைத்துக் காட்டும் சாத்தியப் பாட்டையும், மெய்ச்செய்திகளையும், விசித்திரங்களையும் அருகருகே வைத்து காட்டும் சாத்தியப் பாட்டையும் எனக்குக் காட்டினார். என்றார்

1915 ல் இங்கிலாந்துக்குப் பயணமானார். அப்போது தான் கவிஞர் எர்ஸா பவுண்டைச் சந்தித்தார். அவரின் தொடர்பு எலியற் கவிஞராக விமர்சகராக வளர்வதற்கு உதவியது. பவுண்டின் செல்வாக்கு எலியற்றில் ஆமானது மட்டு மல்லாமல் எலியற்றின் Love Song of J. Alfred Prufrock என்ற கவிதையை 1917 ல் Poetry இதழுக்கு அனுப்பிப் பிரசுரிக்கவும் செய்தார். அந்தக் கவிதை எலியற்றை அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளும் ஒரு கவிஞராக்கியது. பவுண்ட் கவிஞர்களை உருவாக்கவில்லை. ஆனால் கவிதைக்கான நவீன இயக்கத்துக்கான வாய்ப்பான சூழலை முதன்முதல் உண்டாக்கினர். அங்கே ஆங்கிலேய அமெரிக்கக் கவிஞர்கள் ஒருங்கிணைந்து ஒத்துழைத்தார்கள். பாஸ்பரம் செல்வாக்கை செலுத்தினார்கள். என்றும் எலியற் சொல்லுகிறார்.

18 ம் நூற்றாண்டில் கோல்றிச்சும் வேட்ஸ்வேத்தும் கற்பன உலகக் கவிதை புரட்சியைக் கொண்டு வந்ததைப் போல பவுண்டும் எலியற்றும் 20 ம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிதையில் விளங்கினர். எலியற்றின் The Sacred Wood (1920) வேட்ஸ்வேத்தின் Preface ஐப்போல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. நாங்கள் மெய்யான மனிதர்களின் கவிதை மொழிக்குப் போகவேண்டும் என்று சோற்தேர்வு (diction) பற்றி வேட்ஸ்வேத் கூறியது போல எலியற்றும் புலமைப்பாணியும் இல்லாத (அதேவேளை) இழிவானதும் இல்லாத (Neither Pedantic nor vulgar) சொற்தேர்வு அவசியம் என்றார்.

எலியற்றின் புறவய ஒப்புமைத் தொடர்பும் கோட்பாடு (objective Correlative) பிரபல்யமானது. ஹம்லற்றும் அவரது பிரச்சனைகளும் என்ற கட்டுரையில் அதைப்பின் வருமாறு

விளக்குகிறார். கலை உருவத்தில் மனக்கிளர்ச்சியை (Emotion) வெளிப்படுத்தக்கூடிய ஒரே வழி புறவய ஒப்புமைத் தொடர்பு மூலம்தான் காட்சிப் பொருள், சூழிடம், நிகழ்வுகள் தான் அந்தக் குறிப்பிட்ட மனக்கிளர்ச்சிக்கான (உணர்ச்சி) வாய்பாடு அந்நிலையில் புறக் காரணிகள் கிடைத்தவுடன் மனக்கிளர்ச்சி உடனடியாகத் தூண்டப்பட்டு விடும்.

அவருடைய இரண்டாவது சொற்றொடர் எளிதுணர்ச்சி தொடர்பறுதல் (Dissociation of Sensibility) ஜோன் டன், அண்ட்ரூமாவல் ஆகிய ஆங்கிலக் கவிஞர்களின் பின் வந்த மாற்றங்களைக் குறிப்பிடுகையில் இதைச் சொல்கிறார். சிந்தனையுடன் உணர்ச்சி இணைப்பு இல்லாமல் போவதையே அப்படிக் கூறுகிறார். எலியற்றும் பவுண்டும் 17 ம் நூற்றாண்டு கவிஞர்களில் கூடிய அக்கறை காட்டினார்கள் குறிப்பாக Metaphysical poets களில். எலியற்றின் பார்வை 1933 நோற்றன் விரிவு ரைகளுடன் மாற்றம் பெற்றது. அக்காலத்தில் அவருடைய விமர்சன் அக்கறை இறைமையியல் சமூகவியல் தத்துவம் போன்றவற்றிலும் சென்றது அவருடைய டான்ரே என்ற நூல் தலைசிறந்தது என்று கூறப்படுகிறது. அவருடைய விமர்சனக் கட்டுரைகளும் இந் நூலும் இலக்கியத்தை அல்லது கவிதையின் தரத்தை இலக்கியத் தரத்தை வைத்துப் பார்ப்பதா அல்லது வேறு தரங்களையும் வைத்துப் பார்ப்பதா என்ற கேள்வியை எழுப்புகின்றன. அக்காலத்தில் தான் அவர் அங்கிளிக்கன் சமயத்துக்கு மாறி இருந்தார். பிரித்தானிய பிரசையாகவும் ஆகி இருந்தார். அவருடைய வார்த்தைகளில் அவர் இலக்கியத்தில் செம்மையாளனாகவும் அரசியலில் முடியரசாளராகவும் சமயத்தில் ஆங்கில கத்தோலிக்கனாகவும் மாறி விட்டார்.

The Waste Land அவருடைய பிரபல்யமான கவிதை ஆனால் அவருடைய தலை சிறந்த கலைப் படைப்பு Four Quartets 1935 - 1941 காலத்தில் எழுதிய நான்கு கவிதைகளடாங்கிய தொகுப்பு. இதற்கே 1948 ல் நோபல் பரிசு கிடைத்தது.


Sweeney Agonistes The Elder Statesman Murder in the Cathedral என்பவை அவருடைய சிலகவிதை நாடகங்கள். அவை அவருடைய தன்னுணர்ச்சியான ஆழமான பாடல்களிள்கலும் தாழ்ந்தவை என்றே பல விமர்சகர்கள் கருதுகின்றனர். உலகியல் சார்த்த நாடகங்களுக்கு போகிறவர்கள் கூட பிரச்னை பூர்வமில்லாது சமய விழுமியங்களைத் தேடித்தான் போகிறார்கள் என்றார் எலியற்

The Family Reunion உம் Murder in the Cathedral உம் கிறிஸ்தவ துன்பியல் நாடகங்கள் முதலாவது பழிக்குப்பழி வாங்கும் துன்பியல் நாடகம். இரண்டாவது அகம்பாவத்திற்குத் கிடைத்த தண்டனை. The Cocktail Party (1950) இன்பியல் நாடகம். அத்துடன் வெற்றி பெற்ற நாடகங்களில் ஒன்று Cats (1981) ஒரு பிரபல்யமான இசை நாடகம் (musical)

ஆங்கிலக் கவிதையைப் பாதித்துப் புத்தூக்கம் பெறச் செய்தார். விமர்சனக் கட்டுரைகளால் மரபுகளை உடைத்துப் புதியவற்றை உருவாக்கினார் ஹொடுப் வோறன் விமர்சகரும் கவிஞரும் பின்வருமாறு கூறுகிறார். அமெரிக் காவிலும், இங்கிலாந்திலும் இந்த நூற்றாண்டில் இவர்தான் முக்கியமான கவிஞர். தனிச்செல்வாக்குச் செலுத்தியவர் எலியற் எதிர்கால எழுத்தாளர்களின் எல்லைகளைத் திறந்துள்ளார் எனறு ஜோன் கியாடி சொல்கிறார். அதிக விமர்சன த்துள்ளாக்கும் எட்மண்ட் வில்சன் The waste land பற்றிக் கூறும்போது எவ்வளவு தான் கற்றறிந்த அல்லது புதிரான மறை குறிப்புக்களைச் கொண்டி ருந்த போதும் அவற்றை நாங்கள் புரிந்து கொண்டோமோ இல்லையோ அவர்தன் கருத்தையும் மனக்கிளர்ச்சியையும் எங்களுக்கு அறிவிப்பதில் வெற்றி பெற்று விடுகிறார் என்றார்.

-------------------------

## என் தனிமை அழுகின்றது



என் இனிய
புள்ளிமான்
கூட்டத்தை விட்டு
தனிமையாக்கப்பட்ட
எனது ஆன்மாவின்
புலம்பல்
இன்னும் ஓயவில்லை

கூட்டமாக
மேய வரும்
யானைகளைக்
கண்டால்
அச்சத்தை விட
பொறாமையே
இதயத்தின்
அடித்தளத்தை
அதிகமாக
அழுந்துகின்றது

என் சிந்தையைக்
குலைத்தபடி
கானமிசைத்துச்
செல்லும்
வானம் பாடிக்
கும்பல்களை
நான்
வெறித்துப் பார்க்கிறேன்

தொட்டாவாடி
செடிகள்
நான்
தொட்டவுடன்
ஒருமித்து
சுருங்கி
காற்றுப்பட்டவுடன்
அப்படியே
நிமிர்ந்து
என்
கோபத்தை
அதிகரிக்கின்றன

இவ்வனத்தில்
நான்
தேடுகின்றேன்.....!
என்னைப்
போன்றவனும்
இல்லை
என்னைப்
போன்றவையும்
இல்லை
நான்
ஏன்
தனிமையாக்கப்பட்டேன்......?

*M. ராம்*



# ஓவியர் எஸ்.டி.சாமியுடன் ஓர் நேர்காணல்

**கொழும்பு மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓவியக்கலை ஞான எஸ். டி. சாமி இன்று நாடறிந்த ஓவியர்களில் ஒருவர் எழுத்தாளர்களின் எழில் தவழும் நூல்களின் முகப்பு ஓவியங்கள், பத்திரிகைத்துறை, சினிமா மேடைநாடகம் போன்றவற்றில் தனது தூரிகையின் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். இன்று ஓவியத்துறையை தன் வாழ்வாகவும், தொழிலாகவும் கொண்டுள்ளார்.**

**கொழும்பிலுள்ள பம்பலப்பிட்டி சென்மேரிஸ் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்ப கல்வியை கற்று, நெஷனல் கல்லூரியில் தனது படிப்பை தொடர்ந்து பின்னர் ஓவியத்துறையில் ஈடுபட்டார்.**

**பள்ளியில் படிக்கும் போது ஓவியத்துறையில் ஈடுபாடு கொண்ட எஸ். டி. சாமி தினபதி சிந்தாமணி பத்திரிகையில் பணியாற்றி தினகரன் பத்திரிகையில் தனது ஓவியத்திறமையை வெளிப் படுத்தி வருகிறார். திருமறைக் கலாமன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான கலைமுகம் சஞ்சிகையில் பிரதம ஓவியராக பணியாற்றும் எஸ்.டி. சாமியை கலைமுகம் வாசகர்களுக்காக பேட்டி கண்ட பொழுது............**

கேள்வி:- ஓவியர் சாமி அவர்களே! இன்று நீங்கள் நாடறிந்த ஓவியர் பத்திரிகை, நாடகம், சினிமா, கலை இவற்றில் உங்களின் ஆளுமையை வெளிப்படுத்தி வருகிறீர்கள். இவற்றிற்கு உங்களுக்கு தூண்டு கோலாக இருந்தவர்கள் யார்?

பதில்:- இன்று ஓவியத்துறையில் நான் வளர்ச்சி பெற்றிருக்கிறேன் என்றால் அதற்கு முதல் காரணகர்த்தா, எனது பள்ளித் தோழரும், நாடறிந்த நாடகக் கலைஞரும் எழுத்தாளருமான அந்தனிஜீவாதான். எனது கலைப்பயணத்தின் வழிகாட்டி இனி, இன்னொரு முக்கிய மானவரை நான் குறிப்பிட்டேயாக வேண்டும் அவர் தான் பத்திரிகை உலக ஜாம்பவான் திரு எஸ். டி. சிவநாயகம் அவர்கள் என்னை ஓவியத் துறையில் ஊக்குவித்து தினமணி சிந்தாமணி பத்திரிகையின் பிரதம ஓவியராக்கி ஊக்குவித்தார். அவரை மறக்க முடியாது சிந்தாமணி ஓவியர் சாமி என்ற பெயரை பிரபல்யப் படுத்தியவர்.

கேள்வி:- பத்திரிகைதுறை மாத்திரமின்றி எழுத்தாளர்களின் படைப்புகள் நூலுருவாகும் பொழுது அதன் முதல் ஓவியத்தை சிறப்பாக அமைத்து கொடுப்பதாக. பாராட்டுவதன் காரணம் என்ன?

பதில்:- இலங்கையில் பிரபல எழுத்தாளர்களின் நூல்களுக்கு அட்டைப் படம். வரைந்துள்ளேன். சாரல் நாடன், மலரன்பன் ஆகியோர்களின் நூல்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசு பெற் றுள்ளது.

கேள்வி:- திருமறைக்கலா மன்றத்திற்கும் உங்களுக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்ப்பட்டது?

பதில்:- கொழும்பு தமிழ் சங்கத்தில் நடை பெற்ற ஓவியக்கண் காட்சியின் போது அந்தனி ஜீவா என்னை திருமறைக்கலாமன்ற இயக்குனர் கலாநிதி மரிய சேவியர் அவர்களுக்கு அறிமுகப் படுத்தினார் ஏற்கனவே என்னைப்பற்றி கலைஞர் கதிர் காமதம்பி சொல்லி வைத்திருந்தார். திருமறைக் கலாமன்ற இயக்குனர் வண. கலாநிதி மரிய சேவியர் அடிகளாரை - முதல் முதலில் சந்தித்தபொழுது- அவர் என்னுடன் மிக அன்பாக, பண்பாக உரையாடியது என் நினைவில் மறையாமல் இருக்கின்றது.

அவரை சந்தித்த நாள் முதல் திருமறைக் கலாமன்றத்துடன் எனக்கு ஓர் பிணைப்பு ஏற்பட்டது. எனக்கு எத்தனை கடமைகள் இருந்தாலும் திருமறைக் கலாமன்ற பணிகளுக்கு முதலிடம் கொடுப்பது வழக்கம் அதனை ஒரு மனத்திருப்தியுடன் செய்து வருகிறேன்.

கேள்வி:- தங்களின் ஓவியர் செயற்பாடு திருமறைக் கலாமன்றத்தின் காலாண்டு வெளியீடான கலைமுகம் இதழில் மட்டுமன்றி மன்றத்தின் வெளியீடான இதழ்களில் ஓவிய சம்பந்தமான வேறு பணிகளை குறிப்பிட முடியுமா?

திருமறைநூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதி வரை தொடர் வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக் கலாமன்றம் பொறுப்பேற்று இதுவரை திருமறை நூல் நாடக வரிசையில் பதினைந்து நாடகங்கள் நூலுருவாக வெளியிட்டுள்ளது. இன்னும் தொடர்ந்து வெளிவரவிருக்கின்றது. இதற்கான முகப்பு

அட்டைப் படம், உள்படங்கள் அனைத்தையும் நானே பொறுப்பேற்று வரைந்து வருகின்றேன். வேதாகமத்தை தழுவி நூலுருவாகும் இவ்விதழுக்கு ஓவியம் வரை வதையிட்டு பெருமை அடைகிறேன். கலைவழி இறைபணி புரியும் இம்மன்றத்தின் இறைவார்த்தை யினூடகவும் எனது ஓவியம் மிளிர்வதையிட்டு உண்மையில் மன மகிழ்வு கொள்கிறேன்.

கேள்வி:- பத்திரிகைத்துறையில் மட்டுமன்றி, சினிமாத் துறையிலும் உங்களின் ஓவியக் கலையின் பங்களிப்பு பற்றி கூறமுடியுமா?

பதில்:- ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களின் நூற்றுக்கும் மேற் பட்ட சஞ்சிகைகளின் அட்டை படங்களை வரைந்து டைட்டிலையும், பத்திரிகை விளம்பர ஓவியங்களையும் செய்து பொடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நண்பர் அந்தனி ஜீவா மூலமாக தயாரிப்பாளர் நடிகர் வி. பி. கணேஷன் அறிமுகம் கிடைத்தது. அவர் தயாரித்த நாடு போற்ற வாழ்க திரைப்படத்தின் பத்திரிகை விளம்பரங்களை அமைத்தேன். அண்மையில் வெளிவந்த ஷர்மிளாவின் இதயராகம் கதையை ஏ. ஏ. ஜுனைதீன் திரைப்படமாக தயாரித்த போது அதன் டைட்டிலையும் விளம்பரப் பொறுப்புகளையும் தயாரிப்பு நிர்வாகத்தையும் ஏற்றுக் கொண்டு அதை மிகத்திறமையாக செய்து கொடுத்து எல்லோரிண் பாராட்டையும் பெற்றேன். இவ்வாறு பத்திரிகைத்துறையில் மட்டுமல்ல சினிமாத்துறையிலும் எனது ஓவியக்கலையின் பங்களிப்பு இருந்ததெனக்கூறலாம்.

கேள்வி:- திருமறைக்கலா மன்ற இயக்குனர் அருட் திரு. மரிய சேவியர் அடிகளாரைப் பற்றி ..............

பதில்:- வெண்ணிற ஆடையில் ஒரு கலாமேதையை தான் நான் கண்டுள்ளேன். அவர் துறவியாக இருந்தாலும்- இறைபணியுடன் கலைப்பணியை ஆற்றுபவர் அது மாத்திரமல்ல கலைஞர்களிடையே திறமையை கண்டு ஊக்குவிப்பவர். அவரால் ஊக்குவிக்கப்பட்ட கலைஞர்கள் நூற்றுக்கணக்கானோர் இதற்கு நாம் இறைவனுக்குத் தான் நன்றி செலுத்த வேண.டும்.

அத்துடன் மன்றத்தின் சார்பாக என்னை பேட்டி கண்ட செல்வி. ஜெந்தி ஜேக்கப் அவர்களுக்கும் கொழும்புக்கிளை நிர்வாகிகள் திரு. அம்பு றோஸ் பீற்றர், திரு. நாதன் செல்வி றெஜி திரு யேசுதாசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

**நன்றி வணக்கம்.**

# நானொரு பெண்

**ஹொங்கொங் கவிதை;-**
**றோஸ் வூ**
**ஆங்கிலமூலம் தமிழாக்கம்;-**
**கு. இராமச்சந்திரன்**

நீயொரு பெண்
எனவே
அவர்கள் கணிப்பில்
நீயொரு பாவி
சக்தியற்றவள்
என நாமமிட்டு
உனை அழைப்பார்
ஆணையே நம்பிடும்
அடியவளாய் இருக்கவேண்மென
உனக்கு நிபந்தனையிடுவர்
குடும்பச்சிறைக்குள்
உன்னைப் போட்டடைப்பார்
பெண்மையை
வாழ்நாள் முழுதும்
அணிகலனாய் ஆக்கிடுவர்.

நீ ஒரு பெண்
எனவே
உன் தலையெழுத்தை
மாற்றி எழுதும அதிகாரம்
அவர்கள் கையில்.
உன் பரம்பரைச் சொத்தும்
அவர்களுக்கே உரித்து.
உனக்குரிய உரிமைகளை
உன்னிடமிருந்து தட்டிப்பறிப்பர்.
உன் வளர்ச்சிக்கு
எல்லைக்கோடு கிழிப்பர்;
உன்மேனியை நிந்திப்பர்;
உன்கண்ணியத்தைப்
பங்கப்படுத்துவர்.

ஆயினும் இயேசுநாதர்
பெண்களின்
விண்ணப்பங்களுக்கு
செவிசாய்த்தார்
பெண்ணின் தகைமைக்கு
உத்தரவாதமளித்தார்.
பெண்களை அடக்கியொடுக்கும்
பரம்பரைப்பழககத்தைக்
கடிந்தார்;
பெண்களை அடக்கியொடுக்கும்
பரம்பரைப் பழக்கத்தைக்
கடிந்தார்;
கெட்டழிந்த பெண்களோடு
தோழமை பூண்டார்;
மாற்றினத்துப் பெண்களோடும்
உரையாடினார்;

மரியயாளின் தெரிவுதனை
நல்லதென உறுதிசெய்தார்;
கைம் பெண்ணின்
காணிக்கையை
புகழ்ந்துரைத்தார்.
ஆண்டவரால்
படைக்கப்பட்டு
பராமரிக்கப்படும்
பெண்களுக்கு அவர்
உத்தரவாதமளித்தார்
எனவே
இயேசு கிறிஸ்துவை
என் தேவனாய் ஏற்றுக்கொள்ள
நான் முடிவெடுத்துவிட்டேன்.

நானொருபெண்
ஆண்டவர் படைத்து
பராமரிக்கும்
ஒருவாழ்க்கையுண்டு;
எனெக்கென தனித்துவ
ஆளுமையுமுண்டு;
என்வாழக்கை வழியைத்
தேர்ந்தெடுக்கும்
உரிமை எனக்குண்டு.
ஆண்டவர்
இறைவாக்கில்
நான் வாழ்வேன்.

பெண்களுக்கெதிரான
நெறிகெட்ட,
சமூகப் பரம்பரை விதிகளை
தகர்ப்பேன்.
ஆண்டவரின்
விடுதலைக்குரிய
நற்செய்தியை,
ஆண்களோடு
பகிர்ந்திடுவேன்.
இம்மண்ணையும்,
இம்மண்ணுலகையும்,
ஆண்களோடிணைந்து
பயனுறச் செய்வேன்

*(சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு தமிழாக்கம் செய்யப்பட்டது)*

# தத்தளிக்கும் தமிழ் கனடாவில் முகங்கள்!

-பார்வதி கந்தசாமி
ரொறன்ரோ பெரும்பாகம் குடும்ப சேவைகள் சங்கம்.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வாத்தையை மெய்ப்பித்த ஊர்தான் கனடாவோ என்ற அங்கலாய்ப்புடன் கடல்கள் பல கடந்து வந்து சேர்ந்த பல நூறாயிரவரில் நாமும் சில ஆயிரவர். கனடா அமெரிக்கா எல்லையை நாடி விட்டால் சொர்க்கத்தினைச் சென்றடைந்த குதூகலம்தான் மக்களுக்கு! குதூகலம் சிலநாள்தான். குடும்பங்களும், தனி மனிதரும் கனடியவாழ்வில் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் பற்றி எடைபோடாது, கனடாவில் தமிழ்மக்கள் பலர் கஸ்டங்களை அனுபவிப்பதை அநுபவ அடிப்படையில் கண்டு அறிந்து அவற்றின் சில அம்சங்களை இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்.

அம்மா என்று அழைக்கவோ அன்பு செய்யவோ சுற்றம் இல்லாத நிலைமை பல இளம் நெஞ்சங்களுக்கு உண்டு. அம்மா அப்பா இல்லாது சிநேகிதர்களுடன் சேர்ந்து வாழும் இளைஞர்களும் மாமா, மாமி, சித்தி, சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன், அக்காவுடன் வாழும் யுவதிகளும் இளைஞர்களும் பலர். பல ஆயிரம் டொலர்களைக் கொடுத்து உயிர்ப் பிச்சை கிடைத்த மன நிம்மதியில் வாழ்க்கையைத் தொடங்கும்போது பலவிதமான முட்கள் இவர்கள் பாதைகளில் நேரிடுகின்றன. இவர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளைப் பின்வரும் மூன்று அம்சங்களுள் அடக்கலாம்

* மொழிப்பிரச்சினை
* நிறப்பிரச்சினையால் உருவாகும் பிரச்சினைகள்
* ஆதரவு அற்ற நிலைமை

ஐம்பதுகளில் இங்கிலாந்து சென்ற எம்மவர் போலல்லாது எண்பதுகளின் பிற்பகுதியில் கனடா வந்து சேர்ந்தவர்களில் பலருக்கு மொழி ஒரு பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இங்கே வந்து 10 வருடங்களுக்கு மேலாகியும் இளைஞர் பலர் ஆங்கிலம் தெரியாது உள்ளனர். இவர்கள் எண்ணக் கருவில் படித்து முன்னேற வேண்டும் என்ற எண்ணமும் உருவாகியதாக இல்லை. கனடா வந்ததும் வந்த கடனைக் கொடுக்க என்று இரண்டு அல்லது மூன்று வேலைகள் செய்து கடன் கொடுத்ததும் கொடுக்காததுமாக விரக்தி என்ற பெயரில் மதுபோதைக்கும் சிலர் போதை வஸ்துக்கும் அடிமையாகி விடுகின்றனர். ஆங்கிலம் பயில்வதற்கு அரசு கொடுத்த சந்தர்ப் பத்தையும் நழுவவிட்டு ஆங்கிலத்தை தேவையற்ற ஒன்றாக எண்ணுகின்றனர். தமிழ் இளைஞருடனேயே கூட்டு வாழ்க்கை வாழ்வதாலும், வேலை செய்யும் இடங்களிலும் தமிழிலேயே பேசும் வாய்ப்பு ஏற்படுவதாலும் தமிழ்பாட்டும், தமிழ்வீடியோவுமாகவே பொழுதுபோக்கு அமைவதாலும் ஆங்கிலம பேசக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. படிக்காமல், ரெஸ்ரோறன்ற் தொழிலுடன் இணைத்து வாழும் தமிழர் பலரின் குழந்தைகளும் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகுகின்றனர். அமைதியின்மை, ஒழுங்கின்மை, பணிவின்மை, அக்கறையின்மை, போன்றவை இத்தகைய வர்களின் பிள்ளைகளிடையே காணமுடிகின்றது. பாடசாலையில் பாடங்களில் அக்கறைகாட்டாது தமிழ்ப் பெண் குழந்தைகளுக்கு தொல்லைகளைக் கொடுத்து ஒழுங்கற்ற பிள்ளைகளாகச் சிலர் வளர்கின்றனர். பெற்றார் பிள்ளைகளிடம் அக்கறை காட்டுவதும் குறைவாக உள்ளது.

பெற்றார் இல்லாது வாழும் குழந்தைகளும் அவர்கள் பாதுகாவலான சுற்றத்தவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது குறைவு.

வடக்கில் சுற்றத்தாருடன் ஒழுங்காக இருந்து படித்து வளர்ந்த பிள்ளைகள் பலர். நல்லபாடசாலை எனப் பெயர்பெற்ற பாடசாலைகளுக்கு அண்மையில் இருக்கும் சுற்றத்தவருடன் சேர்ந்து இருந்தும், விடுதிகளில் இருந்தும் கல்வி கற்றனர். இங்கே வந்ததும், ஆரம்ப காலங்களில் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு குடும்ப உறவு பிரிந்த நிலையில் வெளியில் சென்று மனத்தாங்கலுடன் வாழும் இளைஞர்-யுவதிகளையும் நாம் காண்கின்றோம். பொருளியல் வாழ்வுக்கு அடிமைப்பட்ட கனடிய வாழ்வில் உறவுகள்கூட அர்த்தம் அற்றவையாகிப் போய்விடுகின்றன.. பெறாமகளிலோ அல்லது பெறாமகன், தம்பி, தங்கை, மருமகனிலோ லாபமீட்டும் நோக்குடன் செயல் படுதல், பணநெருக்கடியினால் உள்ளன்பு செலுத்தமுடியாது பணத்தை நோக்கிய உரையாடல்களால் மனங்கள் புண்படுதல், வெளியே உள்ள நண்பர்களின் தீய நடவடிக்கைகளில் இளைஞர் புலன் செலுத்தி இருக்கும் உறவினருடன் மோதிக் கொள்ளல்,பெண்கள் மீது கலாச்சாரம் பேணுதல் என்ற சாட்டில் அளவுக்குமீறிய கட்டுப்பாடுகள் விதித்தல் போன்ற பல்வேறு காரணிகளால் சொந்தங்கள் சொந்தங்களாக இயங்க முடிவதில்லை. இத்தகைய பிரச்சினைகளுக்கு உள்ளாகுவோரிடம் மொழிப் பிரச்சினையும் ஒரு தொடர்கதையாகிவிடுகின்றது.

நிறப்பிரச்சினை மேற்கு நாடுகளிலுள்ள ஒடுக்கு முறைகளில் ஒன்று. மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வந்தவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அகதிகள் அந்தஸ்து வழங்கி நோபல் பரிசு

பெற்றுக்கொண்டது கனடா. ஆனால் அந்த மனிதாபிமானம் கனடாவின் அக அமைப்பு முறைக்குள் காணப்படாது வெளிப் பூச்சில் மாத்திரம் காணப் படுகின்றது. இலங்கையர் கிறீக்-இற்றாலியன் உணவகங்களில் மலிவான சமையற்காரராகவும் கோப்பைகள் கழுவு பவர்களாகவுமே செயற்படுகின்றனர். உணவுபரிமாறுவதற்குக் கூட இவர்களது நிறம் தடையாக உள்ளது. படித்தவர்கள் இருந்தும்கூட கனடிய பட்டம், கனடிய அநுபவம் என்ற அடிப் படையில் வேலைகள் வழங்கப்படு வதில்லை. ஒருலட்சத்திற்கு மேலாக மெற்றோ பகுதிகளில் தமிழர் வாழ்ந்த போதும் அரச அலுவலகங்களிலும் மெற்றோ, சிற்றி அலுவலகங்களிலும் வேலைசெய்யும் தமிழர் எவரும் இல்லை. என்றே கூறவேண்டும். பாடசாலைகளில் கூட ஆசிரியர்களாக வேலை செய்யும் தமிழர் ஒருசிலரே. ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் கொக்குவாடி இருந்த கதைதான் துணை ஆசிரியர் பதவிகளில் இருக்கும் தமிழர் கதை. இத்தகைய நிலைமைகள் நிறபேதத்தின் விளைவுகளே

ஆதரவு அற்றநிலை என்று கூறும் போது அது உடல், உள, பண ஆதரவு அற்ற நிலையைக் குறித்து நிற்கின்றது. முன்னர் மொழிப்பிரச் சினையின் கீழ் அளிக்கப்பட்ட உறவினரும் இளைஞர்களும் பற்றிய விளக்கத்துடன் மேலும் பல விளக்கங் களைக் கைக்கொள்ளலாம். குடும்பம் என்ற எண்ணக்கருவில் ஈழத்தில் இருந்த கரு இல்லை. தனிமைப்படுத்தப்பட்ட உணர்வோட்டங்களில் குடும்பம் என்ற எண்ணக்கரு வந்து அமையும்போது அங்கே தனித்து நிற்கும் உணர்வோட்டங் களிடையேயான போட்டி, பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஐக்கியப்பட்ட உணர்வுகள் குடும்ப அலகில் காண வேண்டிய நிலையில் வெற்று உணர் வோட்டங்களை மோதவைக்கும் களங்களாகவே குடும்ப அமைப்புமுறை கனடாவில் உருவெடுத்து வருகின்றது. குடும்பங்கள் சிதைவுறுதல் என்பது வெற்று உணர்வோட்ட ஒன்றியத்தினால் ஏற்படுகின்றது எனலாம்.

ஒருவருடன் ஒருவர் பேசாமலே குடும்ப வாழ்க்கையைப் போலித்தனத்தில் செலுத்தும் குடும்பங்கள் பல குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் பேசித்தீர்க்கும் போக்குத் தமிழ்க் குடும்பங்களில் மிகமிகக்குறைவு. யூகத்தின் அடிப்படையில் பிரச்சினைகளுக் கானகாரணங்களைக் கற்பனை செய்து கொண்டு மனத்தைக் குடைந்து கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு கண், கால், மூக்கு எல்லாம் வைத்துப் பூதாகாரமானதாக ஆக்கி பிரச்சினைச் சுழற்சிக்குள் தம்மை மாட்டி, மீளும்வகை தெரியாது நிற்கின்றனர் சிலர். ஈழத்தில் குடும்ப சூழல், காலநிலை, ஆலயங்கள் போன்ற காரணிகள் உள்ளிட்ட வாழ்க்கைச் சூழலில் குடும்பங்கள் வளர கனடாவில் சூழலும் குடும்ப பிரச்சினைகளைப் பூதாகர மானவையாக்க உதவுவதை நாம் அறிவோம்.

கனடிய சட்டங்கள், கனட சமுக அமைப்பு இயங்கும்முறை, பாடசாலை, பொலிஸ் அமைப்புமுறை பற்றி புதிய குடி வரவாளராகிய எமக்கு அறிவு குறைவு. அவ்வாறு அறிந்தாலும் இவ் விடயங்களைப் பற்றி வாசித்தோ கேள்வி மூலமோ அறிவதற்கு அக்கறை தேவை. அந்த ஆர்வம் நம்மவரிடையே மிகக் குறைவாக இருப்பதும் எமது முன்னேற்றம். தடைப்பட காரண மாகின்றது. ஆதரவுகொடுக்க என தமிழ் நிறுவனங்களோ, தமிழில் சேவைகளோ மிகமிகக் குறைவே. மாணவர்களுக்கு ஆதரவு என்ற பெயரில் பணம் ஈட்டும் நோக்கில் ரியூட்டரிகள் அதிகரிக்கின்றன. அவை ஆதரவு நல்கும் நிறுவனங்களா?

வயோதிபர்கள் சில குடும பங்களில் சொல்லொணாத் துயரத்தை அநுபவிக்கின்றனர். சமூக கொடுப்பனவு பணம் அவர்கள் பெயரால் யாரோ லாபம் அடைகின்றனர். குளிரில் நடுங்கும் வயோதிபர், தள்ளாத வயதில் பாலர்களைப் பராமரிக்கும் வயோதிபர், 4 சுவர்களுக்குள் 24 மணித்தியாலமும் சிலசமயம் 365 நாளும் முடங்கிக்கிடக்கும் முதியோர் சூடான உணவுநோய்க்கு மருந்து இல்லாத நிலையிலும் வயோதிபர் உள்ளனர் ஈழத்தில் சுதந்திரமாக, தீர்மானம் எடுக்கும் நபர்களாக வாழ்ந்த வயோதிபர்கள் இன்று மனம் உடைந்தநிலையில் தங்கி இருப்போராக உள்ளனர். சமூக கொடுப் பனவுப் பணம் கூட இவ் வயோதிபர்களின் வாழ்க்கைக்கு ஆதாரம் கொடுப்பனவாக இல்லை. மனதளவில் அவர்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். அடி ஏச்சு வாங்கிய வயோதிபர்களும் நம்மிடையே உள்ளனர். ஆங்கிலம் பேசாமல் சாறி உடுத்து நிற்கும் வயோதிபர் சிலரைச் சில குடும்பத்தினர் தமது நாகரிகத்துக்கு ஒவ்வாத அரு வருப்பு உருவங்களாகக் கருதுகின்றனர். வீட்டுக்கு விருந்தினர் வரும்போது அவர்களை ஒதுக்குப் புறமாக இருக்க வைத்து தீட்டு உடையவர்கள் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றனர். வயோ திபரும் குழந்தைகளும் என்ற உணர்வை ஊட்டும் வகையில் விடப்படுகின்றனர். ஆங்கிலத்தில் அர்த்தம் தெரியாவிட்டாலும் சில கூடாத சொற்களின் அர்த்தத்தை வயோதிபர்கள் குறைபட்டுக் கொள்கி ன்றனர். ஒட்டு மொத்தத்தில், ஈழத்தில் இருந்த சமூகப் பெறுமானங்கள் கனடாவில் சிதைந்து சீரழிந்து போவத ற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.. அவற்றின் வளர்ச்சிப்போக்கினை தமிழ் வயேயாதிபர்களின் தற்கொலைகள் உறுதி ப்படுத்துகின்றன. அத்துடன் தமிழ் சமூக பெறுமானத்தை உடைத்து எறிந்து, வயோதிபர்க்கான மாடி இல்லங்களில் தனியாக வாழத்தொடங்கியும் உள்ளனர் பல தமிழ் வயோதிபர் அத்தகைய இல்லங்களுக்கான கோரிக்கைகள் இன்று பல்லாயிரமாகப் பல்கிப் பெருகியுள்ளன. அவர்கள் தாம் பெற்றுவளர்த்த செல்வங்களாலேயே புறக்கணிக்கப்படும் போது தம் மனம் புண்படுவதாகவும் தாம் குழந்தைப் பிள்ளைகளுக்குச் சமமாக நடத்தப்படும் பொழுதுதாம் அருவருப்பு அடைவதாகவும் கூறுகின்றனர். இவற்றை மனதால் அனுபவிக்கும்போது இவர்களுக்கு மன உளைச்சல், பயம், அங்கலாய்ப்பு, இயக்கமின்மை உண்டாகின்றது.

பணமுடை ஒரு பூதாகரமான பிரச்சினை என்பதை தமிழ்க் குடிவரவாளர் அனைவரும் அறிவர். சுற்றமின்றி தனித்தனியாக வந்து குடியேறியவர்கள் கனடாவில் ஒன்றித்த வாழவது கடினமான விடயமே. பரம்பரை ஊற்றுக்களோ இல்லாத நிலையில் கூடவே கடனையும் தம்முடன் இணைத்துக் கொண்டுவந்து கட்டிடக்

காட்டிற்குள்ளே தஞ்சம் புகுந்த பலரும் யார் யார் தஞ்சத்தை நாடுவது என்ற ஏக்கம் கலந்த ஏமாற்றத்தில் வாழ்பவராகவே பலர் உள்ளனர். ஒட்டுறவு அற்ற வாழ்க்கைக்குத் தம்மை உள்ளாக்கி வாழும் அவலம் பலவிதமமான மன உளைச்சல்களை ஏற்படுத்த வழி வகுக்கின்றது. சமூகத்தில் போட்டி பொறாமை மலிந்து கிடப்பதற்கான காரணம் புதிய தமிழ்க் குடிவரவாளராகிய நாம் பற்றுக்கோடாகக் கொள்ளக் கூடிய ஆதரவு உளரீதியிலோ உணர்வுரீதியிலோ கிடைக்காமையே. மூலைக்கு ஒரு தமிழ்க்கடை முகிழ்ப்பதையும் அதற்கு மூடுவிழா நிகழ்வதையும் அவதானிக்கின்றோம். வளரும் தமிழ்ச் சமுகத்தின் பொருளாதாரம் கிடையாக தமிழ் மக்களைக் குறிக்கோளாகக் கொண்ட ஒன்றாக வளர்கினன்றது. இன்னமும் அதன் கிளைகள் கனடிய பொருளாதார வளர்ச்சியினுள் புகுந்து கிளைகளைப் பரப்பவோ வேருன்றவோ இல்லை.

யாழ்ப்பாணத் தமிழரே கூடுதலாக வாழும் கனடாவிலும் கல்விக்கு முதன்மை கொடுக்கும் போக்கு தெனன்பட்ட போதும் பெரும்பாலான இளைஞர்கள் நடுத்தரவயதினர் கோப்பை கழுவும் இறைச்சி மீன் வெட்டும் சமையல் செய்யும் பணியிலே ஈடுபவதால் இவர்கள் பெரும் பொருளாதார முன்னேற்றங்களை அடைய இயலாதவர்களாகியுள்ளர். மிகச்சிறு தொகையினர் அலுவலக வேலையில் ஈடுபட்டுள்ளளனர்.

கனடாவில் தத்தளிக்கும் தமிழ் முகங்களுக்கான ஆறுதல் அன்மையில் கிடைக்கும் என கூறமுடியாது. கனடிய பொருனாதாரத்தின்வீழ்ச்சியும் இவர்களின் தத்தளிப்பை கூட்டியுளள்ளது. கனடாவின் கடும் குளிரில் பனிப்படலங்களின் மத்தியில் நம்மவர் வாழ்க்கை தொடர்வது நிச்சயம். மன எழுச்சிகளைக் குடைந்து எழும் காம்ப்பு உணர்வினைக் கட்டுப்படுத்தி மண் நினைவுகளிலிருந்து படிப்படியாக விடுபட்ட சமுதாயமாக தமிழ்ச் சமுதாயம் மாறிக் கனடாவின் புதுவித சமுதாயமாக மாறப்போவது நிஜம். எளினும் பிரச்சினைகள் பலவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டியமையும் தொடரும்.

## காலடியில் விழவேமாட்டோம்

**ஆங்கிலமூலம்:~**
**ஜே. டேவிஸ்**
**தமிழாக்கம்:~**
**சு. இராமச்சந்திரன்**

**எங்கள் நாடு ~ இது**
**எங்கள் நாடு**

**இதையிட்டு நீ**
**வாதம்பண்ணமுடியாது**

**இல்லையென**
**நிலைநாட்டமுடியாது**

**நீ எங்கள் இதயத்தை**
**நாவுளியால் நோண்டலாம்**

**நார்நாராய் எங்கள்**
**நெஞ்சைக்கிழிக்கலாம்**

**காட்டையே சாய்க்கலாம்**
**புற்றரையைத் தீய்க்கலாம்**
**வாழ்நாளெல்லாம்**
**வேதனைக்கும்**
**வெம்பலுக்கும்**
**ஆளாகலாம்**

**என்றாலும் காலடியில்**
**நாங்கள் விழவேமாட்டோம்**

**எங்கள்நாடு ~ இது**
**எங்கள்நாடு ~ என**
**உரிமைகோருவோம்**

## வரலாறு வாசிக்கப்படவில்லை

**வெள்ளையர் பள்ளியில்**
**எங்கள் பிள்ளைகளுக்கு**
**ஊட்டும் படிப்பென்ன?**

**யுத்தமிட்ட எங்கள்**
**மக்கள் போர்களைச்**
**சொல்லிக் கொடுத்தனரா?**

**எவ்வண்ணம் எங்கள்**
**மக்கள் மடிந்தனர்**
**என்றுரைத்தனரா?**

**கூக்கிரலிட்டு**
**பெண்கள் அழுததை**
**ஏனென்று கூறினரா?**

**அவுஸ்திரேலிய வரலாறு**
**எழுதப்படவில்லை ~ அது**
**கருத்த மனிதன்**
**தலைக்குள் உள்ளது**

**(அவுஸ்திரேலிய பழங்குடி**
**மக்களின்**
**போராட்டக்குரலாக எழுந்த**
**கவிதை)**

# என்னுடைய நாட்களும் ஒரு ரூபா சத்தியம்

G. கெனத்

விடிஞ்சிற்றா ச்சி ஏன்? விடியுது. மனம், வெறுப்புடன் சொல்லிக் கொண்டது. நித்திரையற்ற இரவும் நிம்மதியற்ற வாழ்வும், முன்னரைவிட இந்த இடம் பெயர்வின் பின், ஒரு பகலை தரிசிப்பதில் அக்கறை காட்ட வில்லை. எனக்கு கிழிந்த சாறத்துக் கூடாக இரவு 11 மணிபோல புகுந்த பனிப்படலம், கால் வழியாக நுழைந்து, சமனிலையில் வேண்டாத விளைவைக் கொடுத்திருந்தது. சரியாகப் பின்னப்படாத பனையோலைபாய் முதுகை விருண்டிக் கொண்டிருந்தது. எத்தனை மணியிருக்கும்? மீண்டும் கேள்வி எழுந்தது. தலைமாட்டில் அகதி விளக்கு அழுது கொண்டிருந்தது. சரியாகப் பின்னப்படாதா பனை யோலைப்பாய் முதுகைவிருண்டிக் கொண்டிருந்தது. என்னிரவுகளில் விழித்திருப்பது அது ஒன்றுதான். தூரத்தில் கோமர் தோட்டத்தில் மட்டை அடிக்கும் சத்தம் படிப்படியாக கேட்டுக் கொண்டிருந்தது. அப்ப 4 மணி இருக்கும். பூக்கும் சிறு புல்லும், விலங்கி னத்துக்கு பயன்படுகிறது. காய்க்கும் சிறு செடியும், மனித வாழ்வை நிறை செய்கிறது. ஏன் நான் எழும்ப வேண்டும்? அனுமதி இல்லாமல் நேரங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தலைமாட்டில் எழுதப்பட்ட கவிதைக்கடதாசிகள், உடைந்த பேனா, நவம்பர் மாத சுபமங்கள புகைப்பட அல்பம். இவை சோறு போடா தவை. மனித சந்தர்ப்ப வாத புகழைத் தரும் பனிக்கட்டிகள் எனக்கு.

அவிண்ட சாரத்தை இறுக்கக் கட்டியபின் பனியை விலக்கி வெளியே வர எழும்பினேன். றஜிவ் டேய் றஜிவ் எழும்படா 5 மணியா போகப்போது. மரியசீலன் அண்ணன் மகனை எழுப்புவது கேட்டது. றஜிவ் 6ம் ஆண்டு படிக்கிறவன், பின்னேரத்தில் அருகில் இருக்கும் கடலில் தனியே வலைபடுத்த அதிகாலையில் செல்பவன். குசினி வெளிப்



புறத்தில் ஓலைப்பையை எடுப்பதும், தலையில் ஒரு துணியை கட்டிக் கொண்டு செல்வதும் நன்றாகத்தெரிந்தது கட்டுமரம் வள்ளத்தோடு உரைஞ்சப்படும் சத்தம்வள்ளத்தில் அவர்கள் ஏறியிருப் பதை உறுதிப்படுத்தியது உழை ப்பாளிகள் அவர்கள். ஏன் விடியுது? மீண்டும் அந்தக் கேள்வி பிடரியில் வந்து அடிப்பது போல இருந்தது. கொட்டிலை விட்டு வெள்ளன வெளிக்கிடவேணும் அப்பதான் பிரச்சனை இல்லாமல் கக்கூசுக்கு இருக்கலாம். முத்தத்தில் மண்ணின் நிறம் மெல்லிதாகத் தெரிந்தது இரவிரவாக பனித்துளியை தலையில் வாங்கிய புற்றரை காலை குளிர்ச்சி யாக்கியது. மனதில் சந்தோசம் இல்லாத படியால் நெருப்பிலே கால் வைப்பது போல இருந்தது நாய் குரைப்பதற்கு தலையை நிமிர்த்தி என்னை ஓரளவு இனங்கண்டு படுத்து விட்டது. நன்றி நாய்க்குள்ள தனிக்குணம். அதற்கு கூட கொட்டிலில் மேல் நின்றிருந்த வெள்ளடியன் பலமாக கூவியது. யாருக்கு விடியுது? சேவலுக்கு தெரியுமா? தன் கடமையை சரிவரச் செய்து கொண்டிருந்தது. ஒழுங்கையில் அமிர்தலிங்கத்தின் வளவுக்குள் கக்கூசுக்கு இருப்பதற் காகபலர் சென்றுகொண்டிருந்தனர். இப்போது நன்றாக விடிந்திருந்தது. நானும் இருந்து விட்டு கடற் கரைக்குச் சென்று கழுவி.......? வீட்ட போவதா? கால்கள் சேற்றில் புதைந்து கொண்டன. கடலில் வெண் கொக்குகள் பிரச்சினை யில்லாமல் பறந்து கொண்டி ருந்தன. அதிக பட்சம் தொழிலாளர்கள் வந்து கொண்டி ருந்தனர். புல் தரையை விட்டு கடற்கரையை ஒட்டிய மண் வீதியில் தலையை குனிந்தபடி யோசித்து கொண்டு யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? திரும்பி அதே வழியால் வரும் போது கொட்டிலின் எதிர்புறத்தில் இருக்கும் கடற்கரை சேற்றுபரப்பில் ஊறப் போட்ட தென்னங்கோப்பைகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். இடம் பெயர்ந்து வந்த சந்திரா அக்காவின் பிள்ளைகளும் மரியசீலனின் கடைசிக்குட்டியும் பூளை கிடக்கும் கண்களோடு தாமும் உழைப் பாளிகள் என்ற உரிமையோடு வேலை செய்து கொண்டிருந்தனர். எனக்கு ஏன் விடியுது? யோசனை பலமாக பின்பும் வந்தது. தம்பி, தம்பி விலத்து விலத்து கச்சாய் பக்கமாய் விறகு கட்டிக்கொண்டு வந்த வயோதிபர் வெட்டி எடுத்து கொண்டு போனார். பின்னால் வந்தவன் அவருடைய பேரனாயிருக்கும். 3 மணிக்கு 6:30 மணிக்கிடையில் வந்திட்டம்

எப்படியும் தனங்கிளப்பு சந்தை கூடுற துக்கு இடயில போயிடலாம். சென்று மறை போனார்கள் நான் நின்று கொண்டி ருந்தேன்.

கடலால் றஜிவ் வந்து கொண்டிருந்தான் தலை நன்றாக நனைந்திருந்தது. கால், கைகள் பனிக்கு விறைத்து வெளிறி இருந்தன. முகத்தில் மகிழ்ச்சி அப்பி இருந்தது. தோலில் வலைகளும் சுக்கான்தடியும், கையில் மீன் நிரம்பிய பையும் இருந்தன. காலில் ஒரு உறுதி உந்தல் இருந்தது. அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். நக்கலாக சிரிக்கின்றானா? மனம் ஒரு கணம் குறுகிக்கொண்டது. இல்லை உழைப்பின் பெருமையில் அவன் சிரித்தான். நான் என் சக்தியை எல்லாம் திரட்டி சிரித்துக் கொண்டு எப்படியடா றஜிவ் உழைப்பு? 200 பெறும் அவசியமில்லாத கேள்வி எண்டு சென்று விட்டான். இப்போது காணியில் ஒதுக்கு புறத்தில் கோம்பை மட்டைஅடிக்கும் சத்தம்பலமா கேட்டது கொட்டிலை நெருங்கும்போது தேனீர் அருந்திக்கொண்டிருந்தனர். றேடியோவில் செய்தி போய்க்கொண்டிருந்தது. தேத்தத் தண்ணிய குடிக்கிறதா? விடுறதா? மனம் பேதலித்தது. தேத்தண்ணியக் குடி யோசிச்சது காணும் இது அம்மாவின் குரல். நீ யோசிச்சு என்ன? பிரச்சனை தீர்க் கப்போறியா? இது மூத்த தங்கைச்சியின் குரல். நாலு கவித எழுதலாமே இது கண்ணின் குரல். அந்த நாய்க்குட்டி அழகாக மாமி போட்ட பழஞ்சோற்றை தின்று கொண்டிருந்தது. நான் நாயாக மாறினால் என்ன? ஒரு கணம் அந்த நினைப்பு சந்தோசத்தை கொடுத்தது.

நேரம் போய்க் கொண்டிருந்தது அம்மாவும் , அப்பாவும் அன்றைய சமையை லுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்து கொண்டிருந்தனர். இன்னும் அடுத்த மாச சம்பளம்வர பத்து நாள் இருக்கு. அது மட்டும் இது சமாளிக்க வேணும் . தனிய என்ர சம்பளத்தில் என்னெண்டு சமாளிக்கிறது? அம்மாவின் குரல் அதிகமாக கொட்டிலில் உரப்பாக ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் மட்டக்களப்பில் போய்கிடக்கிறான். அவனுக்கெண்டாலும் வேலைகிடச்சுது. திக்கென்று அடித்துக் கொண்டது மனம். அவன் ஆருட்டேயும் ஏதும் குடுத்து விட்டிருப்பான். இந்த மாஸ்ரராவது அவனிட்ட போயிற்று வந்தேரா? எல்லாரும் எல்லாம்தான். உனக்கு ஆரையும் குறைசொல்லாட்டி இருக்க ஏலாது. அப்பா சொல்லிவிட்டு அம்மாவுடன் தர்க்கித்துக்கொள்ள விரும்பாது எழும்பி சென்றுவிட்டார். ஏன் விடியுது? இது என்ன எனக்கு பைத்தியமா பிடிச்சிற்று. ஒருக்கா என்னை பார்த்தன். போன வருசம் எடுத்த பச்ச சறம், றவி தந்த ரிசேட் எல்லாம் அப்படியே உடம்பிலே இருந்தது. அப்ப எனக்கு இன்னும் விசர்பிடிக்கயில்ல. எனினும் ஆம் மனப்பரப்பில் ஒரு அவநம்பிக்கை உறுத்திக் கொண்டது. விசர் புடிச்சிருக் கலாம் எண்டு.

நேரம் 10 மணியிருக்கும் எனக்கு வடிவாய்த் தெரிந்தது. சந்தையில் இருந்து அண்ணன் வந்துகொண்டு இருந்தார். வரும்போதே செல்வா உந்த தாடிய வழியுமேன். ஏன்? பிளேற் இல்லையா? சே சே என்னிட்ட இருக்கு நான் இண்டைக்கு வழிப்பன். நான் சொன்னேன் பாண் சாப்பிடாம விடுவோமா? சாப்பிடாமல் விட்டால், ஆரும் வடிவா சாப்பிடுவினம். அம்மாவுக்குத் தெரியாம இண்டைக்கு வெளியால போகவேணும். நீ இப்படி துன்பத்தை கண்டு ஓடுறது சரியா? நீ தேடும் விடுதலை தற்காலிகமானது. நீ வலிய சந்தோசத்தை தேடுறா? என் மனசாட்சி அண்டைக் கென்று பலமாக சிரித்தது. செருப்பு காலுக்குள் போக மறுத்தது. இந்த பாண திண்டிட்டு போவன். இல்லாட்டி விடு எங்களுக்கு மிச்சம். அம்மாவின் அதிகாரத் தொனின் என்னை பாணை விட்டு அசையவிடவில்லை. எனினும் வார்த்தைகள் வலிமையானவையும், கொடூரமானவையும் அவை உயிரற்ற சடலங்களையும் உறுத்தும். என் கவிதை வரிகளே எனக்கு உபதேசம் செய்தன.

மாமி நடந்து வருவது தெரிந்தது என்னிடம் தான் வாறா தம்பி இந்த 5 ரூபா குத்திய மாத்தித்தா உப்புக்கு விடுவம் கை தெரியாமல் காற் சட்டை ஸ்பக்குள் சென்ற போது அந்த ஒரு ரூபா குத்திமட்டும் அநாதையாக கிடந்தது. என்னிட்ட இல்லையுங்க என்னுடைய வார்த்தையால் அந்த குத்தி தப்பித்துக் கொண்டது இங்கே இருந்து மிருசுவிலுக்கு, பேந்து பருத்தித் துறைக்கு போறதுக்கும் சைக்கிளுக்கு காத்தடிக்கிறதுக்கும் என் மானம் காப்பது இந்த ஒரு ரூபாதான். ஒரு முறை பருத்தி துறைக்கு போகும் போது காற்று போய் விட்டது. நீண்ட வெளி எல்லாத் தெய்வங்களும் கண்முன் வந்து நின்றன. அழுவதா? அந்த வயோதிபரின் சயிக்குள் கடைக்கு முன் நின்று ஐயா அந்த பம்மத் தாருங்கோ என்று கேட்கிறதுக்கு முன்னால் எடுத்து அடியும் என்றார் காற்று வடிவா நிண்டது காசை எடுப்பது போல நடித்ததை உணர்ந்து கொண்டாரோ தெரியவில்லை தம்பி சில்லறை இல்லாட்டி பேந்து தாரும். நன்றி கெட்ட மானிடசாக்கடையில் இப்போதும் பசும் புற்கள் முளைக்கிறதா? என் நிர் வாணத்தை அவர் எவ்வாறு உணர்ந்து கொண்டார்? கடந்த நாள் கசப்பான காலப்பதிவு வந்து போனது.

எவ்வுள நேரம் நின்றிருப்பேனோ தெரியவில்லை. அங்கிள் அங்கிள் அக் குழந்தையின் கலப்படமற்ற வார்த்தை என் பரிதாப இதயத்தின் மீது வருடலை ஏற்படுத்தியது உண்மைதான். அங்கிள் நீங்கள் மாஸ்டரெல்லே? அப்ப எனக்கு, இங்கிலீஸ் சொல்லித் தாங்கோவன். அங்கிள் ஏன் தாடிவளக்குறீங்க? உங்கட்ட நிறைய காசு இருக்குமே? ஆழ்மனது பேசியது. தாடிவளர்ப்பதால் நன்மை யுண்டா? இந்தபோலி உலகில் சந்தர்ப்பவாத அனுதாபத்தை பெற நினை க்கிறாயா? உன்னைப் பயன்படுத்துபவர்கள் உன் ஒரு துளிக்கண்ணீரை தொட்டிருப்பார்களா? என் மனசாட்சி உக்கிரமாய் என்னைத்திட்டியது. அங்கிள் நான் வளர்ந்தா டொக்டரா வருவன் அம்மா சொன்னவா? எனக்கு எங்கட அம்மா சொன்னது பொய்யா? நான் படிக்க இல்லையா? நான் சந்தர்ப்பங்களை தவற விட்ட பாவியா? அபலையா? அதிஸ்டம் இல்லாதவனா? குழந்தையாக மனம் உள்ளே விசும்பிக் கொண்டது. எங்கே தவறு நடந்தது? இன்னும் விடை காண முடியாத வாழ்வின் இருப்பில் கேள்விகளின் ஊடுருவல் தொடர்ந்தது. அங்கிள் நிறைய கவித எழுதின காசு தருவாங்க என்ன? பகீரென்றது எனக்கு இந்தவயதில் எப்படியெல்லாம் பிள்ளைகள் கதைக்குது ஓமோம் எனக்குத்தருவினம் நான் மிகுந்த வேதனைப்பட்டுச் சொன்னேன் இப்ப எனக்கு கண்டோஸ் வாங்கித் தரவேணும் அந்த ஒரு ரூபா குத்தி பொக்கட்டின் மிக ஆழத்தில் ஒளிப்பது தெரிந்தது.

அங்கிள் நான் வாறன்

மறக்காதேங்கோ கண்டோஸ் சிறுமி போய் விட்டாள் உள்ளுக்குள் என் பிச்சைக்கார ஆன்மா சிரித்துக்கொண்டது. நான் ஏழையா? கவிதைய காசுக்கு விற்பதா? யார் சொன்னது அவை கவிதை என்று? என் விமர்சன ஆன்மா பிறிதொரு கேள்வியை கேட்டு நின்றது. என்ன எனக்குள் நடக்கிறது. என் ஆடையும் உடலும் ஒரு புறமும், மனமும் ஆன்மாவுன் பிறிதொரு புறமும் நின்று மோதிக்கொள்கின்றன. ஏன் விடியுது? இது என்ன கேள்வி இப்படியேன் எனக்குள் ஆன்மாகேட்கிறது? எங்கிருந்து இந்த வினா எழுகின்றது. மீண்டும் அந்த ஏன் விடியுது?

மத்தியானம், சமையல் முடிந்திருந்தது. தீ மிதிப்பவனுக்கு நெருப்புத்தரைகள் பனித்துளி ஏந்திய புற்றரைகள். எனக்கு சோற்றில் கை வைக்கும்போது சுடவில்லை. இதயத்தின் மேல் தளத்தில் 50 கிலோ கல்லை வைத்து யாரோ அடிப்பது போல இருந்தது. அங்கிள் நீங்க மாஸ்டர்தானே? அப்ப உங்கட்ட நிறை...ய காசு இருக்கும் என்ன? வார்த்தைகள் சோற்றுப் பருக்கையில் இருந்து எழும் சுடு ஆவியில் இருந்து வருவது போல் இருந்தது. அதிக நம்பிக்கையில் பற்று வைத்து கற்பனை எதிர்காலத்துக்காக மெய்மையான வசந்த கால நிகழ் காலத்தை பறிகொடுக்க ஒரு தொண்டன் ஆசிரியன் என்று சிறுமிக்கு விளங்குமா? அறுஞ்சுவை உணர்வுகளை கல்விச் சான்றிதழ்களோடு எறிந்துபோன எனக்கு நெருப்புத் தணல்களை வாய்க்குள் போடுவது போல இருந்தது. விரைவாக சாப்பிட்டுவிட்டு அந்த புள்ளையிட கண்ணில பின்னேரம் முளிக்க கூடாது. அங்கிள் எனறு யாரோ கூப்பிடுவது போல் இருக்க திரும்பிப் பார்த்தேன். மாமி வந்து கொண்டிருந்தார். காசு மாத்த கேட்கப் போறார் போல இருக்கு என நினைத்து, தெரியாது போல இருந்து விட்டு எழும்பி விட்டேன்.

நித்திரை செய்வதா? அது உழைப்பாளனுக்கும் குழந்தைகளுக்கும் நோயாளிக்குமான சேவைகள். அப்ப நான் யார்? ஏன் விடியுது? இந்த பொழுது விடிந்திடுமா? பயமாக இருந்தது கலவாய் குருவி ஒன்று குறுக்காக கத்திக் கொண்டு பறந்தது. சகுனம் சரியில்லை யாரோ சொல்வது போல எனக்கு இருந்தது. எனக்கு எல்லாம் ஒண்டுதான் தலையுக்குள் அக்குருவி பறந்து கொண்டிருந்தது.

சூரியன் விழுவதற்கு மேற்கில் சிவப்பாகிக் கொண்டிருந்தான். பனை மரங்களின் ஓலைகள் பெரிய அளவில் அசையவில்லை வெடித்த சேற்று நிலத்தில் நின்றிருந்த செங்கால் நாரைகளின் ஊடல் ஏதும் உணர்வலை ஏற்படுத்தவில்லை. ஆறு இலட்சம் நரம்புகளில் ஒன்றேனும் அதுகளின் அனுபவிப்பை சுயபிரதி பலிப்பு செய்து ஒரு கற்பனையான கனவு உலகத்துக்கு இட்டுச் செல்லவில்லை. மரத்துப் போய் விட்டதா? அல்லது அடக்கிக் கொண்டேனா? ஏதோ ஒரு வழியாவும் உணர்வு தலை தூக்க முடியவில்லை. ஏன் விடியுது? சூரியன் தொலைந்து விட்டாலும் அதன் பகல்கால உற்சவங்களின் செங்கதிர்களின் ஒளி வெள்ளம் மேற்கு வானில் இரவுடன் மோதிக் கொண்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் இரவு வந்து விட்டது.

சுற்றும் முற்றும் பார்த்தேன் அந்தச் சிறுமியோ மாமியோ வரவில்லை கொட்டிலுக்கு நுழைந்து போனேன். ஏன் ஒருவரோடும் கதைக்கவில்லை. இது இருப்பியலா? அல்லது கவலை தீர்ந்து விடுமா? நான் சிந்தனை ஆளனா? என்னை நானே பகலில் ஏமாற்றியது ஞாபகத்துக்கு வந்து நெஞ்சிலே நெருப்பாய் சுட்டது. எவ்வுளவு நேரம் படுத்திருப்பன். சாப்பிட்டுட்டு வந்து படு அம்மா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. எத்தனை மணி இருக்கும் தூரத்தே பழைய சினிமாப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. 10 மணி இருக்கும் வானத்தில் நிறைவான நட்சத்திரங்கள் சிரித்தன. நிலவு இல்லை எனினும் வெளிச்சம் இருந்தது. நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. குழப்பிய சோறு பனியாய் உறைந்து போய் இருந்தது. கை கழுவும் போது பளீர் சனியன் பூனை குறுக்கால் பாய்ந்து பீங்கானை தட்டிவிட அம்மா கதைப்பது கேட்டது இன்னும் நேரம் வரவில்லையா? கவித கிவித எழுதாம் இலாம்ப நூத்திட்டு படு மண்ணெண்ணெய் விக்கிற விலையில் உனக்கு கதையும் கவிதையும் படு எவ்வுளவு கண்ணீர் வழிந்ததோ தெரியவில்லை. ஏதோ ஞாபகம் வந்தது அந்த ஒரு ரூபா குத்திய கைவிட்டு தொட்டுப்பாத்தன் ஏன் விடியுது? ஏன் விடியுது? இப்போது தென்மராட்சி இரவுகள் முழுக்க என்னிடம் கேட்பது போல் இருந்தது. ஏன் விடியுது? புரண்டு படுத்தேன் இப்போது தலைக்கு மேல் அந்த ஒரு ரூபா குத்தி ஆடிக் கொண்டிருந்தது.

*27-01-1996*

## துட்டுங்கள் திறக்கப்படும் என்றீர்....?

ஓ! இறைவா
தட்டினோம்
பலமுறை
திறக்கவேயில்லை
கேட்டோம்
தொடர்ந்து
தரவேயில்லை
தேடினோம்
தினமும்
கிடைக்கவேயில்லை
இன்று
எல்லாம்
இழந்து
ஒட்டுத்
திண்ணையில்
ஒதுங்கியிருந்து
மீண்டும்
தட்டுகிறோம்
இம்முறை
திறக்காவிட்டால்
நிச்சயம்
உடைக்கப்படும்
உமது வாசல்
எமக்கு தேவை
அப்பமோ
இரசமோ
மன்னாவோ
அல்ல
விடுதலையே

அல்வி

# அரங்க வலைகள்

பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளார்

ஐம்பதுகளில் அரங்கியல் துறையில் நவவேட்கைவாதக் கொள்கை ஒன்று மேற்புலத்தில் வலுப்பெற்றிருந்தது: இசை நிகழ்ச்சிகளின் செலவுகளைக் குறைப்பதற்கும், நிகழ்ச்சிகளின் தராதரத்தை உணர்ந்து சுவைக்கக்கூடிய இசை விரும்பிகளின் தொகையை மட்டுப்படுத்துவதற்கும், எவ்வாறு "சிற்றரங்கு இசை" (சேம்பர் மியூசிக் சிறிய இடத்தில் அல்லது வீட்டின் அறைகளின் நடத்தப்பட்டதோ, அவ்வாறே நாடகங்களும் சிறிய அரங்குகளில் மேடையேற்றப்படவேண்டும். இத்தகைய கருத்துக்குச் செயல் வடிவம் கொடுத்தவர்களுள் யூஜீன் யெனெஸ்கோ சிறப்பிடம் வகிக்கின்றார்.

## வாழ்வும் வளர்ச்சியும்

இவர் 1909ம் ஆண்டு (நவம்பர் 13) றூமேனியாவில் உள்ள ஸ்லற்றீனா என்னும் நகரில் பிறந்தார். தந்தை ஒரு சட்டத்தரணி, தாய் தெரஸ் இக்கார்ட் என்னும் பெயருடைய பிரெஞ் பெண். 1913 தொடக்கம் 1925 வரை பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தார். பாரிஸில் உள்ள லுக்சம்பேர்க் பூங்காவில் வியாழன்தோறும் நடைபெறும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளுக்குச் சென்று அவைகளைப் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தார். அதுதான் இயொனெஸ்க்கோவின் நாடக அனுபவங்களின் ஆரம்பமாகும், பத்து வயதில் சிறுநாடகம் ஒன்றைத் தயாரித்தார். அதில் கதாபாத்திரங்களாக வரும் சிறுவர்கள் தமது வீடுகளில் உள்ள பொருட்களை இடித்து உடைத்து பெற்றோரையும் வீட்டுக்கு வெளியே தூக்கி எறிகிறார்கள். இத்தகைய புரட்சி வெளிப்பாடு, அவரது பின்னைய நாடக ஆக்கங்களின் முன்னோடியாக இருந்தது என்று கூறலாம். 1925ல் றூமேனியாவுக்குத் திரும்பி ஸ்ரான்ருள் சவா என்னும் பாடசாலையில் கல்வி பயின்று அதைத் தொடர்ந்து புக்காறெஸ்ற் பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு மொழி–இலக்கியம் என்ற துறையில் பட்டம் பெற்றார். எழுத்துத்துறையில் அவரது கன்னி முயற்சிகள் ப்றோ பாத்றியா சோடியாக், அஸி, வ்ளோறியா டி வொக், வியாத்தா லித் தெறாற்றா, வக்ளா என்னும் சஞ்சிகைகளில் வெளிவந்தன.

1936ல் றெடிக்கர் பூர்லெனூ என்னும் மெய்யியல் மாணவியை மணம்புரிந்து 1937ல் புக்காறெஸ்ரில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பிரான்ஸ் நாட்டில் வாழவேண்டும் என்ற அவரது கனவு 1945ல் பாரிஸ் அச்சகம் ஒன்றில் பணிபுரிய அமர்த்தப்பட்டதன் மூலம் நிறைவேறியது. 1948–49 ல் அவர் எழுதிய ல கக்தாத்றிஸ் சோவ் (மொட்டைப் பாடகி) என்னும் நாடகம் 1950ல் மேடையேறப்பட்டதைத் தொடர்ந்து " ல லெசொன்" (பாடம்) லெசேஸ் (கதிரைகள்) விக்டிம் டு வூஆர் (கடமையின் அடிமை) அமதேலு, ல தப்ளோ (ஓவியம்) சக் ஊ ல சூம்மிஸ்ஸியோன் (இஜக்கோபு அல்லது அமைச்சல்) ல நுவோ லொக்காத்தேர் (புதிய வாடகைக் காரர்), லொம் ஓ வலீஸ் (சதா பயணம் செய்வோன்), லம்ப்றொன் ரூ டெலால்மா (ஆல்மாவின் அடையாளம்) அவெனிர் டாங் லெஸ் எவ் (முட்டைகளுக்குள் எதிர்காலம்) ரூள் சாங் காஜ் (கூலியின்றிக் கொலை), றினொசெறோஸ், ல றூஅ சமோர்ட் (அரசனின் சாவு) ல பியேத்தோன் டெலெயர் (காற்றில் நடப்பவன்) ல சூஅவ் எ ல வம் (பசியும் தாகமும்) ஜேஉ டு மஸ்ஸக்ர் (பெருங் கொலை விளையாட்டு) மக்பெத், செ வோர்மிடாபிள் போர்டல் (பெரிய சுத்து மாத்து) வொயாஸ் செ லெ மோர்ட் (இறந்தவர்களின் மத்தியில் பயணம்) போன்ற புகழ் பெற்ற நாடகங்களை ஆக்கியுள்ளர். தவிர, ஓப்பெறா என்னும் இசைநாடகங்களையும் அரங்கேற்றியதுடன், பல நாவல்களும், சிறுவர்களுக்கான இலக்கியங்கள் சிலவும் ஆக்கியுள்ளார். ஓவியத் துறையில் ஈடுபாடு உள்ளவர் என்பதும் அவரது ஓவியங்கள் சுவிற்செலாந்தில் பேணிக் காக்கப்பட்டன என்பதும் பலருக்குத் தெரியாது.

## கருத்துக்கள்

அனைத்துக்கும் பொதுமையானதாக உள்ள வினைப்பாடுகள் கொண்டதே கலப்பற்ற நாடகம். இப் பொதுமை, தனிப்பட்ட



கதைகளுக்கும் செயல்களுக்கும் எடுத்துக் காட்டாகவும் முன்னோடியாகவும் விளங்குகிறது.


நாடக வினைப்பாடுகளின் பொதுமையல்லாத இயல்புகளை விலக்கவேண்டும். கரு பாத்திரங்களில் தற்செயலாய்க் காணப்படும் தன்மைகள், கதா பாத்திரங்களின் பெயர்கள், அவர்களது சமூகப்பின்புலம் வரலாற்றுப் பின்னணி, நாடகத்தின் மையமான சிக்கல் அல்லது முரண்பாடு.இம் முரண்பாட்டுக்கான விளக்கங்கள், நியாயங்கள், காரணங்கள் முதலியவைகள் பொதுமையில்லாத் தன்மை உடையவை.

நல்ல நாடகத்தில் "சுட்டிக் காட்டப்படும்" (இது அதுவென்ற) பொதுமையற்ற தன்மைகளை விலக்கவேண்டும். வேறு எந்த ஒரு நிகழ்ச்சியுடனும் தொடர்பில்லாத, ஒத்த தன்மையற்ற ஒரு நிகழ்வை நாம் கண்டுபிடிக்கவேண்டும். மற்றவைகளிலும் மாறுபட்ட, தனக்குமட்டும் செல்லுபடியான, சொந்தமான சட்டங்களையும் இயல்புகளையும் உடைய உலகத்தை உருவாக்க வேண்டும். இத்தகைய உலகம் என்னுடைய சொந்த உலகமாக இருக்கும். ஆனால் மற்றவர்களும் இவ்வுலகத்தில் தங்களை அடையாளங் கண்டு கொள்வார்கள். (இது நடைமுறைக்குச் சாத்தியமானது அல்ல என அஞ்சுகிறேன்.).

நாடகத்தில் வரும் வினைப்பாடுகளை விளக்க "ஏன்" என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இது தவறு ஒரு நாடகத்தின் நாடகத்தன்மை அதன் விளக்கப்பட முடியாத் தன்மையிலேயே தங்கி உள்ளது.

உலகத்தின் உண்மையான இருப்புத்தன்மையை ஒரு சில குறிப்பிட்ட சைகைகளினாலும் சில சொற்களினாலும், உடல் அசைவுகளினாலும் காட்ட முடியும்: பாடல்களின் வரிகளை ஒருமித்துப் பேசியும், தனி ஒருவரை (அல்லது ஒரு சிலரை) அபிநயம் பிடிக்க வைத்தும் "உள்ளாம் தன்மையை" வெளிக்கொணரமுடியும்.

"ஜனரஞ்சகமான" (பொப்புலர்) நாடகத்தை உருவாக்கக் கூடாது ஜனரஞ்சகமானவை சரி, மத்திய வகுப்பினருடைய (பூர்ஜுவா) நாடகங்கள் சரி, மனித ஆன்மாவின் அடித்தள ஊற்றிலிருந்து புறப்படுபவை அல்ல இவ்விரண்டு வகையான நாடகங்களும், குறுகிய வட்டத்தில் வாழும், தமது கொள்கைளின் கைதிகளாய் நலியும் மாந்தர்களால் ஆக்கப்பட்டவை இவர்கள் தமது முரண்பாடுகளின்தன்மைகளை வெளிப்படுத்துவதற்கும், தமது கொள்கைகளே மானிடத்தின் அடிப்படைக் கொள்கைகள் என்பதால் அவைகளைப் உலகிற்குப் பறைசாற்ற வேண்டும் என்னும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் இந் நாடகங்களை உருவாக்குகிறார்கள்.



"ஜனரஞ்சகமான" நாடகம் என்பது களிப்பூட்டும் தன்மை கொண்டதாகவும், அரசியல் கொள்கை விளக்கம் உள்ளதாகவும் இருக்கும்.மத்திய வகுப்பினரின் நாடகங்களை சமூகத்தில் சிறுபான்மையினரே ஆதரிக்கின்றனர். இருந்தும் அவர்கள் சமுதாயத்தின் பல மட்டங்களிலிருந்தும் வருகிறார்கள்.

அரசகருமப் பணியாளர் வங்கி ஊழியர். வீட்டுவேலை செய்பவர், பாட்டாளிகள்.

மக்களின் ஆன்மாவின் அடித்தளத்திலிருந்து புறப்படும் நாடகம். பழைமையாக இருப்பினும், சிறப்புகள் மிகுந்ததாக இருக்கும்.


### பண்புகள்

இயொனெஸ்கோவின் ஆக்கங்களைப் பொறுத்தமட்டில் மூன்று தனித்துவமான பண்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

1. அவரது நாடகங்கள் ஒருவகையில், தனி ஒரு மனிதனுடைய கருத்துக்களை மட்டும் பிரதிபலிக்காது, அன்று நாடகத்துறையில் முன்னணியில் விளங்க முயன்ற இயக்கம் ஒன்றின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றன. ஜறி, பிலிப் சுப்போ, அந்த்ரே ப்றேற்றோன், ஸ்றிண்ட்பேக், ஆர்த்தோ போன்றவர்களின் "தாக்கம்", இயொனெஸ்கோவின் படைப்புகளில் ஏதோ ஒரு வகையில் தென்படுகிறது. வரம்பில் அகவாய்மைக் கோட்பாடு தலைதூக்கிநிற்கிறது. ஸ்றிண்ட்பேக், வித்றக், வெய்டோ, லிபிச் போன்ற நாடக ஆசிரியர்களிடமிருந்து தான் "கடன் வாங்கவில்லை" என்பதை இயொனெஸ்க்கோ அழுத்தந்திருத்தமா எடுத்துக்கூறினார்: இந்நாடக ஆசிரியர்களை எனக்குத் தெரியாது. அவர்களின் "சாயல்கள்" எனது ஆக்கங்களில் படிந்துள்ளன என்னால், அதன் பொருள், "எந்த ஒரு மனிதனும் தனிப்பட்டவன் அல்லன்...... நம்மில் பலர் பொதுவான பல நிகழ்ச்சிகளை ஒரே விதமாக ஏடைபோடுகிறார்கள். அவைபற்றி விதமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள்" ஒப்பீடு செய்யும் (நாடக) இலக்கியம் இத்தகைய கடன்வாங்கல்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளுவது தவறு..... 5 எது எப்படி இருப்பினும் 1966ல் அரங்கேற்றப்பட்ட "பசியும் தாகமும்" என்னும் நாடகத்துக்கும், "டமாஸ்க்களுக்கு" என்னும் ஸ்றிண்ட்பேக் உடைய நாடகத்துக்கும் இடையில் சில ஒற்றுமைகள் உள்ளன. "பசியும் தாகமும்" என்பது ஸ்றிண்ட்பேக்கை நினைவுபடுத்தக் கூடிய "கனவில் வாழ்க்கை என்ற தலைப்பைக் கொண்டிருந்தது. வாழ்வில் வெறுப்பைக் காட்டுவதற்கு வீட்டின் சுவர்கள் அழுக்கினால் பூசப்பட்டிருந்தன. "மாதிரிப் பெண் ஒருத்தியைக் கண்டுபிடிக்க கதாநாயகன் மேற் கொண்ட தேடல்

மடத்துடன் கூடிய சிறைச்சாலை போன்ற இடத்திற்கு இட்டுச் செல்கிறது. அங்கு வதிபவர்கள், சுதந்திரமான எண்ணங்கள் தங்களை நஞ்சூட்டிக் கொல்கின்றன என்ற நம்பிக்கையில் வாழ்பவர்கள். 6 ஆர்தோவின் குறிக்கோள்களை அப்பட்டமாகவே தமதாக்கிக் கொள்கிறார் இயொனெஸ்க்கோ: மாற்றம் என்பது உண்மையான ஆன்மீகநிலையில் நடைபெறுவது. முதலில் அது தனிமனிதனில் நடைபெறுகிறது. அதன் பின்புதான் அது தனிமனிதனின் மாற்றம் மூலம் சமுதாயத்திலம் நடைபெறும். இத்தகைய மாற்றத்தை விளைவிக்கும் ''ஆன்மீகம்சார் அரங்கு'' தான் உண்மையானது. தனிமனிதனின் மாற்றத்தை அடிப்படையானதாக ஏற்றுக்கொண்ட இயொனெஸ்க்கோ, ஆர்த்தோ மத்திய வகுப்பினரின் வாழ்க்கையைப்பற்றிக் கொண்டிருந்தகருத்துக்களையும் முழுதாக ஏற்றார்: இது "பொய்மை நிறைந்தது", "துடிப்பற்றது", "அனைத்திலிருந்தும், ஏன் நம் அடிவேர்களிலிருந்தும் எம்மைப் பிரித்து வைக்கின்றது". 7

ஆர்த்தோவைக் குறிப்பிடும் இவ்வேளை, இயொனெஸ்க்கோ நாடகப் போக்கை "செம்மைப்படுத்திய" வேறு சிலர் பற்றியும் இங்கு குறிப்பிடல் வேண்டும். பெனடெத்தோ க்றூச்சேயின் அழகியல் கொள்கைகளை ஒரு சில விதிவிலக்குகளுடன் ஏற்றுக்கொண்டவர் இயொனெஸ்க்கோ. கறுாச்சேயின் கருத்து: அறிவுசார் ஆய்வுத்துறைக்கும் (பகுத்தறிவு) உணர்ச்சிசார் கவிதைத் துறைக்கும் வேறுபாடுகள் உள்ளன, இவ்விரு துறைகளுள் ஒவ்வொன்றும் சுதந்திரமானது, சமமதிப்பீடுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அறிமுகப்படுத்தப்படாத, புகழ்பெறாத நாடக ஆசிரியர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுதிபெற்றவர் என இயொனெஸ்க்கோ கூறிய ஜோன் லுக்கா கராஜியாலே இன்னும் ஒருவர். அவரால் ருமேனிய மொழியில் எழுதப்பட்ட ஓரங்க நாடகங்களை இயொனெஸ்க்கோ மேடையேற்றினார். 1912ல் பேர்லின் நகரில் இறந்த இவரது சிறப்பு, தனது கதாபத்திரங்களை செய்தித்தாள்களில் எழுதப்படும் மொழியில் பேசவைத்தது, பொருளற்ற வசனங்களை அவைகள் முக்கியமானவை போல சில சந்தர்ப்பங்களில் பேசவைத்தார். "செல்வாக்கு" செலுத்திய நாடக ஆசிரியர்கள் வரிசையில் அல்பிறெட் ஜறிக்குத் தனி இடம் உண்டு. 1896ல் நாடகத்துறையில் திருப்பத்தை ஏற்படுத்திய ஜறியினது "பட்டவிசிஷியன்" என்ற குழுவின் தலைமைப்பீட உறுப்பினராக இருந்தார். "விதி விலக்குகளின் அறிவியலை" வளர்க்கும் குறிக்கோளுடனும், அரிஸ்த்தோத்தலின் மெய்யியல் கருதுகோள்களை எதிர்க்கும் நோக்குடனும் அது உருவாக்கப்பட்டது ஜறியால் வெளியிடப்பட்ட "கஹியர் டெ பட்டவிச்ஷயன்" என்னும் சஞ்சிகையில் இயொனெஸ்க்கோவின் ஆக்கங்கள் வெளிவந்தன. நாடக உரையாடல் பற்றி டஜறி கொண்டிருந்த கருத்துகளுக்கு எடுத்துக்காட்டாக இயெனெஸ்க்கோவின் நாடகங்கள் அமைந்தன என்று கூறில் அது மிகையல்ல. ''நீர்கள் எப்போது முதல் முறையாக ஜறியஸின் நாடகங்களை வாசித் தீர்கள்" என்ற கேள்விக்கு விவிலியத்தைப் புரட்டிப் பரட்டிப் படிப்பதில்லை, அதே போல்தான் ஜறியின் கருத்துக்குளும்" என்று தாம் ஜறிமேல் கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்தினார்.



2. அடுத்து, சீர்குலைந்துவரும் சமுதாயம் என்னும் கட்டுக் கோப்பை மேலும் சிதைவுறச்செய்யும் நிகழ்வைத் துரிதப்படுத்துவது அவரது நாடகங்களின் நோக்கமாக இருந்தது. வேறுவிதமாகக் கூறினால், அடியோடு மாற்றும் உணர்வைத் தூண்ட எண்ணினார். ''ஒவ்வொரு கருத்தும், ஒவ்வோரு பொருளும் அதன் சாரத்திலிருந்து அகற்றப் பட்டுவிட்டது. இப்படி வெறுமனாக்கப்பட்ட நிகழ்வின் பின்... நான் தூய வார்த்தைகளில் வடிக்க முடியாத இருப்பின் மத்தியில் எனது நிலையை உணர்ந்தேன்... உள்பொருளின் இயல்புடன் நான் ஒன்றித்து விட்டேன்... வாழ்வினதும் மொழியினதும் அபத்தங்களை உணர்வது என்பது (நமக்குத் தெரிந்த பொய்யான) " வாழ்வையே தாண்டிவிட்டோம் என்று பொருள்படும்' வாழ்வின் அபத்தத்தையும் தாண்டிவிட்டதையும் சுட்டிக்காட்ட மொழியின் கருத்தற்ற, பொருளற்ற தன்மை கோடிடப்படுகிறது. ஒரு மொழியைப் புதிதாகப் பயிலுபவர் "கிளிப்பிள்ளை" போல் பேசுகின்ற சொற்றோடர்களைசந்தர்ப்ப சூழ்நிலைக்குப் பொருந்தாதவாறு பேசுவைப்பதன் மூலம் இந்நோக்கம் நிறைவேறுகிறது. மக்கள் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்வின் செயல்களை நெறிப்படுத்தும் "நேரம்" என்னும் அளவையை அபத்தம் என இயொனெஸ்க்கோ கணிக்கின்றார். அவரது கருத்துக்களை வலுப்படுத்த கணக்கியல், தர்க்கவியல் முதலியவற்றை வெற்றிகரமாகக் கையாளுகிறார். "மனிதன் தனது சமய அல்லது ஆன்மீக வேர்களிலிருந்து துண்டிக்கப்படும்போது, செயல்கள் பொருளற்றவையாகின்றன. மனிதன் உண்மையற்ற வாழ்விலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமாயின், அவன் "கடவுளிடம்" செல்லவேண்டும். கடவுள் என்பது நாம் அனைவரும் பங்குபெறும் உலகளாவிய சக்தி, பரந்து நிற்கும் உணர்வு". 9

3. மூன்றாவதாக, வெளிப்படையாக உணரமுடியாத உள்ளத்தின் அடித்தளத்தின் உண்மைநிலையை உணர்த்த முனைகிறார். தமது கனவுகளிலே நிகழ்பவைகளை மேடையேற்றுகிறேன் என அறிவித்த இயொனெஸ்க்கோ, "உள்ளத்தின் உள்ளே உள்ளதை மேடையில் வெளிக்காட்டுவதே நாடகம்.... நமது மெய்ம்மையின் ஆழத்தில், நாம் ஒவ்வொருவரும் மற்றவர்கள்போல்

உள்ளோம். எனது கனவுகளும் விருப்புக்களும், எனது துன்பங்களும் ஆவேசங்களும் எனக்கு மட்டும் உரித்தானவை அல்ல, அவை மனித இனத்துக்குச் சொந்தமான எனது மூதாதையரின் சொத்தில் ஒரு பகுதி " எனக் கூறினார். 10 " எமது கனவுகளில் உண்மை உள்ளது", "புனைமங்களில் காணப்படும் உண்மையை விட வேறெதிலும் அத்தகய உண்மையைக் காண முடியாது'' என்ற அவரது கூற்றுகளுக்கு அமைய, தமது பின்னைய நாடகங்களை, கனவுகளை விளக்கும் கருத்துமேடையாக மாற்றினார். 1968ல் எழுதிய "விக்ரிம் டு டுவஆர்" நாடகத்தில், ஒருவன் காடு ஒன்றில் சிக்கி, அங்கிருந்த அடியே இல்லாத துவாரம் ஒன்றிற்குள் வாழுகிறான். பின்பு, அதிலிருந்து வெளியேறி, குழந்தையாக மாறி ஏணியொன்றில் ஏறி நீல ஒளியில் பறக்கிறான். அதேவிதமாக, 1962ல் எழுதப்பட்ட "ல றுஆ செ மேட்" என்னும் நாடகத்தில், பெறெஞ்சர் என்னும் கதாபாத்திரத்தின் உணர்வுத் தளமாக மேடையும், அவனது தலைக்குள் உள்ளவை அரண்மனையாகவும் சித்தரிக்கப்பட்டு, பெறெஞ்சரும் அவனது ஆன்மாவின் ஆற்றல்களும் சாவுடன் சாம்பல் நிற ஒளியில் மறைகின்றன. இப்படியாக, அடிமன இயல்புகளைச் சுட்டிக் காட்டக் கனவினது தன்மை ஒத்த தொடர்பிணைவுக் காட்சிகளை முன்வைத்த கலை இலக்கியப்பாணியில் வேரூன்றிய இயொனெஸ்க்கோ தமது பின்னைய நாடகங்கள் சிலவற்றில் உளவியல் கருத்துக்களுக்கு முதன்மை கொடுத்தார்.



## இரு நாடகங்கள்

அண்மையில் பாரிஸ் நகரில் ஹுச்சேத் அரங்கில் இயொனெஸ்கோவின் இரு நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவை பற்றிய ஒரு சில குறிப்புகள்.

1. ல கந்தாத்றிஸ் சோவ் (மொட்டைப் பாடகி) இதன் தோற்றம் இயொனெஸ்க்கோ ஆங்கில மொழியை 1948ல் கற்றுக்கொள்ள எடுத்த முயற்சி என்று கூறலாம். "சிரமமின்றி ஆங்கிலம்'' என்னும் கைநூலில் மொழிப்பயிற்சி அளிக்கும் நோக்கோடு ஆங்கிலேயர் ஒரு சிலரின் உரையாடல்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அத்தகைய உரையாடல்கள் திரு, திருமதி ஸ்மித் உடையவை இயொனெஸ்க்கோவின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. கணவனுக்குத் தன்னைப்பற்றி விளக்கும் மனைவி, தனது பெயர் ஸ்மித், தனக்குக் பிள்ளைகள் உள்ளனர், தான் லண்டனுக்கு அண்மையில் வாழ்கிறேன், ஒரு அலுவலகத்தில் பணியாற்றுகிறேன், மேரி என்று அழைக்கப்படும் பணிப்பெண் உண்டு, மாட்டின் குடும்பத்தினர் தனது நண்பர்கள், தனது குடும்பத்தின் இல்லம் ஒரு கோட்டை என்ற சொற்றொடர்களில் உள்ள வார்த்தைகளின் விசித்திரம் இயொனொஸ்க்கோவை நாடகக் கண்ணோட்டத்துடனும், மொழிவரையறைக்கு அப்பால் நின்றும் பார்க்கத் தூண்டியது. திரும்பத்திரும்ப ஒரே மாதிரியாக பலரும் அறிந்த சாதாரண உண்மைகளை குறிப்பிட்ட விதத்தில் எடுத்துக் கூறுவது வேறுபட்ட உண்மைகள் ஒரே தளத்தில் முரணின்றி ஒன்றோடொன்று சமமாக நிற்கும் வார்த்தைகளின் பொருளற்ற தன்மையைச் சுட்டிக்காட்டச் சந்தர்ப்பம் அளித்தன.11 இதை "மொழியின் துன்பியல்" என இயொனெஸ்கோ கூறுகிறார். 12

இந்நாடகம் 1949ல் எழுதப்பட்டு 1950ல் (மே 11) தெயாதர் டெ நொக்ராம்பியுல் என்ற அரங்கில் மேடையேற்றம் பட்டது. இதில் செயல்களில்லை, உரையாடல்கள் மட்டும் உள்ளன. அதனால் உரையாடலில் கூறப்படும் நிகழ்வுகள் சில அபிநயப்படுத்தப்பட்டன. நாடகத்தின் முடிவிலும் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அவ்வாண்டு அது 25 தடவை மேடையேறியது. பெரிதாக வரவேற்பு ஊதும் இல்லை. ஆனால் கால ஓட்டத்தில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா போன்ற நாடுகளில் மேடையேறி வரலாற்றுப் புகழ்படைத்தது. 1987ல் 11,000 தடவை மேடையேற்றப்பட்டுவிட்டது. 13 இந்நாடகத்தில் வரும் மாந்தர்கள்: திரு, திருமதி ஸ்மித், திரு, திருமதி மாட்டின், பணிப்பெண், தீயணைக்கும் படைத் தலைவன்.

நாடகத் தலைப்புக்கும் நாடகத்துக்கும் தொடர்பில்லை. ஆங்கில வீடொன்றை அப்படியே படம்பிடித்துக் காட்டும் காட்சியமைப்புடன், திரு, திருமதி ஸ்மித் "உப்புச்சப்பற்ற" உரையாடலில் ஈடுபட்டுள்ளார்கள். நாடகத்தின் முதல் வசனத்தைத் திருமதி ஸ்மித் பேசுகிறாள்: இப்பொழுது ஒன்பது மணி (மணிக்கூடு 5 முறை மட்டும் அடிக்கிறது). நாம் கூழ் (சூப்) குடித்தோம். மீன் சாப்பிட்டோம்... நமது பிள்ளைகள் ஆங்கில நாட்டுத் தண்ணீர் குடித்தார்கள். இன்று நாம் நல்லாகச் சாப்பிட்டோம். ஏனென்றால் நாம் லண்டனை அண்டி வாழ்கிறோம். எமது (குடும்பப்) பெயர் ஸ்மித். தினத்தாளைப் படித்துக் கொண்டிருக்கும் அவளது கணவர் சிறு ஒலிகளை எழுப்புகிறார் மணிக்கூடு ஒரு முறை ஐந்தும் மறுமுறை இரண்டும் அடிக்கிறது.

இரண்டாவது காட்சியில் பணிப்பெண்மேரி இப்படித் தன்னை அறிமுகம் செய்கிறாள்: நான்தான் பணிப்பெண். சாயந்தரத்தை நன்கு செலவிட்டேன். நான் ஒருவருடன் திரைப்படம் பார்க்கச் சென்று, பல பெண்களுடன் பார்த்தேன். பட முடிவில், தண்ணீர், பால் குடித்துவிட்டு படித்தோம்.

ஸ்மித் குடும்பத்தைச் சந்திக்க வந்த மாட்டின் குடும்பத்தினரின் உரையாடலும் விசித்திரமானது. திரு மாட்டின்: "மன்னிக்கவேண்டும். திருமதி அவர்களே. நான் உங்களை ஏற்கனவே எங்கோ சந்திருக்கிறேன்" திருமதி: "நானும் அப்படித்தான் எண்ணுகிறேன்" இறுதியில் தாம் கணவன் மனைவி என்பதைப் புரிந்து கொள்ளுகிறார்கள்.

தீயணைக்கும் படைத்தலைவனும் இவர்களது உரையாடலில் கலந்து கொண்டு "கட்டுக் கதைகள் எல்லோரும் சொல்லுகிறார்கள். இறுதியில் நாடக மாந்தரின் ஓரிரு சொற்களைக் கொண்ட உரையாடலுடனும், எல்லோரும் சேர்ந்து "அது அங்கு இல்லை, இங்கு உண்டு" என்று பல தடவைகள் சொல்வதுடனும் நாடகம் முடிகிறது.நாடகம் ஒரு மணிமட்டும் நீடித்தது. 30 பார்வையாளர் மட்டும் அமரக்கூடிய முண்டபத்தில் அன்று இருந்தது 15பேர் மட்டுமே, ஆனால் வேறு நாட்டவர்களாக அவர்களில் சிலர் காணப்பட்டனர்.

2 ல லெசொன் (பாடம்)1950ல் எழுதப்பட்டு 1951 (பெப்ரவரி 20) தெயாத்ர் போச் என்னும் அருங்கில் மேடையேற்றப்பட்டது. பெரிதாக வரவேற்பு ஏதும் இருக்கவில்லை. படிப்பிக்கும் தொழில்பற்றி எள்ளிநகையாடியும், மொழியியல்பற்றிய கருதுகோள்களை மறைமுகமாக சிரிப்புக்கிடமாக்கியும் நகர்ந்து செல்லும் நாடகம் இறுதியில் கொலையுடன் முடிகிறது. நாடக மாந்தர் மூவர் மட்டும் தான்: ஒரு ஆசிரியர், மாணவி, பணிப்பெண். ஆசிரியர், தன்னிடம் தனிப்படக் கல்வி கற்க வந்த இளம்பெண்ணை கற்பழித்துக் கொலை செய்கிறார். இத்தகைய செயலை முன்கூட்டியே எதிர்பார்த்த பணிப்பெண், முதலில் ஆசிரியரை அறிவுறுத்தல் செய்தாலும், கொலை நடந்தபின் பிணத்தை மறைத்து ஆசிரியரைக் காப்பாற்றுகிறாள். ஆங்கில மொழியைப் பயில உதவிய கைந்நூல் "மொட்டைப் பாடகிக்கு எவ்வாறு ஆதாரமாய் அமைந்ததோ, அவ்வாறே இயொனெஸ்க்கோவின் மகள் மறி–வ்றான்ஸ் பள்ளிக்கூடத்தில் கணக்குப்படிக்கப் பயன்பஃத்திய நூலும் இந் நாடகத்துக்கு உதவியது.14

மொழி ஆக்கிரமிப்பினதும், பயங்கரவாதத்தினதும் கருவி என்பது மட்டுமன்றி, விளையாட்டுப் போர்வையில் இடம் பெறும் காமஉணர்ச்சியும் இந்நாடகத்தில் காட்டப்படுகின்றன. கணக்குகளை மிகைப்படுத்தி, மொழியை மிகைப்படுத்தி வாழ்வின் அபத்தம் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆசிரியன் – மாணவியின் உரையாடல்:

ஆசிரியன்: ஒன்றும் ஒன்றும் எத்தனை?
மாணவி: இரண்டு.
ஆசிரியன்: மிச்சம் நல்லது. நீர் உமது படிப்பில் சரியான முன்னேற்றம் அடைந்திருக்கிறீர்... சரி. இரண்டும் ஒன்றும் எத்தனை?
மாணவி: மூன்று
ஆசிரியன்: மூன்றும் ஒன்றும்?
மாணவி: நாலு
ஆசிரியன்: நாலிலிருந்து மூன்றைக் கழித்தால் எத்தனை?
மாணவி: நாலிலிருந்து மூன்று... ஏழு
ஆசிரியர்: நீர் சொல்வதை மறுக்கவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படுகிறது15

## முடிவுரை

இயொனெஸ்க்கோ அரங்கியல் பற்றிய வாதங்களில் தீவிரமாக ஈடுபட்டார். போர்தொல்ட் ப்றெச்ர் போன்றவாகளுடைய நாடகங்களைக் காரசாரமாகச் சாடினார். இவர் பலருடைய பகைமையை சம்பாதித்தாலும், உற்ற நண்பர்கள் என்று குறிப்பிடத்தக்க இருவர் இருந்தனர்: றூமேனிய எழுத்தாளரும் மெய்யியல் வல்லுநருமான சியோறான், புனைமங்களை ஆய்வுசெய்து உலகப் புகழ் ஈட்டிய மிர்சியா எலியாட். "அந் நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்லாத்துறைகளிலும் நவவேட்கை வாதத்தின் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் காணக்கூடியதாக இருப்பினும், நாடகத்துறையைப் பொறுத்தமட்டில் 1930க்குப் பின் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. நவவேட்கைவாதம் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். 16 என்று கூறிய றூமேனிய கவிஞனும் இலக்கியவாதியுமாகிய இயொனெஸ்க்கோ, பிரான்ஸ் நாட்டின், ஏன் உலகத்தின், மாற்று அரங்கு ஒன்றின் தலைமை இடத்தை பிடித்துக் கொண்டார்.

## அடிக்குறிப்புகள்

1. தம்மிலும் வயது குறைந்த நாடக ஆசிரியர்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளும் நோக்குடன் தமது பிறப்பு ஆண்டை 1912 என்று பதிவு செய்தார். பார்க்க, வ்றான்சுவா பெண்டி, இயொஇனஸ்க்கோ (றைன்பெக் 1991) பக். 142.

2. அவரது படைப்புகள் 1931ல் "எலெஜி பென்த்றுவி இன்ரே மிசி" என்னும் தலைப்புடன் வெளிவந்தது.

3. பார்க்க, வ்றான்சவா பொண்டி, பக் 141

4. ருவென்ரியெத் செஞ்சறி தியேட்டர் பதிப்பாசிரியர், றிச்சட் ட்றெயின் (லண்டன், ந.யோர்க் 1995) பக் 53–54

5 பார்க்க, வ்றான்சுலா பொண்டி, பக் 9–10

6 கி.இன்னெஸ், அவாங் காட் தியேட்டர், பக். 216

7 அதே இடம்.

8 பார்க்க, அதே பக்கம்

9. அதே நூல், பக் 217

10. அதே நூல் பக் 218

11. ல கந்தார்றிஸ் சோவ், இம்மனுவேல் ஜக்குவாட் (பதிப்பாசிரியர்) கன்னம் 8–9: மிச்சேல் கோர்வின் டிக்ஷொன்னெயர் என்சிக்ளொபிடிக் டு தெயர்தா (1995 பரிஸி பக் .466–467)

12. ல கந்தர்த்றிஸ் சோவ் பக்.11

13. அதே நூல், பக். 15

14. ல லெசோன், இம்அனுவேல் ஜக்குவாட் (பதிப்பாசிரியர்) பக், 10

15. அதே நூல் பக். 37–388.

16. வ்றான்சுவா பெண்டி பக். 15

# நூறு டொலர்

குமார்மூர்த்தி

கண்ணாடிக்கதவிற்குப் பக்கத்தில் வந்த போது ஏதோ பொறிதட்டியது போல் பட்டதும் பொக்கற்றுக்குள் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது தான் நூறு டொலர் கூட இருப்பது தெரிந்தது. திடுக்கிட்டுப்போனான் வசந்தன் என்கிற வசந்தராஜா. மறுபடியும் எண்ணி ப்பார்த்தான் அப்போதும் நூறு டொலர் துருத்திக் கொண்டுதான் நின்றது. திரும்பிப் பார்த்தான் வெளிக்கவுண்டரில் இருந்து உள் கவுண்டர் வரைக்கும் உள்ள எல்லோரும் வழமைபோல் இயங்கிக் கொண்டிருந்தனர். கண்ணாடிக் கதவைத்திறந்து கொண்டு பலர் உள்ளே வந்து கொண்டும் வெளியே போய்க் கொண்டுமிருந்தனர். ஒருகணம் தனக்கு பணம் எண்ணித்தந்த அந்தப் பெண்ணை யும் வெறித்துப் பார்த்தான் ஆனால் அவள் ஒவ்வொரு வாடிக்கையாளருடனும் சிரித்துப்பேசி தன் வேலையில் மும்மரமாக இருந்தாள். கை கால் களிப்பதற்றம் தொற்றிக்கொள்ள எந்தசிந்தனையும் அற்றவனாய் வங்கியை விட்டு வெளியில் வந்தான். வெளியில் இன்னமும் பூப்பூவாகப் பனி கொட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் நின்று புதினமாகப் பார்த்தான். ஐந்து வருடமாகப் பார்ப்பதுதான் அன்று ஏதோ புதினமாகப்பட்ட. அவனுக்கு பனிக்குள் வரும் மனிதர்களையும் கார் களை யும் நின்று ரசித்தான். ஏன் நின்று பார் க்கிறாய் என்று யாரும் கேட்டுவிட்டால்.... என்று ஒரு பதட்டம் தொற்றிக்கொள்ள பக்கத்தில் உள்ள கோப்பிக்கடைக்குள் நுழைந்தான். ஒரு நாளும் அக்கோப்பிக் கடைக்குள் அவன் வந்தது கிடையாது. எல்லாமே புதிதாக இருந்தது. ஒரு கணம் மலைத்து நின்றவனை கோப்பிக் கவுண்டரில் நின்ற அழகியின் சினேகமாக பார்வை இதமளித்தது. கவுண்டரில்ப் போய்க்கோப்பி என்றான். அவள் ஒருகப்பில் கோப்பியை வார்த்துக் கொடுத்ததும் பொக்கற்றுக்குள் இருந்த சில்லறைகள் எல்லாவற்றையும் எடுத்து நீட்டினான். அவள் இவனை என்ன நினைத்தாளோ தெரியவில்லை, சிரித்துக்கொண்டே கோப்பிக் குண்டான சில்லறையை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொண்டு சரிஎன்றாள். கோப்பியுடன் ஒரு மூலையில் இருந்த மேசையில் வந்து உட்கார்ந்து கொண்டான். ஜக்காற் பொக்கற்றுக்குள் இருந்த சிகரட்டை எடுத்து பற்ற வைத்து ஆழமாக ஒருபுகை இழுத்து வெளியே விட்டான் கோப்பியையும் ஒரு முடறு குடி த்தான். எல்லாம் ஒருகணம் நிதானத்திற்கு வந்தது போலப்பட்டதும்.சுற்று முற்றும் பார்த்து விட்டு மறுபடியும் பணத்தை வெளியில் எடுத்தான். புதுக்கருக்கு குலையாத நூறு டொலர் நோட்டுக்கள் எல்லாம் சொர சொர வென்று சத்தம் எழுப்பியது. மூன்றாவது தட வையாக எண்ணிப்பார்த்தான். சந்தேக மில்லாமல் ஏழுதாள் இருக்க வேண்டிய இடத்தில் எட்டுத்தாள் இருந்தது. எந்த தாள் அதிகமாக வந்ததாள் என்று நோட்டம் விட்டான். எல்லாம் ஒன்று போல்பளிச் சென்றிருந்தது. பத்திரமாக மடித்து மறுபடியும் பொக்கற்றுக்குள் வைத்து விட்டு, மற்றப் பொக்கற்றுக்குள் இருந்த வங்கிப்புத்தகத்தை எடுத்து கணக்கைச் சரிபார்த்தான். வீட்டு வாடகைக்கும் ஆயுள் காப்புறுதிக்கும் வங்கியிலிருந்து கழிய வேண்டிய பணம் சரியாக இருந்தது ஆக இந்த மாதம் நூறு டொலர் அதிகமாக இருக்கின்றது. என்று நினை த்ததும் மனது கொஞ்சம் சந்தோசப்பட்டது. கடந்த ஒரு வருடமாக அரசாங்கம் வழங்கும் தர்மப்பணத் தில்தான் (சோசல்காசு) சீவியம் ஓடுகின்றது. எல்லாமே பற்றாக் குறைதான் எவ்வளவோ முயற்சி செய்தும் வேலை கிடைப்பதென்பது முயற்கொம் பாகிவிட்டது. வேலை செய்த காத காலத்தில் வாழ்க்கை இருக்கின்றது. ஊருக்கு அனுப்பும் பணத்திலும் குறைக்க வேண்டயதாகி விட்டது. கடந்த வாரம் வந்த கடிதத்தில் தம்பி நீ அனுப்பும் பணம் ஒன்றுக்கும் போதவில்லையடா, சாமான்களெல்லாம் யாண விலை குதிர விலை விக்குது. மருந்து மருந்துக்கும் கிடையாது அப்பையா படுத்த படுக்கை தான் சண்டையும் ஓயுறபாடாத் தெரியேல்ல கொண்ணர் பாடும் பெரிய கஸ்ரம். வேலை வெட்டி கிடையாது. பொடியளும் வளர்ந்துற்றுதுகள். வைச்சுக்கொண்டு தவிக்கிறார். ஒருபொடியையாவது உங்க எடுத்து விடசொல்லி கேட்டுக் கொண்டு திரியிறார். ஏதோ வசதியப் பொறுத்து செய் அடுத்த முறை காசு அனுப்பும் போது கொஞ்சம் கூட அனுப்பு. நல்ல சவுக்காரம் தொண்ணுறு ரூபா விக்குது வாங்கி உடுப்பு தோச்சு கன நாளாப் போகுது பனங்களிச் சவுக்காரம் மலிவுதான் ஆனால் துணிய சப்பிப்போடும் எண்டு மாட்டுக்கு ஒளிச்சு திரியவேண்டிகிடக்கு க்ளுக் என்று அவனையும் அறியாமல் சிரித்து விட்டான் நிலைமையை உணர்ந்து சுற்று முற்றும் திரும்பி பார்த்தான். நல்ல வேளை தன்னை யாரும் கவனிக்கவில்லை என்றதும் நிம்மதியாக இருந்தது. நீல கட்டி சுவுக்காரம் இரண்டு ரூபாய் விற்றது உறைகளைச் சேர்த்து அனுப்பி திருக் குறள் புத்தகம் வாங்கியது பனங்காயை காட்டி பசுமாட்டை வீட்டுக்கு கூட்டி வருவது எல்லாம் ஒரு கணம் நினைவில் வந்து போனது. இம்முறை அனுப்பும் போது இந்த நூறு டொலரையும் சேர்த்து அனுப்பவேண்டும். சே! எவ்வளவு கஸ்டப்

படுகிறார்கள் என்று நினைத்ததும் நெஞ்சு க்குள் ஏதோ செய்தது அவனுக்கு அவசரமாக பொக்கற்றுக்குள் இருந்த பணத்தை மறுபடியும் எண்ணினான். பின்பு கண்ணை மூடிக்கொண்டு ஒருதாளை உருவி எடுத்தான் மிகுதியை மடித்து பொக்கற்றுக்குள் வைத்துவிட்டு கையில் இருந்த நோட்டைப் பிரட்டிப் பிரட்டிப் பார்த்தான் மூலையில் இருந்த தங்கநிற ஒட்டுத்தாள் லைற் வெளிச்சத்துக்கு மின்னியது. நூறு என்ற எழுத்துக்களும் வழக்கத்துக்கு மாறாக பெரிசாக தெரிந்தன வீட்டில் உள்ளவர்கள் கஸ்ரம் எல்லாம் நீங்கப்போகின்றது என்ற எண்ணம் மேலிட்டதும் மனம் லேசாக துள்ளியது. ஏதோ இரட்சிக்க வந்த தேவ தூதன் போல் தாளை மெதுவாக தடவி ஸ்பரிசித்தான் இப்போது முப்பைத்தைந்தா முப்பத்தாறா போகின்றது என்ற ஒரு சந்தேகம் வந்தது. முப்பத்தாறாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாக முப்பத்தாறால் நூறை மனதுக்குள் பெருக்கிப் பார்த்தான் மனம் நிம்மதிப்பட்டது போல் திருப்தியாக இருந்தது. பின்னர் அத்தாளை வலு மெதுவாக மடித்து ஜக்கற் பொக்கற்றின் ஒளிவறைக்குள் கொண்டு வைத்ததும் தான் இதை மனைவியிடம் சொல்வதா வேண்டாமா என்று மனம் திடுக்கென்றது. மூன்று மாதமாக வின்ரர் தொடங்கிய திலிருந்தே கோட் (பெண்கள் குளிருக்கு அணிவது) ஒன்று வாங்கவேண்டும் என்று நச்சரித்துக் கொண்டிருக்கிறாள். குறைந்தது நூறு டொலராவது வேண்டும் நாலு வருடமாகப் பாவித்தது குளிர் தாங்குதில்லை என்று அவள் முறையிடும் போது அவனுக்கு தன்னிலேயே எரிச்சல் வரும். மகன் வேறு வீடியோக் கேம் வேண்டுமென்று புரட்டி எடுக்கிறான். தேவையானதைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் சே! கூண்டுக்குள் அடைபட்டது மாதிரி என்ன மூச்சு முட்டுற வாழ்க்கையிது என்று சலி த்துக்கொள்வான். உயிரை காப்பாற்ற ஓடி வந்து உயிரைத்தவிர மற்ற எல்லாவற்றையும் இழந்து விட்டோமே என்று புலம்புவான். பிள்ளைகள் தான் எங்களுடைய ஒரே நம்பிக்கை. அவர்களையும் இந்த நாட்டுக் கலாச்சாரம் மாற்றப் போகிறதோ என்று மனைவியைப் பார்ப்பான். கொஞ்சம் மாறுதல்கள் இருக்கத்தான் செய்யும் ஆனால் அதிக தூரம் அந்நியப்பட்டு போய் விடமாட்டார்கள். இதற்கெல்லாம் மனசைப் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள் என்று அவனை அடக்குவாள் அவள். இப்போது எங்களுக்குள்ள அடையாளம் மொழி ஒன்றுதான் அதுவும் இவர்களுக்கு இரு க்காது போல் இருக்கின்றது என்பான் அவன். அவள் பார்வை அவன் கவலை யைப் பகிர்ந்து கொள்வதாய் இருக்கம்.

கண்ணாடிக்கதவைத் திறக்கும் போதுதான் அவளைக்கண்டான் வசந்தன் கண்டதும் சர்வநாடியும் ஒருகணம் ஒடுங்கிப் போயிற்று அவனுக்கு தன்னிடம் விசாரிக்கத்தான் வருகிறாளோ? சே! என்ன அசட்டுத் தனமான காரியம் பண்ணி விட் டோம். பணம் கூடுதலாக இருப்பது தெரிந்ததும் அந்த இடத்திலேயே திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும். அல்லது நேராக வீட்டுக்காவது போயிருக்க வேண்டும். மடத்தனம் பண்ணி விட்டேனே! என்று தலையி லடித்துக் கொண்டான். அதற்குள் அவள் அவனை அண்மித்து வந்ததும் ஒரு புன்சிரிப்போடு ஹாய் என்று சொல்லி விட்டு அப்பால் உள்ள கோப்பிக்கவுண்டருக்கு சென்று விட்டாள். அவள் சொன்ன ஹாயும் புன்சிரிப்பும் அவனது இதயத்தை ஈட்டி யால் குத்தியது மாதிரி இருந்தது குற்ற ணர்வு உந்த கதிரையிலேயே நெளிந்தான் அதற்குள் அவள் கோப்பியை வாங்கிக் கொண்டு அவனருகில் வந்து மறுபடியும் அழகான ஒரு புன்சிரிப்பை அவனைப் பார்த்து வீசிவிட்டு கண்ணாடி க்கதவைத் திறந்து கொண்டு மறைந்து விட்டாள். அவள்போவதையே மூச்சு விட மறந்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அவள் மறைந்ததும்தான் மூச்சே ஆசு வாசமாக வெளியில் வந்தது. சிகரட் ஒன்றை எடுத்து அவசரமாக பற்றவை த்தான். அவனையு மறியாமல் கை பொக் கற்றுக்குள் நுழைந்து மீண்டது.

அவள் தந்த காசு என்ற நினை ப்பு வந்ததும் மனது அவளைப்பற்றி வட்ட மடிக்கத் தொடங்கியது. எந்த நாட்டிக் காரி யாக இருப்பாள் இவள் என்று மனம் ஆரா ய்ச்சி செய்தது. ஒடுங்கல் முகமும் நீட்ட மூக்கும் அகலக் கண்களும் இருக்கிற படியால் இவள் நிச்சயமாக கிரேக்க நாட்டு க்காரியாக தான் இருக்க வேண்டும். சற்றே தடித்த உதடுகளும் அலை அலையாக செம்பட்டை முடியும் அவளின் பொன்னிற முகத்திற்கு கச்சிதமாக இருந்தது பட்டதும் இவளுக்கு என்ன பெயராக இருக்கும் என்னு நினைத்துப் பார்த்தான். இவளவு காலமும் வங்கிக்கு வருகிறேன் எழுதி நெஞ்சில் மாட்டியிருக்கும் பெயரை க்கூட கவனிக்கவில்லையே என்று தன்மீது நொந்து கொண்டான். பாவம் நல்வள் எந்த நேரமும் எவ்வளவு அழகாச் சிரிக்கிறாள். இந்த நூறு டொலர்ச் சமாச்சாரத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறாள் வங்கிக்கு இதெல்லாம் பெரிய பணமாக இருக்காது. எல்லாம் சரியாக்கி விடுவாகள். என்று தனக்குத்தானே திரு ப்திப்பட்டுக் கொண்டான்.

எழுந்து வீட்டுக்கு என்று நினைத்தவனாக இருக்கையை விட்டு எழுந்தபோது தான் இது அவளின் தவறு தானே. ஒரு வேளை அவளே இதற்குப் பொறுப்பாளியாகி அவள் சம்பளத்தில்....... என்று நினைத்ததும் நெஞ்சுக்குள் சுரீர் என்றது. பாவம் அவளுக்கும் இதனால் என்னென்ன கஸ்ரமோ என்று என்று மனம் அவளுக்காக இரக்கப்பட்டது. அவள் வாடிய முகமும் வந்து போனது. வெடுக் கென்று சென்று வங்கிக்குள் நுழைந்தான். அதே புன்சிரிப்போடு அவனை மறுபடியும் வரவேற்றாள். அவள் சற்றுமுன் பணம் மாற்ற வந்திருந்தேன் நூறு டொலரை அதிகமாக தந்து விட்டாய் என்று சொல்லிக் கொண்டே பத்திரமாக மடித்து வைத்திருந்த நூறு டொலர் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் ஒரு கணம் திகைத்துப்போய் பின்கையை நீட்டி வாங்கிக் கொண்டே தங்கியூ தங்கியூ என்று இரண்டு முறை சொன்னாள். அவன் திரும்பி நடந்து கண்ணாடிக் கதவருகே வரும் போது அவளை ஒருமுறை திரும்பிப் பார்த்தான் கையில் நோட்டையும் பிடித்தபடி அவனையே பார்த்து புன்னகைத்துக் கொண்டி ருந்தாள் அவள். மனதுக்குள் இனம்புரியாத நிறைவு வியாபித்துக் கொள்ள வெளியில் இறங்கினான். பனி இனன்னமும் கொட்டிக் கொண்டிருந்தது.

# என் மனம் ஊஞ்சல் கட்டி ஊரிலை ஆடுது

ஞானப்பிரகாசம்

இப்ப சித்திரை மாசமல்லோ - சித்திரை மாத நிலவு தலைச்சோழகம் - எங்கள் ஊர்கோவில் திருநாள் - புதுப்பனைக்கள்ளு இவையெல்லாவற்றையும் நினைப்பூட்டும் சித்திரை மாதம். பரதேசியாய் வாழும் இந்தவாழ்கைக்கும் ஏதாவது அர்த்தம் இருக்குமென்றால் இந்தப் பழைய நினைவுகள் தான் - வாழ்க்கை என்பது சுற்றிவரும் சக்கராமா? - ஆற்றில் ஓடிப்போன நீரா? - போனது போனதுதான்.

எப்பவோ கனகாலத்திற்கு முதல் நானும் நண்பர்களும் சந்தோசமாக கழித்த கோவில் பெருநாள் ஞாபகத்திற்கு வருகின்றது. - பெருநாள் பூசை முடிய மதிலடியில் நிற்கின்றோம் - நான் ஜெயம் ஜோதி மணி தாஸ்.

எங்கள் காலத்து அழகுக்பெண்கள் ரூபி ஜெயந்தி லெந்சியா........ வழியாகத்தான் வரவேண்டும். பெருநாள் நாள் எத்தனையோ வேலைகள் இருக்கும். - போவோமடா என்று ஜெயம் அவசரப் படுகின்றான். டேய் ரவுனுக்கு போய் இவ்வளவு வெலவழிச்சு எப்படிஎப்படி யெல்லாம் உடுப்புக்கள் வேண்டிய இந்த பெண்கள் நாங்கள் இதிலையில்லா விட்டால் - அவள்களுக்கு வாழ்க்கை வெறுத்துப் போகாதோ? மணி சொல்லி சிரிக்கின்றான்.

(எங்களை அவர்கள் கடந்து போகும்போது அந்தக் கடைக் கண் பார்வைக்கே வாழ்க்கையிருந்தது)

இந்த நேரம் பார்த்து வியேந்தம்மான் அந்த இடத்தால் வருகின்றார். (இவருக்கு உண்மையான பெயர் என்ன எத்தனை வயது - இதெல்லாம் ரிசி மூலம் நதி மூலம்)

வழமைமை போல் சாறம் கட்டியிருந்தால் என்ன வேட்டி கட்டியிருந்தால் என்ன வெளியே கோவணம் தெரிய அவர் வந்தபோது - "அம்மான் எல்லாம் தெரியுது சீன்சை அடியுங்கோ" என்று மணி சொல்ல - அவர் உதார் கிளமென்றின்ரை கிளக்காலியோ என்று ஒரு தூசணம் பூசை முடிய வந்த அருளமக்கா காதைப் பொத்தியபடி - சனி மனுசன் உனக்கு பூசையுமில்லை பெருநாள் திருநாள் என்றும் இல்லை - தூசணம் பேசுகிறாய் - நரகத்திற்குத்தான் போகப் போகின்றாய் - என்கின்றா. - வியேந்தம்மான் திருப்பி சொன்னது அப்படியே இப்பவும் ஞாபகத்தில் இருக்கு. உங்களைப் போல் எல்லோரும் மோட்சத்திற்க்கு போனால் ஆண்டவன் படைச்ச நரகத்தில் பொச்சுமட்டையையோ போடிறது? என்னைப் போல ஆட்கள் தேவைதானே.

வியேந்தம்மானைப் பற்றி இன்னொரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது. இவரை சந்தையடியில் தற்செயலாக கண்ட கோவில் மூப்பர் நீ கோயிலுக்கு வாறது இல்லை - நிலுவைக்காசும் கட்டிறது இல்லை நீ செத்தால் கோவில் சேமக்காலையில் உன்ரை பிரேதத்தை அடக்கம் செய்ய விடமாட்டேன் என்றாராம். - அப்ப நீ வச்சிரு என்று வியேந்தம்மான் சொல்லி சிரித்தாராம். நாங்கள் ஊரில் இருந்த காலத்திலையே வியேந்தமான் இறந்ததும் சவ அடக்கப் பிரச்சனையால் மூப்பருக்கு தாசன் அடித்ததும் கோவில் சேமக்காலையிலையே அவரை நல்லடக்கம் செய்ததும் பின்பு நடந்தது. போர் இல்லை. வாழ்பு பற்றி பயம் இல்லை அப்பன் வாழ்ந்து அப்பனுக்கு அப்பன் வாழ்ந்த பூமியில் அப்படியே நாங்களும் வாழ்ந்து விடுவோம் எங்கள் புழுதியிலையே வேர் ஊன்றுவோம் என்றிருந்தோம்.

பெருநாள் என்றால் பூசைமுடிய விருந்திருக்கும் இது முடிய விளையாட்டு போட்டிகள் பின்பு இரவு கூத்திருக்கும். நாங்கள் செக்கன் சோ பார்த்துவிட்டு வர - அப்போதுதான் நாட்டுக் கூத்தில் பேர் போன ஆட்கள் ஞான சவந்திரியாகவோ சங்கிலியனாகவோ யுவானியாரகவோ பாடிக் கொண்டிருப்பார்கள் - சதந்திரமில்லா எங்கள் அழகுகள் தாய் மாரோடு நித்திரை தூங்கித் தூங்கி கூத்தைப் பார்த்துக்கொண்டு இருப்பார்கள்.

இம்! அதெல்லாம் போயிற்று. அடுத்தலை முறைக்கு இவையெல்லாம் கிடைக்கவில்லை.

ஒரு பெருநாள் தொடங்கிய காலத்தில் தான் யோதி வந்து சொன்னான் கடற்கரையில் ஆமி சிங்கள நினைவுத் தூண் ஒன்று கட்டுது. கதைக்கபோன ஆட்களுக்கு திருக்கை வாலால் அடிச்சு போட்டாங்கள். நேற்று அங்கு போய் இன்னாரை சந்திச்சனான். கெதியாய் பெயத்தெறிவேன் உணர்ச்சி பொங்கி நின்றான். தென்றல் காற்று புயலாகமாறும் அறிகுறி அடுத்த பெருநாளுக்கு யோதியில்லை இந்தியாவுக்கு போய் விட்டானாம். என்ற குசுகுசுப்பு. ஜெயம் நோர்வேக்கு போயிற்றான். தாசன் பிரான்சுக்கு போயிற்றான் மணி ரெயினிஸ்கில் - நானும் இப்படியே - திக்கொண்றாய் திசைக் கொருவராய் நித்தமும் பூசை மாலையில் ஆராதனை - கோவில் கோவிலை சுற்றிவாழ்வு - எல்லாவற்றிக்கும் ஒருநடு நாயகமாக எங்கள் அந்த கோவில் கோவில் குருவை தெய்வமாய் மதிக்கும் மக்கள் சனமும் சந்ததடியுமாய் இருந்த எங்கள் கோவிலை சுற்றி சிறு நெருஞ்சி படர்ந்திருக்காம் கேட்க்க நெஞ்சுருகும்.

அப்பவும் சின்னச் சின்னச் பிரச்சனைகள் இல்லை என்று இல்லை. சாதியென்றும் உயர்வு தாழ்வு என்றும் போட்டி பொறாமை யென்றும் ஆனால் அமைதியிருந்தது. எட்டு மயிலுக்கப்பால் இருக்கும் பொலிஸ் ஸ்ரேசனுக்கு பயித்திலையில்லை. சக மனிதன் மீது அன்பும் மரியாதையும் வாழ்வோடு இருந்தது.

இப்படியான இந்த நினைப்பில் இந்த குளிரிலும் நான் எரிகின்றேன். ஆழக்கடலில் களைத்து களைத்து வலை இழுக்கும்போது மனைவி கட்டிவைத்த சோத்தை நினைக்கும் மீனவனைப்போல் இந்த வாழ்வில் இந்த நினைப்புக்கள்.

# வேதனையிலும் சாதனை புரியும் இளைஞன்

இடம்பெயர்வு என்னும் பூதம் அன்பு நெஞ்சங்கள் ஒவ்வொன்றையும் வேட்டையாடி தன் பசியை போக்கிக் கொண்டிருக்கின்ற வேளையிலும் இளந் தளிர் ஒன்று தன் ஆற்றலை மக்களின் வேதனை வியர்வைகளோடு கலந்து அவர்களின் இதயங்கள் எழுப்பும் ஒலிகளை இதய முரசு ஆக வெளிக்கொணர்கின்றது.

செல்மர் எமில் என அழைக்கப்படும் திருமறைக் கலாமன்ற நாடகப் பயிலக மாணவன் இதய முரசு என்னும் கையெழுத்து சஞ்சிகையை வாரத்திற்கு ஒரு இதழாக வெளியிட்டு வருகின்றார்.




யாழ்வலிகாம இடம் பெயர்வின் பின் அவ் இடப் பெயர்வின் தாக்கங்களை அவலங்களை, தன்னுள் தாங்கி வெளிவரும் இவ்இதழ் இடப்பெயர்வு நீடிக்கும் வரை தன் ஆயுட் காலத்தையும் நீடிக்க சித்தம் கொண்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பெருநிலப்பரப்பு போன்ற இடங்களில் தன்தொடர்பு முகவரிகளை ஏற்படுத்திக் கொண்ட இவ்இதழில் வளர்ந்து வரும் பல எழுத்தாளர்களின் படைப்புகள் விரிந்துகிடக்கின்றன. கவர்ச்சிகரமான இதழ் அமைப்புடன் (lay out) உலகியல் செய்திகளையும் சேர்த்து வெளியிடும் இக்கையெழுத்து சஞ்சிகையின் ஆசிரியர் செல்வன் கி. செல்மர் எமில் இம்முறை புதுவருடத்திற்கான தனது இதழை அட்டைப் படத்துடன் வெளிவரச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதய முரசின் புதுவருட இதழில் ஒரு கவிஞன் அவ்வருடத்துடன் விசித்திரமான முறையில் உரையாடுகின்றான்.

## உனக்கு ஏன் வரவேற்பில்லை?

புதிய ஆண்டே
உன்னை
இன் முகத்தோடு
வரவேற்க நான்
இனியும்
விரும்பவில்லை!
ஒவ்வொரு ஆண்டையும்
முகம் மலர வரவேற்று
மாறாத காயங்களை
ஏற்படுத்திக்
கொண்டதுதான்
அவை - எனக்கு
விட்டுச் சென்ற பதிவுகள்
எனவே
உன்னை வரவேற்க
நான் தயாரில்லை
விரும்பினால்
நல்லதைச் செய்
நன்றியோடு
வழி அனுப்பி
வைப்பேன்

-அனி-

இன்றைய இக்கட்டான நிலையிலும் தன் ஆற்றல்களை ஒருங்கிணைத்து இலக்கியத்துறையில் காட்டும் இவ் இளைஞனின் ஆர்வம் நாளைய எழுத்துலகில் நிச்சயம் மிளிருவது திண்ணம். இந்த சஞ்சிகையும் அதன் ஆசிரியரின் திறமையும் படைப் பாளிகளின் படைப்புகளும் மேலும் சிறப்புறவர கலை முகம் வாழ்த்தி நிற்கின்றது

# விலாசப் பாடல்

செல்வம்

யாழ்பாணச் ஸ்னோவில் சறுக்கி
முகம் உடைந்ததாக
அறிந்தேன் நண்பா?
இப்போ எப்படி?

எப்பவோ எழுதிய கடிதத்தில்
உன்பாடு
எப்படி யென்றாய்?

ஏதோ இருக்கின்றேன்

இருக்கின்றேன் என்பததற்க்கும்
வாழ்கின்றேன் என்பதற்கும்
உள்ள வித்தியாசத்தை
நீ அறிவாய்.

ஐரோப்பாலில் இருந்தால் என்ன
அமெரிக்காவில் என்றால் என்ன
சப்பாத்க்களவாய்
காலைச் சீவும் சீவியம்

நாற்பது கூட ஆகவில்லை
நானுறாண்டுச் சலிப்பு–
கயித்தைத் பாம் பென்றும்
பாம்பைக்கயிறெண்டும்
மயங்கும் ஞானத்தின் சூனியம்.


குற்றங்களின் கண்ணீரோடும்
குழந்தைத்தனமற்ற சிரிப்போடும்
வாழ்வைக் கலைக்கும் பரதேசி – நான்..........

# மனிதரின் நினைவலைகள்

கவிஞர்
சிவா சின்னத்தம்பி

வெள்ளி பனி கொட்டி வேகமாய் குவிந்திடும் வேளை இங்கு
அள்ளி பிடித்து ஒரு கடி கடித்து தின்றிடலாம் என்றால்
பள்ளி பருவ வயதில்லை பால் வடியும் முகமில்லை
துள்ளி திரிந்திடவும் துணிவான தேகமில்லை.
கிள்ளி கிள்ளை மொழி பேசி கொள்ளையின்பம் கண்டிடவும்
பள்ளி அறை சென்றால் பயங்கர குளிர் பிடித்திருக்கும்
தள்ளி விட்டால் தரை மீது வீழ மாட்டோம் தனி பனிமலை
–மீது தான் வீழ்வோம்
முள்ளி குத்தினாற் போல் முழு உடம்பும் பனி மூடிக் குவிந்துவிடும்
சொல்ல முடியாது ஜில் என்று சிலிர்த்து சிவப்பாகிக் கன்னம்
மில்லி கணக்கில் மிதமாக மதுவினை மண்டனும் போலிருக்கும்
மல்லி வா மச்சான் மாரும் வா மனமாரக் குடிப்போம் கூடி என்று
மெல்லி சாய் மூடிதனை முறுக்கித் திறந்து மூலை அறையொன்றில்
ஆரம்பித் திடுவோம் அசல் பார்ட்டி அதில் சிறு அமர்கழம்
அரசியல் புதினங்கள் அடிக்கடி பேசி அநியாயம் அவர்களான்றும் அரை
குறை ஆங்கில வார்த்தைகளும் இடையிடையே செப்பி
–அட மடயா என்று அன்போடு பேசி
அருமையே அருமையென்று அதில் நியாயம் கூறி
மல்லாந்து படுத்திடுவோம் மதிற் சுவரில் தலைமுட்டும்
மற்றாளின் மடியில் காலிருக்கும் மதிப்பும் மிகுந்திருக்கும்
மதியிழந்தும் சனமிருக்கும் சாம்பர் கொட்டிசிகரெட்டால் சேர்ந்திருக்கும்
மிச்சமதில் கண்ணிருக்கும் முடிப்பதற்கும் ஆளிருக்கும்
மைனர்ஸ் குளிரிலும் மனம் நிறைந்த மனிவிருந்து
மணியோ மறுநாளாய் முற்காலை ஒன்றிருக்கும் பசியும் போயிருக்கும்
மாடியின் கீழ் வசிக்கும் மனிதரின் தடியிடிக்கும் சத்தம் மானமுடன்
வாழும் மனிதரின் சுதந்திரத்தை நினைவுறுத்தும்.







கனடா தி.ம.க.மன்றத்தால்
நடாத்தப்பட்ட "ஒனிறோ" வில்
இடம்பெற்ற சில காட்சிகளும்
கலைஞர்களும்
கனடா, ரொறன்ரோ





கனடா/அமெரிக்க தி.ம.க. மன்ற
உறுப்பினர்களுடன் இயக்குனர்





பலிக்களத்தின் இணைப்பாளர்களில் ஒருவரைப் பாராட்டி



இசையமைப்பாளர் போல் ஞானோதயனுக்கு ஈழத்துப் புலவர் சிவானந்தன் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்

**கனடா தி.ம.க.ம.**



பலிக்களம் கலைஞர்களைப் பாராட்டி......



யாழ் திருமறைக் கலாமன்ற கலைஞர்களால் உருவாக்கப்பட்ட நாட்டுக்கூத்து ஒலியிழை நாடாவை கனடா தி.ம.க.ம. வெளியீடு செய்கிறது.




க.தி.க.ம. புத்தக விற்பனையில்......

# 1995

# வட அயர்லாந்து நோபல் பரிசுக் கவிஞன் ஸீடீஸ் ஹீனி

## யமுனாராஜேந்திரன்

ஸீமஸ் ஹீனி 1995 ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசுபெற்ற வட அயர்லாந்துக் கவிஞர். ஹீனி 1939 ஆம் ஆண்டு வட அயர்லாந்து டெர்ரி கிராமப் புறத்தில் பிறந்தவர். தந்தை விவசாயி. இவரது கவிதைகளில் கிராமமும் இயற்கையும் விவசாயிகளின் வாழ்க்கையும் அனு பவங்களும் ஆழ்ந்த இமயத்தை பெறுகின்றன. பெல்பாஸ்ட் கலிபோர்னியா பல்கலைக் கழகங்களில் பயின்றவர். ஆரம்ப நாட்களில் பத்திரிகையாளராகவும் ஒலிபரப்பாளராகவும் பணிபுரிந் திருக்கிறார். 1989ஆம் ஆண்டுலிருந்து - ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கவிதை களுக்கான பேராசிரியாக இருக்கிறார். இவரது முதல் கவிதை தொகுதி 1966 இல் வெளியான Death of Naturalist. தனது கிராமப்புற வாழ்வுபற்றிய, இழந்து பட்ட இயற்கையின் அமிழ்ந்த வாழ்க்கை பற்றிய ஏக்கமே இக் கவிதைகளில் வெளியானது. இவரைப் பிரச்சினைக் குரிய கவிஞராக வெளிக்கொணர்ந்த கவிதைகள் இவர் வடஅயர்லார்தின் அரசியல் நெருக்கடிகள், கொலைகள், விடுதலைப்போராட்டம் பற்றி எழுதிய வைகள் இத்தகைய கவிதைகளைக் கொண்ட முழு அரசியல் தொகுப்பு 1975 இல் வெளியான The North.

இவரைப்பற்றி இரண்டு விதமான விமர்சனங்கள் இருக்கிறது. இவர் வட அயர்லாந்துப் பிரச்சினையில் மதில்மேல் பூனைமாதிரி எப்பக்கமும் சாராமல் இருக்கின்றார் என்பது ஒன்று, பிறிதொன்று பிரிட்டீஸ் ராணுவத்தின் அத்து



மீறல்களை மட்டுமே விமர் சிக்கிறார் என்பது மற்றொன்று. We slaughter for the commmon good என்று எழுதிய ஒரு கவிதை இவரை விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவானவர் என்ற குற்றச்சாட்டைக் கொண்டு வந்தது. ஸிமஸ் ஹீனி உண்மையில் IRA வின் அர்த்தமற்ற வன்முறைகள் மனித உரிமை மீறல்கள் குறித்து நிறையக் கவிதைகளில் பேசுகிறார். அதே வேளைதான் பிரிட்டீஸ் கவிஞனல்ல என்று மறுத்துரைத்து வட அயர்லாந்தின் தனித்தன்மை பேண வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்.

இவருடைய கவிதைத் தொகுப்புக்களைத் தேடி லண்டனில் பல்வேறு நகராட்சிகளின் (Boronge) சிறுபானிமை இன நூலகங்கள் முதல், மிகப்பெரிய ரெபரன்ஸ் லைப்ரரிகள் வரை தேடினேன். இவரது தொகுப்புக்கள் எதுவுமே கிடைக்கவில்லை. Dillon Books போன்ற புத்தகக் கடைகளில் கூட இவரது புத்தகங்கள் கிடைக்கவில்லை. காரணம் இவரது வட அயர்லாந்து வேர்களும் அரசியலும் தவிர வேறாயிருக்க நியாயமில்லை.

இறுதியில் வட அயர்லாந்து பெல்பாஸ்சில் இயங்கும் Blackstaff Press பதிப்பித்த இருபுத்தகங்களையும் லண்டன் Faber and Faber வெளியிட்டிருக்கும் அவரது The North, The Death of a Naturalist மற்றும் Colleeted Poems பிரதிகளையும் எழுதித் தருவித்தேன் இவைகளிலிருந்துதான் ஒரு தேர்வுத்

தொகுப்பின் மொழியாக்கம் இவ்வாண்டின் மத்தியில் தமிழகத்தில் வெளியாகவிருக்கின்றது. அத்தொகுப்பிலிருந்த மூன்று கவிதைகளையே இங்கே தந்திருக்கின்றேன். அநேகமாக தமிழில் முதல்முதல் வெளிவரும் ஸிமஸ் ஹீனியின் கவிதைகள் இவைகளாகவே இருக்கும்.

இம்மூன்று கவிதைகளும் Triptych எனும் தலைப்பிலான ஒரே கவிதையின் மூன்று பகுதிகள் தான். மும்மடக்கு மேசை என்று Triptych மொழியாக்கம் பெறுகிறது. மூன்று வகையான உணர்ச்சிக் கப்பல்களைத்தான் இக்கவிதை பேசுகிறது. பிரண்பன் யன்ஸ்வரிக் பெவினிஸ் போன்றவை வட அயர்லாந்தின் நகரங்கள். ஆங்கில ஏகாதி பத்தியத்தின் காலனியாக நூற்றாண்டு களாக வதைபடும் நிலம் வட அயர்லாந்து பிராடஸ்யன்ட மதம் அதைச் சார்ந்த பிரிட்டீஸ் அரசரிகாரம் கத்தோலிக்க மக்களை அரசியல் பொருளியல் ரீதியில் ஒடுக்கி வருவது வட அயர்லாந்தின் வரலாறு. இச் சூழலில் வட அயர்லாந்து மக்களின் கலாச்சாரத் தனித்தன்மையை வலியுறுத்தும் ஹீனி, ஒரு கவிஞருக்கு அங்கு அன்றாடும் நடைபெறும் கொலைக-ளால், மனிதப் பேரழிவுகளால் தீராத மனஅவதிக்கு உள்ளாகிறார்.

கொலைகள், கொலைகள் பற்றிய வரலாற்று வேர்களுக்கான தேடல் பின்வாங்கவே டுடியாத காலடிகளின் எதிர்ப்பு ஊர்வலம் போன்றவற்றையே ஸிமஸ் ஹீனியின் கவிதைகளும் பேசுகின்றன.

# ஸிமஸ் ஹீனி
# மூன்று கவிதைகள்

## I

## ஒருகொலை நிகழ்ந்த பின்னால்

அவர்கள் அங்கேதான் இருந்தார்கள்
நினைவில் செதுக்கியமாதிரி
கண்டுமௌனித்து மறுபடி நடந்தது மாதிரி
துப்பாக்கியுடன் குன்றின்மீது இரு இளைஞர்
தமது ஆயுதங்கள் போல் தீதும் உறுதியும் கொண்டு

எமது
இடர்களுக்கு எவரைத்தான் நோவது?
எமக்கிடையிலேயே கொஞ்சம் இளைப்பாறவென எம்மில்
எவர்கனவு கண்டார்?
மழையில் அலையும் ஒளித்தியட்டில் காற்றினால்
வரண்ட கற்களினிடையில்
தீக்கோளம், இரத்தம், தண்ணீர், நடுகற்கள்
ஒட்டுண்ணி இவைகளினிடையில்?

இந்தத் திசைக்கு நிஜ வெறுமையில்
பிரண்டனிலிருந்து டன்ஸ்வரிக் வரை இன்னும்
உயிரிடனிருக்கிற எம்
சின்ன விழிச் ஜீவன்களை நினைக்கிறேன்
தேவதாரு மராங்களின் கூட்டம்
கலைக்கப்படாத வண்ணமலர்க் கொத்துக்கள்

கல்விடொன்றை நான் காண்கிறேன்
தூண் பிறைவாசல் அறை
பிரகாசமான ஜன்னல் வெளிச்சம்
இதயம் விகசிக்கிறது
பாடடுகளை நோக்கி அறுபதாடி நடந்தால்
கானாய்கெழுத்தி மீன் வாய்கலாம்

இளம்பெண்ணொருத்தி இன்று எம்முடன்
வீடுநோக்கி நடக்கிறாள்
தனது கூடைநிறைய
புத்தம் புது உருளைக்கிழங்குகள் மூன்று கொடுத்து
முட்டைக்கோசுகள் காரட்டுகள்
அவைகளின் மீது இன்னும் மாறாத பசுமை

## II

## குறிக்காரி

ஊசலாகக் கொண்டிருந்த என் நாவைத் திருகி
அவளைக் கேட்டேன்
எங்களுக்கு என்னதான் நேரப்போகிறது?
மறக்கப்பட்ட கிணற்றுத்தண்ணீர்
அதிகாலை வெடியோசையில் நடுங்கியிருக்ககூடும்
அல்லது பனிக்கூரை உடைந்த ஸத்தம்
அவள் பேசத் தொடங்கினாள்
நமது மிகஅசடிப்படையான அமைப்பு
மாறுதலுக்குரியது
முற்றுகையிடப்பட்ட நாய்கள்
பல்லி முதலைப் பேரினம் மறுபடிவீழும்
எறும்புகள்
மாற்றம் பெறும்

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை
வலிமையும் குரலும் பெறவில்லையானால்
இரும்புக் கவசமணிந்து இரத்தம் கக்கும் மரம்
மறுபடி துளிர்க்க வில்லையெனில்
சிறார்களின் மூச்சுகள் போல்
மொப்பவிழ்க்கவில்லையெனில்
அகம்மொழிந்த
கற்குழம்பு உயிர்க் குஞ்சு பொரிக்கவில்லையெனில்
புத்திசாலித்தனமான வனதேவதைகள்
எம்மக்கள்
பணத்தைப் பற்றியே நினைக்கிறார்கள்
சீதோரஷ்ணநிலை பற்றிப் பேசுகிறார்கள்
எண்ணெய் வியாபார மோசடிகள் இவர்களது
எதிர்காலத்தை அலைக்கழிக்கிறது
பிறர் பொருளை சுபகரிக்கும் ஆசையில்
கம்முண்டு கிடக்கிறார்கள்
மக்கள் திரளின் மௌனம்
மீன்பிடிப்போரின் பேரோசையில் புதைந்து போகிறது

நாம்
செவிமடுத்து வைத்திருந்த எம் நிலம்
நீண்டநாட்களாக
கலைந்து போய்க் கிடக்கிறது
உள்ளறைகளில் பழிகார மோப்பக் கூடாரங்கள்
எமது தீவு
சந்தோசமற்ற குரல்களால் நிரம்பியிருக்கிறது

## III

## வெள்ளத்தின் விளிம்பில்

பெவினிஸில் துப்பாக்கிச் சீறலைக் கேட்டேன்
வைத்திருப்போரின்
மரணப் பாடலைக் கேட்டேன்
கோபுரத்தின் கீழ்
செதுக்கப்பட்ட துறவுமடத் தலைகள் தண்ணீரில்
ரொட்டியைப்போல்
கரைந்து உதிர்ந்தன
போவாவில் கடவுளின் கண்கொண்ட காமத்தில்
வாய்பிளந்த கல்
கல்லறைகளுக்கிடையில் விழுந்து கிடக்கிறது
இரப்பை முகத்துடன் பொறியில் அகப்பட்டு
என் மௌனத்துக்கு
மௌனத்தை பதிலிறுத்தது
மழை நீருக்கு ஒருகுடுவை சாபம்.

குதிரைத்தீவில் குளிர்ந்த கணப்பு
அடுப்புக்கல்லினின்று திறந்த
புகைக் கூண்டுக்கு அப்பால்
வானத்தைக் கவனித்தேன்
ராணுவ ஹெலிகப்பலொன்றின் அடர்த்தியான
கண்காணிப்பு
சுத்தியலொன்று அருகில் உடைந்த ஜாடி
ஜன்னல் சட்டத்தில் சிலந்தி வலைகள்
என்னுள் எல்லாம் நடுங்க ஒப்புவித்தபடி
வெற்றுக்கால்களுடன்
கருச்சுமந்து பாவமன்னிப்புக்கோரியபடி
வெள்ளத்தின் விளிம்பில் பிரார்த்திக்கிறேன்
ஒய்வதற்கு முன்னால் நாம் எவ்வளவு ஓடுகிறோம்
நவ்ரியில்
நமது பேரணியின் மீது
நிழலாய்ப் பறந்த ஹெலிகாப்பரை நினைவு
கூர்கிறேன் பயந்த
ஆனால் பின்வாங்கவே முசயாத காலடிகள்

# கனடாவில் பலிக்களம்........

ஈழ மண்ணிலே பல்லோரின் பாராட்டுக்களையும் பெற்ற பலிக்களம் என்ற பக்திநாடகம் கனடாவில் திருமறைக் கலாமன்றத்தினால் இவ்வாண்டு சித்திரைத் திங்கள் முப்பதாம் முப்பத்தோராம் திகதிகளில் மேடையேற்றப்பட்டது. புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் புண்பட்ட நெஞ்சங்களுக்கு இது ஓர் நினைவு நிகழ்வாகவும், கிறிஸ்துவின் திருப்பாடுகளைத் தம் தாய் மொழிமூலம் பார்த்து, கேட்டு அனுபவித்த அரிய சந்தர்ப்பமாகவும் அமைந்துவிட்டதென்றால் ஆச்சரியமில்லை. கனடாவிலும் பாராட்டுகள் குவிந்த வண்ணம் இருந்தன. அவற்றில் சில:

பலிக்களம் தமிழ் ஈழத்தில் வெளிவந்த முதலாவது வீடியோப் படமாகும். இருபது ஆண்டுகளுக்கு மேல் நம்மில் பலரால் கேட்கப்பட்டபோதிலும் பக்தியையும் உணர்ச்சியையும் தட்டியெழுப்பியது என்று கூறினால் மிகையாகாது.

### கனகத்துதன் சித்திரை - 1996

ஏகமொத்தம் பலிக்களம் ஒரு யேசு காவியம் என்பதையும்விடப் பைந்தமிழ்க் கலைக்களம் என்றால் பொருந்தும்.

### நம் நாடு 11 - 04 -1996 "தேன்மொழி"

மரியசேவியர் என்னும் வண பிதா. சவரிமுத்து கிறீஸ்தவம், தமிழுக்குத் தந்த இன்னொரு முத்து.

### உலகம் சித்திரை -19 -1996 "நிருபன்"

சிறப்பான பக்தி நிறைந்த பரிசுத்த காவியத்தை நிஜமாகப் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி எம் மனதைத் தொடவைத்த இயக்குனர் பேராசிரியர் மரியசேவியர் அடிகளுக்குக் கனடா வாழ் எம் மக்கள் நன்றிக்கடன் பட்டுள்ளனர்.

### செந்தாமரை "சொர்னலிங்கம்"

கலை நுணுக்கங்களை நன்கு புரிந்து கொண்ட ஓர் அற்புத இயக்குனரின் நெறியாள்கையில் 87க்கு மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு மேடையேறப்பட்ட இயேசுபிரானின் வாழ்வையும், மரணத்தையும், உயிர்ப்பையும் நேரடியாக கண்ட ஒரு மனநிறைவை தந்தமை பாராட்டுக்குரியது.

### கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

இருபத்திநான்கு மணிநேர வானொலிமூலம் முப்பதாம் திகதி நடைபெற்ற பலிக்களம் நாடகத்தை நேரடி ஒலிபரப்புச் செய்து மக்கள் மனதில் திருப்பாடுகளைத் தியானிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது.

### கீதவாணி

பக்த்தி உணர்ச்சி ஊட்டும் மாபெரும் காவியம்......

### ரேடியோ ஏசியா

கனடாவில் பெருந்தொகையான கலைஞர்கள் பங்குபற்றிய இசை உரை நாடகம்

50/2

# KALAIMUGAM


Publisher :- Thirumari Kalamanram

Editor-in-Chief:- Prof. N. M. Saveri Adikal

Co - Editor:- P. S.. Allfred (Jaffna)

Associate Editor:- M. Sam Pradeepan

Managing Editor:- Selvam

Art (cover):- Karuna

Lay Out & Printing:- Lucky Print


## THIRUMARI KALAMANRAM INTERNATIONAL


**258 Main Street,**
**Jaffna, Sri Lanka**

**INTERNATIONAL**
**Victor D. Thiruchelvam**
37 Fraaserton Crescent
Scarborough, Ontario
M1J IS9
**CANADA**

**M. A. J. Jesudasan**
2175 Victoria Park Avenue
Suite 201
Scarborough, Ontario
M1R IV6
**CANADA**

**A. Peter**
Hotel Imperrial, Room 302
14/14 A1 Duplication Road
Bambalapitya, COLOMBO-4
**SRI LANKA**

**T. Thulasi Manohari**
Venu Nadam RCC Flats
4, 2nd Floor
Thiruvalluvar Koil
Mylapore Madras 4
**SOUTH INDIA**

**A. Thiruchelvam**
Putzdorfer Str. 31
52457 Alldenhoven
**GERMANY**

**G. Keethapongalam**
Birkehegnet 240
4700 NAESTVED
**DENMARK**

**S. Manivasagan**
Van Gogh Street 55
2512 TB Den Hagg
**NEDERLAND**

**A. V. Dammien**
1, Impssse De La Motte
93300 Aubervilliers
**FRANCE**


**Sylvia Leisi**
Postfach 52
CH-4419 LUPSINGEN
**SWITZERLAND**

**Basil Inbarajan**
164 Burntash Lane
Bromley BR1 5BU, KENT
**ENGLAND**

**F. Anthony Newman**
Lofsurdhogda, 21B
1281 OSLO
**NORWAY**

**Michacl Theresa**
41 Via Cavour
00044 Frascati
ROMAN
**ITALY**

**Pathmini Thambynayagam**
159 North St.
Ridgefield
CT 06877
**U. S. A.**



Published By:
THIRUMARAI KALAMANRAM
Jaffna, Sri Lanka

LUCKY Print, Toronto (416) 261-2348
Design by Karuna (416) 429-8586